
மே
2014
ரூ.25/-
இறக்கை: 3 இறகு : 5

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்



## கோச்சடையான்

கட்டுரை: இராமசுப்பிரமணியன், முகிலன், இன்குலாப், ரூபன் சிவராஜா, ஜோ டி குரூஸ், நித்தியபாரதி

கவிதை: மதுரை சரவணன், ம.நா.வெண்முகில், தமிழரசி, தமிழ்ப்பித்தன், பூரணா, விச்வநாதன்

சிறுகதை: ராம் முரளி, அமீபா, கலைச்செல்வி. நூல் விமர்சனம்: லெனின் மதிவானம், இரமேஷ் அரசியல்: ஏகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில்
சித்திரை
7ஆம் நாள்.
தமிழிலே
பூசை,
வழிபாடு
வாழ்வியல்
சடங்களுக்கான
பயிற்சி
நடைபெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை 3 இறகு 5

திருவள்ளுவராண்டு 2045
சித்திரை - வைகாசி மே 2014

வெளியிடுபவர்
ஆசிரியர்
**வி. முத்தையா**

---

ஆசிரியர் குழு
**இரா. எட்வின்**
**நெற்கோ**
**சித்தன்**

---

நெறியாளர்கள்
**கி.பி. அரவிந்தன்**
**ஓவியர் வீர.சந்தானம்**
**டிராட்ஸ்கி மருது**

---



புலம்பெயர் நாடுகளுக்கான தொடர்புக்கு :

கனடா :
**வி. மகேந்திரன்**
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

ஐரோப்பா :
**க. முகுந்தன்**
K. Mukunthan
kmukunthan@gmail.com



காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.


# மக்களே போல்வர் கயவர்

உழைக்கும் மக்களுக்காகக் குரல் கொடுத்த அமைப்புகளும் அதன் வழிகாட்டிகளும் மெலிந்தும் நலிந்துப்போய் நோய்வாய்ப்பட்டுள்ள நிலையில் இப்பொழுதெல்லாம் அவர்கள் வாயைத் திறந்தால் குரல் வருவதில்லை; காற்றுதான் வருகிறது.

காரணம், யாருடைய உயர்வுக்காக அமைப்பு கட்டப்பட்டதோ யாருக்கு வழிகாட்ட குரல் உயர்த்தப்பட்டதோ அவர்களே மெய்யழிந்து நிற்பதன் விளைவு;

தொழிலாளியாய் இருக்கிறபோது எந்தச் சங்கத்தின் உறுப்பினராய் இருக்கவேண்டும்; வாக்காளராய் இருக்கிறபோது எந்த அரசியல் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்கிற தெளிவு;

கூலி உயர்வு கேட்டுப் போராடுகிற உரிமையை உரத்துப் பேசுவதை விடவும் கூலிகொடுக்கும் முதலாளிகளோடும் அதிகாரிகளோடும் 'குசுகுசுப்பாய் குழைந்து நிற்பதில்

நூறுநாள் வேலைத் திட்டத்தில் வேலைக்குச் செல்லாமலே வருகைப் பதிவும் வேலை செய்யாமலே சம்பளமும் பெற்றுவிடுகிற தந்திரம்

எல்லாவுமாய்ச் சேர்ந்து, உயிர்உருக உழைக்கும் மக்களின் உரிமை உணர்வையும் போராட்ட குணத்தையும் அழித்துச் சிதைந்துப்போட்டு விட்டது.

இதற்கெல்லாம் முதன்மையாய் இருப்பவர்கள்,

விளைநிலத்துக்குள்ளே செழித்து நிற்கும் களைச் செடியாய் கலந்துவிட்ட மக்களே போன்ற கயவர்கள் அந்தக் களைச் செடிகளுக்கு நீரூற்றி வளர்ப்பவர்கள் இடைத்தரகுப் பினாமிகள்.

தமிழ்நாட்டுத் தொழிலாளி நாளொன்றுக்கு இருநூறு ரூபாய் கூலி கேட்டால் நூறு ரூபாய்க்கு ராஜஸ்தான் மாநிலத் தொழிலாளி இறக்குமதி செய்யப்படுவான். நாள் கூலியை நூற்றைம்பது ரூபாயாக ராஜஸ்தான் தொழிலாளி உயர்த்திக் கேட்டால், அறுபது ரூபாய் கூலிக்கு பீகாரிலிருந்தும் மேற்கு வங்கத்திலிருந்தும் தொழிலாளி குடும்பங்கள் கூட்டம் கூட்டமாய் கொண்டுவந்து இறக்கப்படும். அந்தத் தொழிலாளிக் குடும்பங்களுக்கு வேலை உத்திரவாதம் இல்லை; சம்பளம் உத்திரவாதம் இல்லை; உயிர் உத்தரவாதம்கூட இல்லை. இதன் மூலம் தமிழ்நாட்டுத் தொழிலாளி புறக்கணிக்கப்படுகிறான்; வெளிமாநிலத் தொழிலாளி சுரண்டப்படுகிறான்.

மொத்தத்தில் முதலாளிமார்களுக்கு தொழிலாளிப் பஞ்சம் எப்போதும் இருப்பதில்லை. ஆனால் உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மட்டும் வாழ்நாள் முழுவதும் தீராப் பஞ்சமாகவே தொடர்கிறதே! விடிவு எப்போது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

**ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 ஆம் தேதியில் 'காக்கைச் சிறகினிலே' அஞ்சல் செய்யப்படுகிறது. 5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய செல்பேசி எண்: 98414 57503.

---

**உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| தனி இதழ் விலை | ரூ. 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 275 |
| இரண்டு ஆண்டு | ரூ. 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. 1250 |
| மாணவர் சந்தா | ரூ. 200 |

(மாணவர்கள். கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

---

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் (வெளிநாடு) | $ 20 |

காசோலைகள், வங்கி வரைவோலைகள். அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660, SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியாடர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

---



தொடர்பு முகவரி :
**காக்கை**
288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.
செல்பேசி: 98414 57503
மின்னஞ்சல் : kaakkaicirakinile@gmail.com


---


இதழ் வடிவமைப்பு :
**விக்னேஷ்**


# சிறகுகளுள்ளே...


8




16




26




32








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரிய முத்துப்பட்டன்

## சாதி மாறி சாமி ஆனவன்

பழங்காலத் தமிழகத்தில், தற்கொலை செய்து கொண்ட இளம் பெண்கள் எல்லாம் 'ஆவி'களாகத் திரிந்துகொண்டிருக்க, கொலை செய்யப்பட்ட ஆண்கள் எல்லாம் 'சாமி'களாகக் கிராமங்களை நிறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி கொலை செய்யப்பட்டு சாமியானவன்தான், ஆரியமுத்துப் பட்டன். பாபனாசம் மலையில், காரையார் அணைக்குச் சற்று கிழக்கே, தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் சொரிமுத்து அய்யன் மற்றும் பட்டன்கோயில்கள் அமைந்துள்ளன. பொதிகை மலையில், இயற்கை எழில் சூழ அமைந் திருக்கும் இந்த கோயில்களுக்கு, ஆண்டு முழுவதுமே மக்கள் வந்து போனாலும், ஆடி அமாவாசை அன்று பல்லாயிரம் மக்கள் இங்கு கூடுவது தனிச்சிறப்பு.

சொரிமுத்து அய்யனோடு, சங்கிலி பூதத்தார், பிரம்மாச்சி அம்மன் கோயில்களும் உள்ளன. இவை எல்லாமே சைவ சாமிகள். சபரிமலை அய்யப்பனின் பூர்வீகம். இதை சொரிமுத்து அய்யன் கோயில் எனச் சொல்வதும் உண்டு. ஒருபுறம் சாய்ந்த தலையும், அதில் உள்ள கொண்டையும் அதனை உறுதிப்படுத்துவது போல் உள்ளன.

மக்களின் பேச்சு வழக்கில், 'அய்யன்' கோயில் என்றே அழைக்கப்படுகிறது. தமிழகத்தின் வடமாவட்டங்களில் பிரபலமான 'அய்யனார்' கோயில் அல்ல இந்த அய்யன் கோயில் என்பதைக் கவனம் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யன் கோயில் வளாகத்திற்கு சற்று வடக்கே ஒரு மேடான பாறையில், மேற்கு நோக்கி அமைந்திருக்கிறது, பட்டன் கோயில். பட்டனுக்கு இருபுறமும், இரண்டு தேவியர் உள்ளனர். நாய் ஒன்றும்கூட சிலையாக உள்ளது.

சொரிமுத்து அய்யன் உள்ளிட்ட மற்ற சாமிகளுக்கு சைவப் படையல் இடப்படுகின்றது. ஆனால், பட்டனுக்கு அசைவப் படையல் இடப்படுகின்றது. அதன் காரணமாகக்கூட, பட்டன் தனிமைப்படுத்தப்பட்டிருக்கலாம். பட்டனுக்கு, வல்லயமும், காலணிகளும் காணிக்கையாகத் தரப்படுகின்றன. ஆடி அமாவாசை கழிந்த பிறகு, பட்டன் கோயிலுக்குச் சென்றால், காணிக்கையாக வந்த காலணிகள், பெரும் எண்ணிக்கையில் குவிந்திருப்பதைக் காணலாம்.

நெல்லை மாவட்ட கிராமங்களில், அனைத்து நாட்டார் தெய்வங்களுக்கும், பங்குனி, சித்திரை மாதங்களில் 'கொடை' நடைபெறுவதுண்டு. அப்போது, பட்டன் கதையை, வில்லுப்பாட்டு கலைஞர்கள் தவறாமல் பாடுவதுண்டு. அப்படி கதை கேட்டவர்களுக்கு பட்டன் ஒரு பிராமணன் எனத் தெரியும்.

பிறப்பால் பிராமணனான பட்டனுக்கு, அசைவப் படையல் ஏன் இடப்படுகிறது, காலணிகள் ஏன் காணிக்கையாகத் தரப்படுகின்றன? போன்ற கேள்விகளுக்கு விடை தேட வேண்டுமானால், பட்டன் கதை தெரிய வேண்டும்.

தென் கேரளத்தில், நெடுமங்காடு அருகே ஆரிய நாட்டில், ஒரு பிராமணக் குடும்பத்தில், எட்டு பட்டன்மார்களில், எட்டாவது பட்டனாகப் பிறந்தவன் முத்துப் பட்டன். அவன் சிறுவயது முதலே அறிவிலும், பண்பிலும் சிறந்து விளங்கினான். அதன் காரணமாகவே முத்துப்பட்டனுக்கும், அவனது அண்ணன்மார்களுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றி, அவ்வப்போது மோதல்களும் ஏற்பட்டன.

ஒருநாள் ஏற்பட்ட மோதலில், கடும் சினம் கொண்ட முத்துப்பட்டன், வீட்டை விட்டு வெளியேறி விட்டான். இலக்கு இன்றி அலைந்து திரிந்தவனை, ராமராசன் என்கிற மன்னன் சந்திக்கிறான். மன்னனுக்கு, முத்துப்பட்டனைப் பிடித்துப் போகவே, அவனை தனது அரண்மனையிலேயே பணியமர்த்திக் கொள்கிறான்.

இதற்கிடையில், ஒரு வசதியான வீட்டில் முத்துப்பட்டனுக்குப் பெண் தருவதாக சொல்கிறார்கள். அந்தப் பெண்ணை, முத்துப்பட்டனுக்கு மணம் பேசுவதன் மூலம், தங்களுக்கும் பெரும் செல்வம் கிடைக்கும் என மற்ற பட்டன்மார்கள் நம்புகிறார்கள். அதன் காரணமாக, அவர்கள் முத்துப்பட்டனைத் தேடிக்கொண்டு, ராமராசன் அரண்மனைக்கு வருகிறார்கள்.

அண்ணன்மார்கள் பேசியதில் சமாதானம் அடைந்த முத்துப்பட்டன், அவர்களுடன் வீடு திரும்புவதற்கு ஒப்புக் கொள்கிறான். மன்னன் ராமராசனும் தடை ஏதும் சொல்லாமல், பரிசில்களும் கொடுத்து, முத்துப்பட்டனை வழி அனுப்புகிறான்.

காட்டு வழியாக நடந்து வந்த அவர்கள், 'அரசடித்துறை', என்னும் இடத்தில், களைப்பு நீங்குவதற்காகத் தங்குகிறார்கள். மீண்டும் பயணத்தைத் தொடங்கும் வேளையில், தான் சற்றுநேரம் கூடுதலாக அங்கே தங்கியிருக்க விரும்புவதால், மற்றவர்களை முன்னே செல்லுமாறு சொல்கிறான் முத்துப்பட்டன். அவர்களும் அதற்குச் சம்மதித்து, ராமராசன் கொடுத்த பரிசில் பொருள்களோடு, விக்கிரமசிங்கபுரத்தை நோக்கிச் செல்கின்றனர்.

அரசடித்துறையில் தனித்திருந்த முத்துப்பட்டன், மனதை மயக்கும் பாடலொன்றைக் கேட்கிறான். அதனால் ஈர்க்கப்பட்டு, பாடல் வந்த திசையை நோக்கிச் செல்கிறான். அங்கே, இரண்டு இளம் பெண்கள் சுள்ளிப் பொறுக்கிக்கொண்டே, பாடிக்கொண்டிருப்பதைக் காண்கிறான். கண்டதும் காதல் கொள்கிறான்.

ஒரு பெண்ணைப் பார்த்த உடன் காதல் கொள்வது ஆண்களின் இயல்புதான். என்றாலும், பார்க்கும் பெண்கள் எல்லோர் மீதும் காதல் கொள்வது, மனித இயல்பிற்கு முரண்பாடான ஒரு செயல் என்றே சொல்லாம். அப்படி ஒரு முரண்பட்ட காதல்தான், முத்துப்பட்டனுக்கும் ஏற்பட்டது. தான் பார்த்த பெண்கள் இருவர் மீதும் காதல் கொண்டான். அவர்களைத் திருமணம் செய்ய விரும்பினான். அதை அவர்களிடமே, வெளிப்படையாகக் கூறவும் செய்தான்.

ஆள் நடமாட்டம் இல்லாத காட்டில், ஓர் இளைஞன், அதுவும் மேல்சாதி இளைஞன், திடீரென தங்கள் முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து நின்று, தங்களைக் காதலிப்பதாகச் சொல்லி, அவர்களைத் திருமணமும் செய்ய விரும்பியதாகச் சொன்னதில், அதிர்ச்சி அடைந்தனர் பெண்கள் இருவரும். உடனடியாக பட்டனது காதலை நிராகரித்த தோடு, தங்களைப் பின்தொடர வேண்டாம் என அவனை எச்சரித்துவிட்டு, தங்களுக்குத் தெரிந்த குறுக்கு வழியில் வீட்டை அடைந்து விட்டனர்.

பொம்மக்கா, திம்மக்கா என்கிற அந்தப் பெண்கள், அருந்ததியர் இனத்தைச் சேர்ந்தவர்கள். வீட்டை அடைந்தபிறகு, தங்கள் தந்தை வாலப்பகடையிடம், காட்டில் நடந்த நிகழ்வை பதற்றம் குறையாமலே சொல்கின்றனர். அதனைக் கேட்டு ஆத்திரம் அடைந்த வாலப்பகடை, தனது வல்லயத்தைத் தூக்கிக் கொண்டு, முத்துப்பட்டனைத் தேடி காட்டிற்குள் ஓடுகிறான்.

வழி தெரியாது, காட்டில் அலைந்து திரிந்த முத்துப்பட்டன் ஓரிடத்தில் மயங்கிக் கிடக்கிறான். அவன் யாரென்று தெரியாமலே, அவனுக்கு மயக்கம் தெளிவிக்கிறான் வாலப்பகடை. மயக்கம் தெளிந்த பிறகு, தான் தேடி வந்த இளைஞன் அவனே என அறிந்த வாலப்பகடை, முத்துப்பட்டனைத் தாக்க முற்படுகிறான்.

எதிர்த்தாக்குதல் நடத்தாத முத்துப் பட்டன், உண்மையிலேயே அந்த இரு பெண்களையும் நேசிப்பதாகவும், அவர்களை மணம் செய்ய விரும்புவதாகவும் வாலப் பகடையிடம் கூறுகிறான். முத்துப்பட்டன் மேல்சாதி இளைஞன் என்பதால், வாலப்பகடை மறுக்கிறான். எத்தனை எடுத்துச் சொல்லியும், முத்துப்பட்டன் தனது முடிவில் உறுதியாக இருப்பதால், அவனைத் தவிர்க்கும் நோக்கத்தோடு, அவனுக்கு இரண்டு நிபந்தனைகளை விதிக்கிறான் வாலப்பகடை.

முதல் நிபந்தனையாக, முத்துப்பட்டன், அவனது பூநூலையும், குடுமியையும் அறுத்தெறிய வேண்டும். இரண்டாவதாக, மாட்டுத் தோலில் அவனே 'செருப்பு' செய்து கால்களில் அணிந்து கொண்டு 'உள்ளும் புறமும் ஓர் அருந்ததியனாக' மாறி, நாற்பது தினங்களுக்குள் வரவேண்டும். அப்படி வந்தால், தனது இரு பெண்களையும் முத்துப்பட்டனுக்கு மணம் செய்து வைப்பதாக உறுதி கூறுகிறான், வாலப்பகடை. நிபந்தனைகளை முத்துப்பட்டன் ஏற்கிறான்.

வாலப்பகடை சொன்னது போலவே, குடுமி, பூநூலை அறுத்து எறிந்துவிட்டு, மாட்டுத்தோலில் தானே செருப்பு செய்து கால்களில் அணிந்துகொண்டு, உள்ளும் புறமும் ஓர் அருந்ததியனாகவே மாறி, நாற்பது தினங்களுக்குள்ளாகவே வாலப்பகடை முன் வந்து நின்றான் முத்துப்பட்டன்.

பெயரை மட்டும் மாற்றிக்கொண்டு, எளிய சடங்குகள் மூலம் மதம் மாறிவிடலாம். அது எளிதும்கூட. ஆனால், அந்தணனாக இருந்த முத்துப்பட்டன், அருந்ததியனாகவே மாறிவந்து நின்றது, நம்மை வியக்க வைக்கும் 'சாதி மாற்றம்' என்று சொல்லலாம் தானே! பெண்கள் மீது கொண்ட ஆசை மட்டுமே அதற்குக் காரணமாக இருந்திருக்க முடியாது. அதற்கும் அப்பாற்பட்ட முற்போக்கு எண்ணங்கள் இருந்ததால் மட்டுமே, முத்துப்பட்டனுக்கு இது சாத்தியமாயிற்று என நம்பலாம்.

முத்துப்பட்டனின் உறுதியைக் கண்டு வியந்த வாலப்பகடை, தனது வாக்குறுதியைக் காப்பாற்றும் விதத்தில், பொம்மக்கா, திம்மக்கா என்கிற இரண்டு மகள்களையும் முத்துப்பட்டனுக்கு மணம் செய்து வைக்கிறான். திருமணம் முடிந்த பிறகு, முத்துப்பட்டன் அங்கே, அவர்களுடனேயே தங்கி விடுகிறான்.

**முதல் நிபந்தனையாக, முத்துப்பட்டன், அவனது பூநூலையும், குடுமியையும் அறுத்தெறிய வேண்டும். இரண்டாவதாக, மாட்டுத் தோலில் அவனே 'செருப்பு' செய்து கால்களில் அணிந்து கொண்டு 'உள்ளும் புறமும் ஓர் அருந்ததியனாக' மாறி, நாற்பது தினங்களுக்குள் வரவேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில், ஒருநாள் வாலப் பகடையின் 'பசுக்கிடையை' (காட்டில் இரவு நேரங்களில், வனவிலங்குகளிடமிருந்து காப்பதற்காக, சுற்றிலும் முள்வேலி அமைத்து அதற்குள் அடைக்கப்பட்டிருக்கும் பசுக்கள்) கள்வர்கள் கவர்ந்து சென்றதாகத் தகவல் வருகிறது. மற்றவர்கள் தடுத்தும் கேட்காமல், தனி ஓர் ஆளாக வல்லயத்தைத் தூக்கிக் கொண்டு, பசுக்களை மீட்க ஓடுகிறான் முத்துப்பட்டன். கூடவே காச்சி நாயும் ஓடுகிறது. (வாலப்பகடையிடம், காச்சி நாய், பூச்சி நாய் என இரண்டு நாய்கள் இருந்ததாக கதை சொல்கிறது). அனைத்துக் கள்வர்களையும் கொன்று, பசுக்களை மீட்கிறான் முத்துப்பட்டன். சண்டை முடிந்ததாக நம்பி கத்தியில் படிந்திருந்த குருதியை, ஓடும் நீரில் குனிந்து கழுவிக் கொண்டிருக்கிறான் முத்துப்பட்டன்.


இதற்கிடையே தனது திருமணத்திற்கு சம்மதம் கேட்க, முத்துப்பட்டன் தனது அண்ணன்மார்களைத் தேடி, விக்கிரமசிங்கபுரம் சென்றிருந்தான். அப்போது, அருந்ததியப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள விருப்பதாக அவன் சொன்ன செய்தியை கேட்ட அண்ணன்மார்கள் அதிர்ச்சி அடைந்தனர். அத்திருமணம் கூடாது எனக் கடுமையாக அவனை எச்சரிக்கவும் செய்தனர். அதையும் மீறித்தான், முத்துப்பட்டன் தான் விரும்பிய அருந்ததியப் பெண்களை மணம் செய்தான். இதனால் கோபம் கொண்டிருந்த முத்துப்பட்டனின் அண்ணன்மார்கள்தான், ஊத்துமலைக் கள்ளன் ஒருவனிடம் பேசி பசுக்கிடையைக் கவர்ந்து, முத்துப்பட்டனை சண்டைக்கிழுத்து, அவனைக் கொல்லவும் திட்டம் தீட்டியிருந்தனர் என்பதை முத்துப்பட்டன் அறிந்திருக்கவில்லை.

ஓடையில் குனிந்து, கத்தியைக் கழுவிக் கொண்டிருந்த முத்துப்பட்டனை, முன்கூட்டியே திட்டமிட்டிருந்தபடி ஒளிந்திருந்த 'சப்பாணி' என்பவன், பின்புறமாக வந்து கத்தியால் ஆழமாகக் குத்திவிடுகிறான். அதிர்ச்சியடைந்த முத்துப்பட்டன், திரும்பிப் பார்த்து, எதிரில் நின்ற சப்பாணியைத் தனது கத்தியால் குத்திவிட்டு கீழே சாய்கிறான். சப்பாணியும் அதே இடத்தில் கீழே சாய்ந்து உயிர் விடுகிறான் (விக்கிரமசிங்கபுரம் அருகே சிவந்திபுரம் கிராமத்தில் சப்பாணி மாடன் என ஒரு கோயில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது).

முத்துப்பட்டன் கீழே சாய்வதைப் பார்த்த காச்சி நாய் ஓலமிடுகிறது. ஓடிச்சென்று பொம்மக்கா, திம்மக்காவை, பட்டன் சாய்ந்து கிடக்கும் இடத்திற்கு அழைத்து வருகிறது (வாலப்பகடையைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. ஒருவேளை இதற்கு முன்பாகவே இறந்திருக்கக்கூடும்). பொம்மக்காவும், திம்மக்காவும் பட்டன் உடல்மீது விழுந்து கதறி அழுகின்றனர். கதை நடக்கும் இடம், சிங்கம்பட்டி அரசருக்கு சொந்தமான காடு (இன்னும்கூட, சொரிமுத்து அய்யன் மற்றும் பட்டன் கோயில்கள் சிங்கம்பட்டி ஜமீன்வாரிசுகளின் மேற்பார்வையில்தான் உள்ளன). பட்டன் உடலைச் சுமந்துகொண்டு, சகோதரிகள் இருவரும் சிங்கம்பட்டி அரசரிடம் நீதி கேட்கச் செல்கிறார்கள். நீதி கிடைத்ததாகத் தெரியவில்லை.

சிங்கம்பட்டி அரண்மனை முன்பாகவே, தீ வளர்த்து, பொம்மக்காவும், திம்மக்காவும், பட்டன் உடலோடு 'உடன்கட்டை' ஏறியதாக கதை சொல்கிறது. என்றாலும், கதையின் போக்கைக் கூர்ந்து நோக்கினால், நந்தன் ஜோதியானது போல, இவர்களும் 'உடன்கட்டை' ஏற்றப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கவும் இடம் உண்டு.

அன்றைய நடைமுறைப்படி, கொலை செய்யப்பட்ட முத்துப்பட்டன், பொம்மக்கா,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திம்மக்காவோடு சாமியாகிவிட்டான். பட்டன் சாகும்போது, உடன் இருந்த காச்சி நாயும்கூட சிலையாகி விட்டது. அதன் பிறகுதான் வல்லயமும், காலணிகளும் காணிக்கையாக்கப்பட்டிருக்கின்றன.

பட்டனுக்கு, வல்லயம் (மணி கோ(ர்)க் கப்பட்ட ஈட்டி போன்ற போர்க்கருவி) காணிக்கை யாக்கப்பட்டதில் முரண்பாடு எதுவும் இல்லை. ஆனால் பிறப்பால் பிராமணனான பட்டனுக்கு, காலணிகள் காணிக்கையாக்கப்பட்டதற்கு நியாயமான காரணம் வேண்டுமல்லவா? "பட்டன் சாமி, இரவில் வேட்டைக்குப் போகும்போது, போடுவதற்காகவே காலணிகள் அளிக்கப்படுகின்றன" எனச் சொல்லப்படும் காரணம் ஏற்புடையதாக இல்லை.

அப்படியானால், பிறப்பால் பிராமணனான பட்டனுக்கு 'அசைவ'ப் படையல் இடுவதற்கு என்ன காரணம் கூறமுடியும்? முத்துப்பட்டன், தனது அந்தண அடையாளமான குடுமியையும், பூநூலையும் அறுத்தெறிந்ததும், அருந்ததிய அடையாளமாக, மாட்டுத் தோலில் செருப்பு செய்து அணிந்ததும், அவன் 'உள்ளும் புறமும்' அருந்ததியா ன கவே மாறிவிட்டான் என்பதைத்தான் காட்டுகிறது.

அதன் காரணமாகவே, சாமியான பிறகும்கூட, முத்துப்பட்டன் 'அருந்ததிய னாகவே' கருதப்பட்டான். எனவேதான் அவனுக்கு அசைவப்படையல் இடப்பட்டது; காலணிகளும் காணிக்கையாக்கப்பட்டன என்கிற முடிவுக்கு வரவேண்டியதாக உள்ளது. பிறப்பால் அருந்ததியர்களான பொம்மக்காவும், திம்மக்காவும் பட்டனோடு, சாமிகளாக இருப்பது, அதற்கான கூடுதல் காரணமாக இருக்க வாய்ப்பு உள்ளது.

ஆதியில், பட்டன் கோயில், இப்போது இருக்கும் இடத்திலிருந்து, நான்கு அல்லது அய்ந்து கிலோ மீட்டர் தொலைவு கீழே இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அது 'பாடிய பட்டன்' கோயில் எனப்படுகிறது. அங்கிருந்து இப்போது இருக்கும் இடத்திற்கு, எப்போது, யாரால், 'பட்டன்' இடம் பெயர்ந்தான் எனத் தெரியவில்லை.

பட்டன் கதையில், ஓர் அந்தண இளைஞன், அருந்ததியப் பெண்களை மணந்தான். அதற்காகவே அருந்ததியனாக மாறினான் என்பதை அவமானமாகக் கருதிய பிற்காலப் பார்ப்பனர்கள், பொம்மக்கா, திம்மக்கா ஆகிய இருவரும் முற்பிறவியில் மேல்லோகத்தைச் சேர்ந்த உயர்குடி மகளிர் என கதையைத் திரித்து விட்டதாக நம்பப்படுகிறது. அதன் பிறகுதான் முத்துப்பட்டன், ஆரிய முத்துப்பட்டனாக மாறியிருக்கக் கூடும்.

குமரி மாவட்டம், நாஞ்சில் நாட்டுப் பகுதிகளான தோவாளை, ஆரல்வாய்மொழி போன்ற ஊர்களைச் சேர்ந்த நாஞ்சில் நாட்டு வெள்ளாளர்களுக்கு, முத்துப்பட்டன் குலதெய்வமாக விளங்குகிறான். ஆடி அமாவாசை அன்று, பட்டனுக்கு முதல் அசைவப் படையில் இடும் உரிமை, தோவாளை நாஞ்சில்நாட்டு வெள்ளாளர் சமூகத்திற் கானது எனவும், அய்யன் கோயிலில் உள்ள கட்டடங்களில் தங்குவதற்கு, அவர்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது எனவும், மற்றவர்கள் காடுகளில் செடி, கொடிகளைத் திருத்தி, கூடாரம் அமைத்துத்தான் தங்க வேண்டும் எனவும், தோவாளையைச் சேர்ந்த நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் சமூகத்தின் பெரியவர்கள் சொல்கிறார்கள்.

பட்டன் கோயிலில் இருந்து, ஏறத்தாழ நூற்று அய்ம்பது கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் உள்ள தோவாளையில் வாழும் நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் சமூகத்திற்கு எப்படி பட்டன் கோயிலோடு தொடர்பு ஏற்பட்டது என்பதும், 'முதல் மரியாதை' முக்கியத்துவம் எப்படி கிடைத்தது என்பதும் ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அப்படி ஓர் ஆய்வு மேற்கொண்டால், நாஞ் சில் நாட்டு வெள்ளாளர் வரலாறு பற்றிய புதிய தகவல்கள் கிடைக்கக்கூடும்.

திருநெல்வேலியிலிருந்து, காரையார் செல்லும் பேருந்தில் ஏறினால், சொரிமுத்து அய்யன், பட்டன் கோயில்களுக்குச் செல்ல முடியும். காரையார் அணைக்குக் கீழே, தாமிரபரணியின் குறுக்கே பாலம் கட்டப்பட்டுவிட்டதால், அனைத்து வாகனங்களிலும், நேரடியாகவே கோயிலை அடையலாம். அகத்தியர் அருவியில் நீராடி, காரையார் அணையில் படகு சவாரி செய்து என பாபனாசம் மலையின் இயற்கை எழிலைக் கண்டு களிப்பதோடு, அய்யன், பட்டன் கோயில்களையும் கண்டு வரலாம். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோச்சடையான்

தமிழகத்திலும் புதுவையிலும் வாக்குப்பதிவு முடிந்துவிட்டது. தேர்தல் முடிவு தெரிவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் காத்திருக்க வேண்டும். இடையில் இதுப்பற்றி பேசுவதால், வாக்காளர்களின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தி, தேர்தல் முடிவை மாற்றிவிடும் என்றெல்லாம் யாரும் சொல்வதற்கு இடமில்லை.

அதுஎது? குஜராத் முதல்வரும், வெற்றி பெற்றால் இவர்தான் பிரதமர் என்று பா.ஜ.க. முன் மொழிந்திருக்கும் வேட்பாளருமான நரேந்திர மோடி, தமிழகத்தின் "உச்ச நட்சத்திரமாக" கருதப்படும் நடிகர் ரஜினி காந்த்தை, இரண்டு வாரங்களுக்கு முன்பு இல்லம் தேடி வந்து சந்தித்தார்.

மோடி, ரஜினியின் நண்பராம்; நல்லது. ரஜினி உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது மருத்துவமனைக்கு வந்து பார்த்ததோடு, பின்னர் வாரம் ஒரு முறை தொலைபேசியில் நலம் விசாரித்தாராம். மிக நல்லது. ரஜினி இல்லத்தில் தேநீர் அருந்துவது அவரது நீண்ட நாள் ஆசையாம். நெருங்கிய நண்பரென்றால், இருக்காதா! வேட்டி, சட்டையில் வந்த மோடி, தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்துவிட்டு, தேநீர் அருந்தி மகிழ்ந்தாராம்.

இல்லத்துக்கு வெளியே குழுமியிருந்த பத்திரிகையாளர்களிடம் ரஜினியே சொன்ன தகவல்கள் இவை. தொடர்ந்து சொல்கிறார்:

"மோடி வலிமையான தலைவர். தலைசிறந்த நிர்வாகி. அவர் மனத்தில் என்ன நினைத்துள்ளாரோ அதில் வெற்றி பெற வாழ்த்துத் தெரிவித்தேன்." கடைசியில் ரஜினி இப்படி முடிக்கிறார்: "இந்தச் சந்திப்பில் அரசியல் இல்லை!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்தது வரை சரி. நட்புரிமை நிறைந்த இருவரிடைப் பகிர்தல் என்பதாகவே புரிந்துகொள்வோம். மேலும், வந்தாரை வாழவைக்கும் தமிழ்ப் பரப்பில் வாழ்பவர்கள் நாம்.

இந்தச் சந்திப்பில் அரசியல் இல்லை என்று ரஜினி சொன்னதை எப்படிப் புரிந்துகொள்வது?

பிறழாத மனத்துடன், துருவித் துருவி யோசித்தாலும் அப்படியே நம்ப மனம் ஒப்பாது. ஆனால்,"அப்படியே" தமிழகம் நம்ப வேண்டுமென்று ரஜினி எதிர்பார்க்கிறார்.

ரஜினி,மோடி சந்திப்பின்போது திரண்ட பத்திரிகையாளர்களை, வாகனம் நிறுத்தும் ஓரிடத்தில் ஒதுக்கி, தடுத்து நிறுத்திவிட்டது காவல்துறை. புகைப்படக்காரர்கள் ஆவலோடு காத்திருக்க, ரஜினி இல்லத்துக்குள் மோடி சென்ற சில நிமிடங்களில், பா.ஜ.க முகநூல் மற்றும் இதர சமூக ஊடகத் தளங்களில் இருவரும் இணைந்திருக்கும் புகைப்படம் பதிவேற்றம் செய்யப்படுகிறது. காத்திருந்த பத்திரிகையாளர்கள், அலைபேசியிலும் திறன்பேசியிலும் படம் பார்த்து அதிர்ந்து போகிறார்கள். அப்படியான பத்திரிகையாளர்

**ரஜினி, மகாராஷ்டிரத்தில் பிறந்தவர். கர்நாடகத்தில் வளர்ந்தவர். ரஜினியின் கெய்க்வாட் (ரஜினியின் உண்மையான பெயர் சிவாஜி ராவ் கெய்க்வாட்) பிரிவைச் சேர்ந்தவர்கள் குஜராத்தில் கணிசமாக இருக்கிறார்கள். இப்படியாகப் பலவாறாக யோசித்துத்தான், மோடியே ரஜினியை நாடி வந்திருக்கிறார் என்று ஊடகப் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒவ்வொரு பட வெளியீட்டுக்கு முன்பும், அரசியலுக்கு நெருக்கமாக வருவது போன்ற தோற்றத்தைப் பரபரப்பாகக் கிளப்புவார் ரஜினி; அல்லது ஊடகங்கள் அவ்வாறு கிளப்புவதற்கு இவரே ஏதேனும் "இடுபொருள்" அளிப்பார். அவரே நேரிடையாக அன்றி, அவர் தரப்பிலிருந்தும் அளிக்கப்படும்.**

ஒருவரே இதை இணையத்தில் பதிவு செய்திருக்கிறார்.

ரஜினியை சந்தித்துவிட்டு நேராக மீனம்பாக்கம் கூட்டத்திற்கு மோடி செல்கிறார். அங்கே, இல்லத்திற்கு வெளியே ரஜினி பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி படித்துக் காட்டப்படுகிறது.

ஏற்கெனவே வண்டலூரில் பிரசாரம் செய்துவிட்ட மோடி, இப்போது மீனம்பாக்கத்தில் பேச வேண்டிய அவசியம் என்ன? இது ரஜினிக்காகவே வந்தது போலத்தானிருக்கிறது என அரசியல் வட்டாரத்தில் ஒருதரப்பினர் குரல் ஒலிக்கிறது.

மோடி, ரஜினி சந்திப்பு அரசியல் ரீதியாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பா.ஜ.க.வின் பரிச்சயமான தமிழக முகங்களில் ஒருவரான வானதி சீனிவாசன் சொல்கிறார்:

கன்னியாகுமரியில் போட்டியிடும் பா.ஜ.க தலைவர் பொன். ராதா கிருஷ்ணனைச் சந்தித்து, மாலை அணிவித்து, பா.ஜ.க.வுக்கு ஆதரவாக வீடு, வீடாகச் சென்று பிரசாரம் செய்யப்போவதாக ரஜினி ரசிகர்கள் அறிவிக்கிறார்கள். படத்துடன் செய்தி வெளியாகிறது.

வாக்குப் பதிவுக்குச் சில தினங்களுக்கு முன்பு, பெரம்பலூர் தொகுதியில் போட்டியிடும் இந்திய ஜனநாயகக் கட்சி (ஐ.ஜே.கே) வேட்பாளர் பச்சைமுத்துவுக்கு ரஜினி இல்லத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்ததாகவும், "உங்களைப் போன்ற கல்வியாளர்கள் அரசியலுக்கு வந்து நல்லது செய்ய வேண்டும்" என்று ரஜினி வாழ்த்தியதாகவும் செய்தி பதிவாகிறது. பச்சைமுத்து கட்சி பா.ஜ.க கூட்டணியில்.

மோடியோ அல்லது பா.ஜ.க தரப்போ ரஜினியை சந்தித்ததில் அரசியல் நோக்கமில்லை என்று மறுக்க முற்படவில்லை. அவர்கள் தெளிவாகவே இருந்திருக்கிறார்கள்.

ரஜினி, மகாராஷ்டிரத்தில் பிறந்தவர். கர்நாடகத்தில் வளர்ந்தவர். ரஜினியின் கெய்க்வாட் (ரஜினியின் உண்மையான பெயர் சிவாஜி ராவ் கெய்க்வாட்) பிரிவைச் சேர்ந்தவர்கள் குஜராத்தில் கணிசமாக இருக்கிறார்கள். இப்படியாகப் பலவாறாக யோசித்துத்தான், மோடியே ரஜினியை நாடி வந்திருக்கிறார் என்று ஊடகப் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால், இந்தச் சந்திப்பில் அரசியல் இல்லை என்ற கூற்றுக்கு மாறாகவே ரஜினி தரப்பு அசைவுகள் இருக்கின்றன.

2004 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவிப்பதாக வெளிப்படையாக அறிவித்த ரஜினி, தான் அக்கூட்டணி வேட்பாளருக்கே வாக்களித்ததாக பகிரங்கமாகக் கூறினார் (அத்தேர்தலில் பா.ஜ.க. படுதோல்வி கண்டது). அதன் இயல்பான தொடர்ச்சியாகவே, பத்தாண்டுகளுக்குப் பிறகு, ரஜினி வேறு வடிவில் வெளிப்பட்டிருக்கிறார் என்பதையே இப்போதைய அசைவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

ஒருவார இதழ் பேட்டியில், "என் கணவர் என்ன கறிவேப்பிலையா.." என்று லதா ரஜினிகாந்த் கேட்டிருப்பதாக, அதைப் படித்த நண்பர் ஒருவர் சொன்னார். அப்படியெனில், தமிழக மக்கள் என்ன கிள்ளுக்கீரையா என்று லதாவை நோக்கிய கேள்வி உரத்துக் கிளம்பவும் சாத்தியமிருக்கிறது.

1996 மற்றும் 1998ஆம் ஆண்டுகளில், தேர்தல் நேரத்தில் ரஜினி "வாய்ஸ்" (ஆதரவுக் குரல்) விடுத்தார். அவர் ஆதரவளித்த கட்சிகள் வெற்றிபெற்றன. அதற்கு அந்தந்த ஆண்டுகளில் நிலவிய தனித்த அரசியல் சூழலும் முக்கியக் காரணம் என்பதை தமிழகக் களம் தெரிந்த பார்வையாளர்கள் அறிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1999 தேர்தலில் ரஜினி அமைதி காத்தார். "வாய்ஸ்" இல்லை. விடுத்தால், தமிழக அரசியல் களத்தில், ஊடகங்களாலும், பல அணியினரின் நிகழ், எதிர்கால நலன் கருதியும், ரஜினியின் உள்ளோசை பாற்பட்டும், அதுவரை எழுப்பி நிறுத்திய, அடிப்படையற்ற "பெரும் பிம்பம்" நொறுங்கி விழும் என்பது அவருக்குத் தெரியும்.

முன்னர், "வள்ளி" படத்தில் ரசிகர்களுக்கு நல்லொழுக்க "அறிவுரை" கூறினார். படம் தோல்வி. பின்னர், ரஜினியின் சொந்தக் கதை இலாகாவில் தயாரான "பாபா" படத்தில் தனது ஆன்மிகப் பாதையை வெளிப்படுத்தினார். படம், படுதோல்வி. இந்தப் படத்துக்கு வசனம் எழுதியவர் பிரபல எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த வாரம் வெளியாகவிருப்பதாக கடந்த வாரம் ஹைதராபாத் நகரில், அறிவிக்கப்பட்டிருக்கும் "கோச்சடையான்" முன்னோட்டக் காட்சி வெளியீட்டு நிகழ்ச்சியில், "பாபா ஆன்மிகப் படம். சந்திரமுகி ஆவிப்படம். ஆன்மிகப் படத்துக்கு பணம் வரவில்லை. ஆவிப் படத்துக்கு பணம் கொட்டியது" என்று தனது ஆதங்கத்தைக் கொட்டியிருக்கிறார் ரஜினி.

"கோச்சடையான்" என்ன படம் என்று தெரியவில்லை. 6 மொழிகளில் ஆயிரக்கணக்கான திரையரங்குகளில் வெளியாகவிருக்கிறது. ரஜினியின் மகள் சௌந்தர்யாவே இயக்கியிருக்கிறார். அது "பொம்மைப் படம்" என்று ரசிகர்கள் மத்தியில் பேச்சு உலா வருவதாக ஒரு ரசிகரே சொன்னார். வெளிவந்தால்தான் உண்மை தெரியும்.

முதன்முதலில் "வாய்ஸ்" விட்டதற்கு கிடைத்த அமோக வரவேற்பைத் தொடர்ந்து, ரஜினி அவர் சார்ந்து, அவருக்குள்ளேயே, அவரே ஒரு "பெரும் பிம்பம்" கட்டமைத்தார். வேளா வேளைக்கு ஆராதனைகள் செய்து இன்று வரை அதைக் கட்டிக் காப்பாற்றி வருகிறார். அதன் பொருட்டே, அவர் படங்களில், குறிப்பிட்ட காலகட்டத்துக்குப் பிறகு, "பஞ்ச் டயலாக்" என அறியப்பட்ட சொடுக்கு வசனங்கள் கட்டாயமாக இடம் பெற்றன. ஆனால் முன்கூட்டியே அந்த மனநிலைக்கு அவர் தயாராக்கப்பட்டிருந்தார்.

"முத்து" படம் (1995) வெளிவருவதற்கு முன்பே, ரஜினியும் ஆர்.எம். வீரப்பனும் இணைந்து புதிய கட்சி தொடங்கப் போகிறார்கள் என்று பேச்சு அடிபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் படத்தில், ரஜினி அரண்மனை நோக்கி நடந்து வரும் காட்சியில், வில்லன் இடைமறித்து, எங்கே வந்தாய் என்று கேட்பார். அதற்கு வரவேண்டிய இடத்திற்கு வந்து கொண்டிருக்கிறேன் (அதாவது அரண்மனைக்கு... அது அவருக்கு உரியதாம்) என்று சொடுக்கு வசனம் பேசுவதாக, படம் வெளிவருவதற்கு முன்பே பரபரப்புக் காட்சியாக ஊடகங்களில் கசியவிடப் பட்டது.

அதிலிருந்து ஒவ்வொரு பட வெளி யீட்டுக்கு முன்பும், அரசியலுக்கு நெருக்கமாக வருவதுபோன்றதோற்றத்தைப் பரபரப்பாகக் கிளப்புவார் ரஜினி; அல்லது ஊடகங்கள் அவ்வாறு கிளப்புவதற்கு இவரே ஏதேனும் "இடுபொருள்" அளிப்பார். அவரே நேரிடையாக அன்றி, அவர் தரப்பிலிருந்தும் அளிக்கப்படும்.

இவருக்குப் பிறகு அரசியல் நாட்டத்தை வெளிப்படுத்திய நடிகர் விஜயகாந்த், ஒரு கட்டத்தில் பகிரங்கமாகக் களத்தில் குதித்தார். உள்ளாட்சித் தேர்தல்களில் கிடைத்த வெற்றி அவரைக் கவனத்திற்குரியவராக்கியது. தொடர்ந்து தளராமல் பயணித்த விஜயகாந்த், தி.மு.க.வை பின்னுக்குத் தள்ளி, கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைவர் என்ற கௌரவத்தையும் எட்டினார்.

> **தனது வணிக நலனை உறுதி செய்ய அரசியல் உத்திகளைக் கையாளட்டும் அவர். அதே போன்று அரசியல் கனவுகளை நனவாக்க திரைப்படத்தைப் பயன்படுத்தட்டும். ஆனால் எல்லாவற்றுக்கும் அதற்குரிய உழைப்பு வேண்டும். ரஜினி, நோகாமல் நொங்கு தின்ன ஆசைப்படுகிறார். உட்கார வளையாத மனிதனுக்கு இருக்கை எப்படிச் சாத்தியம்?**

தனக்குப் பிறகு வந்து, தன்னையே கடந்துசென்று, இப்போது தானே மலைக்கும் நிலையில் விஜயகாந்த் இருப்பது ரஜினிக்குள் அதிர்வுகளை ஏற்படுத்ததானே செய்யும். மேலும் இந்த முறை, அதிமுக தவிர, அனைத்துக் கட்சிகளும் விஜயகாந்த்துடன் கூட்டணி வைக்க கடைசி வரை முயன்றன. இறுதியில், பா.ஜ.க அணியில் பிரதானக் கூட்டாளியாக இடம்பெற்றார். வாக்கு வங்கி ரீதியாக அதிக சதவிகிதத்தைக் கொண்டிருப்பதால், அரசியலில் அவரைவிட மூத்தவரான வைகோவை நகர்த்திவிட்டு, மோடிக்கு அடுத்து மேடையில் அமர்ந்தார். இந்தக் காட்சிகளெல்லாம், ரஜினியின் மனத்துக்குள் கனத்த அசைவுகளை உண்டாக்கியிருக்கும்.


தேர்தல் கூட்டணிக் காட்சிகளை யெல்லாம் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ரஜினி, தனது "கோச்சடையான்" வெளியீட்டை ஒட்டி வழக்கமான உத்தியைக் கையாண்டிருக்கிறார். தன்னுள் உறைந்து படர்ந்த கனவுப் புள்ளியை விஜயகாந்த் வேகமாக நெருங்குவது போன்ற உணர்வு ஒருபக்கம். மகள் இயக்கத்தில் பல்வேறு இடையூறுகளைத் தாண்டி வெளிவரும் "கோச்சடையான்" திரைப்படத்தை எப்படியாவது வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்கிற முனைப்பு இன்னொரு பக்கம். மோடியின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றியிருக்கிறார் ரஜினி.

தனது வணிக நலனை உறுதி செய்ய அரசியல் உத்திகளைக் கையாளட்டும் அவர். அதே போன்று அரசியல் கனவுகளை நனவாக்க திரைப்படத்தைப் பயன்படுத்தட்டும். ஆனால் எல்லாவற்றுக்கும் அதற்குரிய உழைப்பு வேண்டும். ரஜினி, நோகாமல் நொங்கு தின்ன ஆசைப்படுகிறார். உட்கார வளையாத மனிதனுக்கு இருக்கை எப்படிச் சாத்தியம்?

தமிழகம் முழுவதும் வெயில் பாராமல், நேரம் பாராமல் வாகனத்தில் சுற்றிச் சுழன்று விஜயகாந்த் பிரசாரம் செய்தார். விமர்சனங்களைப் பொருட்படுத்தாமல், கூடியிருக்கும் மக்களுடன் இயல்பாக உறவாடிப் பேசினார். இன்னொரு பக்கம், அவருடைய மனைவி பிரேமலதா, விளைந்த மேடைப் பேச்சாளருக்குரிய தொனியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புள்ளிவிவரங்களுடன் பேசினார். தி.மு.க.வுக்காக ஸ்டாலின் தமிழகமெங்கும் 350க்கும் மேற்பட்ட கூட்டங்களில், கையில் ஆதாரக் குறிப்புகளுடன் ஆளும் கட்சிக்கு அறைகூவல் விடுத்திருக்கிறார். 91 வயதிலும் அக்கட்சியின் தலைவர் கருணாநிதி சளைக்காமல் மாநிலம் முழுவதும் பயணித்து முக்கிய இடங்களில் பிரசாரம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். அதிமுக வேட்பாளர்களுக்காக, ஜெயலலிதா ஒரு மாதத்துக்கும் மேலாக வான்வழி சூறாவளிப் பயணம் செய்து, 50க்கும் மேற்பட்ட கூட்டங்களில் முழங்கியிருக்கிறார். அரசியலில் தனக்குரிய உயரம் கிடைத்தபாடில்லை என்றாலும் வைகோ இப்போதும் பம்பரமாய்ச் சுழன்று எண்ணற்ற கூட்டங்களில் பேசியிருக்கிறார். இப்படிப் பட்டியலை நீட்டித்துக் கொண்டே போகலாம்.

அரசியல் எளிதல்ல ரஜினி. அது தேநீர் சந்திப்பில் நாற்காலிகளை நன்கொடையாக வழங்கிவிடாது. அவருக்கு குடும்பமே கட்சி என்பதிலிருந்து குடித்துவிட்டு உளறுகிறார் என்பது வரை கனத்தும் சிறுத்தும் மலிந்தும் பல கணைகளை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும்.

திரைப்பட விழாக்களில், மைபூசப்பட்ட வழுக்கைத் தலையுடன், தெரிவு செய்யப்பட்ட எளிமையான உடையில் தோன்றி, குட்டிக் கதைகள் சொல்லி, சில வேளைகளில், அந்தத் தருணத்துக்கேற்ற சொடுக்கு வசனங்களையும் பேசி பலத்த கரவொலிக்கிடையில் அரங்கத்தை ஈர்ப்பவர் ரஜினி. ரசிகர்கள் மட்டுமன்றி அவர்களைக் கடந்தும் ரஜினியை ரசிப்பவர்கள் இருக்கிறார்கள்.

நதிநீர் இணைப்புக்கு 1 கோடி ரூபாய்; ராகவேந்திரா கல்யாண மண்டபம் நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்பு என்றெல்லாம் அறிவித்தார் ரஜினி. இளைய மகள் சௌந்தர்யா திருமணத்தின்போதுகூட ரசிகர்களுக்குத் தனியாக விருந்து வைப்பேன் என்றார். அதெல்லாம் என்னாச்சு... என்று யாரும் கேட்கவில்லை.

ஒவ்வொரு பிறந்த நாளின்போதும், இமயமலை செல்வதாகவும் தமது இல்லத்துக்கு ரசிகர்கள் வரவேண்டாம் என்றும் அறிக்கை வெளியிட்டுவிட்டு, கிளம்பிவிடுவார்.

வா தலைவா... வழிகாட்டு தலைவாஞ் ஆணையிடு தலைவா... என்றெல்லாம் ரசிகர்கள் பெருஞ் சுவரொட்டிகளை அடித்து ஒட்டி, காத்துக் கிடந்தார்கள். ரஜினி அசையவில்லை. அல்லது அவர்கள் எதிர்பார்க்கும் திசையில் அசைவதற்கு அவரிடம் உறுதியில்லை. ஆனால் அவர்களை அவ்வாறே தக்க வைத்துக்கொள்ள மட்டும் தொடர்ந்து தந்திரக் கலப்புடன் செயல்பட்டு வந்திருக்கிறார். தமிழகம் அறியும்.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகள், தனது ரசிகர்களின் அரசியல் முடிவில் ஆதிக்கம் செலுத்தி தன் விருப்பத்துக்கு வளைக்க முற்பட்டிருக்கிறார்.

ரஜினியின் அக்கால தீவிர ரசிகர்கள் பலரும் இப்போது நடுத்தர வயதை எட்டியிருப்பார்கள். காலமும் வாழ்வின் யதார்த்தமும் அவர்களுக்குள் ஏற்படுத்திய தாக்கம், அவர்கள் அரசியல் முடிவை அவர்களே கையாளும் நிலைக்கு நகர்த்தியிருக்கும். இப்போதும் மறுபடியும் அவர்களைப் பின்னுக்கு இழுக்க முயற்சிக்கிறார் ரஜினி. அவர் இந்த உயரத்தை எட்ட ஆதாரமாக இருந்த ரசிகர்களுக்கு, அவர்கள் தன்னிச்சையாக ஜனநாயக உரிமையை செயல்படுத்தவிடாமல் முட்டுக்கட்டை போடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பக்கம் மோடியுடன் சந்திப்பு. அந்தப் பக்கம், ஜெயா டி.வி.யில் நடிகர் விவேக்குடன் பேட்டி. அரசியல் தெரியாமலா செய்கிறார்?


"சென்னை எக்ஸ்பிரஸ்" என்னும் ஹிந்திப் படத்தில் "சூப்பர் ஸ்டார்" ஷாருக்கான், "லுங்கி டான்ஸ்... லுங்கி டான்ஸ்ஞ்" என்றொரு குத்துப் பாடலைச் சேர்த்து, அதை "தலைவருக்கு சமர்ப்பணம்" (அதாவது ரஜினிக்கு) என்று அறிவித்து, வசூல் பார்த்தார்.

சமீபத்தில் "கோச்சடையான்" பாடல் வெளியீட்டு நிகழ்ச்சியை ஷாருக்கானை சிறப்பு விருந்தினராக அழைத்து நடத்துகிறார் ரஜினி.

"கோச்சடையான்" ஹிந்தியிலும் வெளியாகிறது. அதன் வெற்றியை உறுதி செய்ய வேண்டுமே...! மோடிக்கு தேநீர். ஷாருக்கானுக்கு மேடை.

"சந்திரமுகி" என்றொரு படம் வெளியாகி சக்கை போடு போட்டது. நினைவிருக்கலாம். கிட்டத்தட்ட ரஜினிக்கு புத்துயிர் அளித்த படம். அது முதலில் வடிவேலு படம். பிறகு ஜோதிகா படம். பிறகு வாசு படம். பிறகுதான் ரஜினி படம். பார்த்தவர்கள் உணர்வார்கள். தமிழ்த் திரையுலக வரலாற்றில், தனித்துவம் மிக்க இடத்தைவகிக்கும் வடிவேலு, அரசியல் சூழலில் சிக்கியதால், மூன்றாண்டுகள் திரையுலகால் புறக்கணிக்கப்பட்டார். மீண்டும் அவர் நடித்து சமீபத்தில் வெளியான "தெனாலிராமன்" படத்துக்கு, தெலுங்கு அமைப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து சிக்கல் ஏற்படுத்தினார்கள். சீமானும் பாரதிராஜவும் மட்டும் வடிவேலுவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினார்கள். ரஜினிக்கு தெலுங்கில் செல்வாக்கு உண்டு. மோகன் பாபு நெருங்கிய நண்பர். அவர் நினைத்திருந்தால், வடிவேலுக்கு நேர்ந்த சிக்கலை உடனடியாகச் சரிசெய்திருக்கலாம். செய்யவில்லை. குறைந்தபட்சம் ஆதரவுக் குரலாவது கொடுத்திருக்கலாம். அதுவும் இல்லை. "கோச்சடையான்" தெலுங்கிலும் வெளியாகும் தருணம் இது.

ரஜினியே இப்படி என்றால் மோடி லேசுப்பட்டவராகவா இருப்பார்? இந்த முறை கிடைத்த அரிய வாய்ப்பைத் தவறவிட்டுவிடக் கூடாது என்ற தீவிரத்துடன் செயல்பட்டு வருகிறார் மோடி. ஹிந்தி நடிகர் சல்மான் கான்



தனது புதுப்பட வெளியிட்டு நிகழ்ச்சிக்காக சமீபத்தில் குஜராத் சென்றிருந்த போது, மோடி அவரைச் சந்தித்தார். சல்மான் கானுடன் சேர்ந்து, மோடி பட்டம் விட்ட காட்சி ஊடகங்களில் பதிவாயின. சென்னையில் ரஜினி வீட்டில் தேநீர் அருந்திய அடுத்த சில தினங்களில், கோயம்புத்தூரில் நடிகர் விஜய்யை சந்திக்கிறார்.

கடந்த முறை மோடி சென்னை வந்திருந்த போதே என்னைச் சந்திக்க விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் ஹைதராபாத் படப்பிடிப்பில் நான் இருந்ததால் முடியவில்லை. மீண்டும் கோயம்புத்தூர் வரும்போது என்னைச் சந்திக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தைத் தெரிவித்தார்கள். நான் மரியாதை நிமித்தமாக அவரைச் சந்தித்தேன் என்று கூறியிருக்கிறார் விஜய். அவரும் கடைசியில் சொல்கிறார்: இந்தச் சந்திப்பில் எந்த அரசியல் உள்நோக்கமும் கிடையாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009இல் அப்போதைய புதுவை முதல்வர் வைத்தியலிங்கம் முன்னிலையில் தனது ரசிகர்களைக் கூட்டிப் பெரும் நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார் விஜய். பிறகு தில்லி சென்று ராகுல் காந்தியை சந்தித்துவிட்டுத் திரும்பினார். அண்ணா ஹஸாரே தில்லியில் உண்ணாவிரதம் இருந்தபோது, நேரில் சென்று அவர் மேடையில் காட்சியளித்துவிட்டு வந்தார். "காவலன்" படப் பிரச்சினைக்குப் பிறகு தி.மு.கவிலிருந்து தள்ளிப் போனார். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுகவுக்கு ஆதரவளித்தார். தந்தையுடன் சென்று ஜெயலலிதாவைச் சந்தித்தார். "தலைவா" படத் தலைப்புடன் "தலைமை தாங்கும் தருணம்" என்கிற ஒட்டு வரியைச் சேர்த்தார். அதற்குப்பிறகு ஆளும்கட்சி அளித்த "அதிர்ச்சி வைத்தியத்தில்" அடங்கிப் போய், அமைதி காத்தார். இப்போது "கோச்சடையான்" தேநீர் சந்திப்பைப் பார்த்ததும், அவருக்குள்ளும்

**திரைப்பட விழாக்களில், மை பூசப்பட்ட வழுக்கைத் தலையுடன், தெரிவு செய்யப்பட்ட எளிமையான உடையில் தோன்றி, குட்டிக் கதைகள் சொல்லி, சில வேளைகளில், அந்தத் தருணத்துக்கேற்ற சொடுக்கு வசனங்களையும் பேசி பலத்த கரவொலிக்கிடையில் அரங்கத்தை ஈர்ப்பவர் ரஜினி. ரசிகர்கள் மட்டுமன்றி அவர்களைக் கடந்தும் ரஜினியை ரசிப்பவர்கள் இருக்கிறார்கள்.**

கிளர்ச்சி போலும். தனது வழக்கமான பவ்யமான தோற்றத்துடன் மோடியைச் சந்தித்திருக்கிறார்.

இந்தச் சந்திப்பில், விஜய் பக்கத்தில் மோடி அவரது பாணியில் இயல்பாக, கைகளைக் கட்டியவாறு அமர்ந்திருக்கிறார். அந்தப் படத்தைப் போட்டு, "அந்த பயம் இருக்கட்டும்" (மோடியைக் குறிக்கும் வகையில்) என்றுவிஜய்ரசிகர்ஒருவர்முகநூலில் பதிவு செய்திருக்கிறார். இந்த அளவுக்கா நமது கட்சியின் நிலை பொசுங்கிவிட்டது என்று உண்மையான பா.ஜ.க. தொண்டன் கேட்கமாட்டானா...? தாமரைத் தலைமை பதில் சொல்லட்டும்.

இந்தச் சந்திப்பில் அரசியல் இல்லை என்று ரஜினி சொன்னதாகட்டும்; இந்தச் சந்திப்பில் அரசியல் உள்நோக்கம் இல்லை என்றுவிஜய்சொன்னதாகட்டும்...இரண்டுமே தமிழகமக்கள்மீதுதொடுக்கப்பட்ட மலிவினும் மலிவான உளவியல் தாக்குதல். தமிழக மக்களின் அடிப்படை அரசியல் புரிந்துணர்வு மீது அவிழ்த்துவிடப்பட்ட ஏகடியம்.

குவிந்த செல்வம், தும்மலின் அதிர்வில்கூட சிதறிவிடக்கூடாது என்ற முனைப்பிருந்தால், பொதுநலத்தின் மீது உண்மையான நாட்டம் வருவது சாத்தியமா? வாழவைத்த மக்களையே சூது கவிழ்த்து சூறையாடத் தோன்றுமா?


ஹைதராபாதில் நடிகர் பவன் கல்யாண் (தனிக் கட்சித் தொடங்கி, பின்னர் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து மத்திய அமைச்சரான ஆந்திர "சூப்பர் ஸ்டார்" சிரஞ்சீவியின் உடன்பிறப்பு) "ஜன சேனா" என்றொரு கட்சியை சமீபத்தில் தொடங்கியிருக்கிறார். இது மோடியின் சேனையாக இருக்கும் என்றும் முழங்கியிருக்கிறார்.

துணிவும் உறுதியும் இருந்தால் வெளிப்படையாக அரசியல் களத்துக்கு வாருங்கள். இது ஜனநாயக நாடு. யார் வேண்டுமானாலும் வரலாம். இல்லையெனில், உங்களுக்கு விருப்பான கட்சிக்கு கமுக்கமாக வாக்களித்துவிட்டு அமைதி காத்தருளுங்கள்.

அரசியல்இல்லைஎன்றுசொல்லிவிட்டு அரசியல் செய்யாதீர்கள். தமிழக மக்கள் தக்க தருணத்தில், தக்க படிப்பினை தருவார்கள். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெயரிடல் எமது அடையாளம்

1

கடையில் சாமான்கள் வாங்கிச் சுமந்தவாறு வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். எனக்கு அருகாமையில் சென்ற பென்ஸ் கார் திடீரென்று நிறுத்தப்பட என்னவோ ஏதோவெனத் திரும்பிப் பார்க்கிறேன். காரின் மங்கலான சாரதிக் கண்ணாடி கீழிறங்க வணக்கம் மாமா! எப்படி இருக்கிறீங்கள்? அன்பான குரல் மகிழ்வான முகத்திலிருந்து வெளிவர என் முகமும் பிரகாசிக்கிறது.

வணக்கம்!! தம்பி!! நாங்கள் நல்ல சுகமாக இருக்கிறோம். எப்படி புது மண வாழ்க்கை எல்லாம்? என்ன இந்தப் பக்கம்? என ஆச்சரியமும் மகிழ்வும் பொங்கப் பதிலுரைக்கிறேன்.

நாங்கள் நல்லா இருக்கிறோம் மாமா!! நானும் கடைக்குத்தான் வந்தனான். உங் களுடைய பிள்ளைகளும் நல்லா வளர்ந்துட்டாங் கள். அவர்கள் புதிதாக நான் வாங்கிய எனது வீட்டுக்கு அருகாமையில்தான் விளையாட வருவதைப் பார்க்கிறனாங்கள். என்றான் அந்த எனது நண்பனின் மகன்.

ஆகா!! அப்படியா? நல்லது!! காலங்கள் விரைவாகவே கரைந்து செல்கிறதுதானே!! என்றேன் புன்முறுவலோடு.

எங்களுக்குக் குழந்தை கிடைக்கப் போகிறது மாமா!.

ஆகா! ரொம்ப நல்ல செய்தி. வாழ்த் துகள்!! எப்படியிருக்கிறார் உங்கள் துணைவி? என கிட்டச் சென்று கைகுலுக்கினேன்.

**புலம்பெயர்வின் நீட்சியின் தொலைவில் தொலைவுறாது விட்டுச் செல்ல வேண்டியது எமது மூல அடையாளம். வரலாற்றுத் தொடர் ஓட்டத்தில் நாம் எமது எதிர்காலப் பரம்பரையினருக்குக் கையளித்துச் செல்ல வேண்டிய மிகப் பெரிய பொக்கிசம் இது. எமது முகத்தை தெளிவாக எக்காலத்திலும் பதியும் அடையாளக் குறிதான் பெயர். 'பெயர் சொல்லப் பிள்ளை இல்லையே' எனப் பலர் கதறி அழுத ஓலத்திலே வாழும் சமூகம்தானே நம்முடையது. முடிமூடி அணிந்தும் துண்டால் முகத்தை மறைத்தும் இணையவழியில் பெயரிலிகளாகவும் நடமாடுவோரை யாரும் திரும்பிப் பார்ப்பதுண்டோ ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மாமா! நாங்கள் நல்ல மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

பிறக்கப்போகும் குழந்தைக்கும் எமது இனிய வாழ்த்துகள்! குழந்தைக்கு நல்ல தமிழ்ப் பெயர் வையுங்கள்!! என்றேன் மகிழ்வுடன்.

ஓமோம்! நாங்க நல்ல தமிழ்ப் பெயர்தான் வைப்போம். பெண் குழந்தைதான் கிடைத்திருக்கு!

தம்பி! இங்கு தமிழில ஒன்றும் பிரஞ்சுல ஒன்றுமாக இரண்டு பெயரை வைக்கலாம் என்று சொல்லுவாங்கள்... அதுதான்! என்று இழுத்தவாறு அவனது முகத்தை உற்றுப் பார்த்தேன்.

நோ... நோ... நோ..! இதெல்லாம் நம்மிடம் நடக்கவே நடக்காது மாமா! ஒரே பெயர்தான்!! நாங்கள் எப்போதோ தீர்மானித்தும் விட்டோம். நாமொன்றும் குழப்பமான புலம்பெயர்ந்த முதற் தலை முறையினர் இல்லைத்தானே. என்றான். அறுத்துறுத்த வார்த்தைகள் வாயிலிருந்து கிளம்பும்போது அவனது கண்கள் குறுஞ் சிரிப்புச் சிரித்தது.

எனது முகம் பிரகாசமடைந்தது. விடைபெற்றுக் கொண்டு நிமிர்ந்த நடையுடன் வீடு வந்து சேர்ந்தேன்.

2

அண்மையில் தமிழில் உறுதிமொழி வழங்க நடந்த வாழ்க்கைத் துணை ஏற்பு நிகழ்வின் பின்னரான தொலைபேசி உரையாடலில் நண்பன் அவனது உறவுக் காரனுக்கு நடந்த நிகழ்வை விவரித்தான்.

அவர்களது உறவுக்காரரது இல்ல மகிழ்வு நிகழ்வுக்கு அவர்களது பிள்ளைகள் படிக்கும் பாடசாலை பல்லினத் தோழர்களும், உறவுக்காரர்களுடன் பணியாற்றும் பிரஞ் சுகாரர்களும் வந்திருந்தனர். இதில் மாரி றெனே என்ற வயதான அம்மணியும் வந்திருந்தார். வந்தவர் சிறுபிள்ளைகளுடன் சரளமாகப் பழக்கமாகி அனைவரது கவனத்தையும் பெற்றுவிட்டார். அங்கிருந்த குழந்தைகளின் பெயர்களைக் கேட்டுக்கொண்டிருந்தவர், ஜூலியற், லூஸி, தியோ எனவான பெயர்களைக் கேட்டதும் அசந்துவிட்டார். உடனே அவர்களைத் தனியாக அழைத்து விசாரித்தபோது அந்த மூன்று பிள்ளைகளும் சகோதரர்கள் என்பதையும், அவர்களது




பெற்றோர்கள் அங்கிருந்தவர்களில் யார் என்பதையும் அறிந்துகொண்டார்.

இரவு உணவு வேளை அனைவரும் மகிழ் வுடன் கலந்துபேசி உணவருந்திக் கொண் டிருந் தனர். மாரி றெனே அம்மணியார் அந்த மூன்று பிள்ளைகளுடன் அவர்களது பெற்றோருடன் அமர்ந்து சாப்பிட்டவாறு பேசிக்கொண்டிருந் தார். இவர்களுக்கு அருகாமையில் நண்பர் குடும்பம் அமர்ந்திருந்தது.

*உங்கள் பிள்ளைகளா இந்தப் பிள்ளைகள்?* அம்மணி

**எனக்கோ ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் எங்கள் சுயமான விருப்பின் அடிப்படையிலேயே பெயரிடுவோம். நாங்கள் வைக்கும் பெயர்களுக்கு ஒரு அர்த்தம் அனேகமாக இருக்கும். எங்களில் சிலர் மதப்பற்றாளர்களாயின் அவர்கள் விரும்பும் கடவுளர்களின் பெயர்களை வைப்பதும் உண்டு. என்றேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமோம் மேடம்!! என்றார் சரளமான பிரஞ்சில் பிள்ளைகளின் தயார்.

பிரபல்யமான பிரஞ்சு பெயர்களை அவர்களுக்கு வைத்திருக்கிறீர்களே!! அம் மணியின் ஆச்சரியம் அவரது முகத்தில் வெளிப்பட்டது. இதைக்ககேட்ட அந்தப் பெற்றோருக்கு கொஞ்சம் பெருமிதமாகவே இருந்தது.

எப்படி இவர்களுக்கான பெயரைத் தெரிவு செய்தீர்கள்? தொடர்ந்த அம்மணியின் கேள்வியில் ஆவல் அதிகம் இருந்தது.

மேடம்!... ஏன் கேட்கிறீர்கள்?.... பிள்ளைகளின் தாயார் கேள்வி புரியாமல் குழம்பியவராக.

நீங்கள் கத்தோலிக்கரும் இல்லை ஆங்கி லேயக் கொலனியில் இருந்து வந்தவர்கள்.... இவர்களுக்கு பிரெஞ்சுப் பெயர்களை வைத் திருக்கிறீர்கள். அதுதான்.... அது எப்படி நடந்தது என்பதை அறியத்தான்!! என்ற அந்த அம்மணி தொடர்ந்து, ஏன் உங்களது பாரம்பரிய மொழியில் பெயர்கள் இல்லையா? என்றதும் இதை எதிர் பார்த்திருக்காத பிள்ளைகளின் தாயாரின் முகம் இருண்டுவிட்டது.

நாங்கள் பிரான்சில இருக்கிறபோது எமக்கு இப்பிள்ளைகள் பிறந்தார்கள். அதனாலதான் பிரான்சின் நினைவாக இப்படிப் பெயர் வைத்திருக்கிறோம்! என்றார் பிள்ளைகளின் தந்தையார் அவசர அவசரமாக சிரித்துக்கொண்டு.

அருகில் இருந்த மேசையில் அமர்ந் திருந்த நண்பன் குடும்பம் வெட்கத்தால் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

*3*

1996இல் பிறெஸ்ட என்ற பிரான்சின் தென்கோடி கடற்கரை நகரில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருந்தோம். அப்போது 'சியல்' (CIEL) என்ற பிரஞ்சு மொழி கற்பிக்கும் தனியார் நிறுவனத்தில் மொழி கற்றுக் கொண்டிருந்தேன். என்னுடன் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த மாணவர் குழாம் கற்றுக்கொண்டிருந்தனர். இதில் சுவிஸிலிருந்து வந்திருந்த பிறட்டிறிக்கே (Friederike) என்னோடு அன்பாகப் பழகுவார். இவர் சுவிஸில் அஞ்சல் துறையில் பணிபுரி பவராக இருந்தார். தனது பிரஞ்சு மொழியின் செயற்திறன் மதிப்பை உயர்த்தும் கற்கைக்காக இங்கு வந்திருந்தார்.

ஒரு நாள் ஒவ்வொரு நாட்டினரது பிள்ளைகளின் அழைப்புப் பெயர்கள் பற்றிய கலந்துரையாடல்களாக அந்த வகுப்பறையில் பாடம் நிகழ்ந்தது. ஐரோப்பிய சமூகத்தில் அனேகரது பெயர்கள் கத்தோலிக்க மதம் சார்ந்ததான அவர்கள் பிறந்த நாளைக் குறிக்கும் நிறுவனப்பட்ட பெயர்களாகவே இருக்குமென்றும் இவை அந்தந்த நாட்டு மொழி ஒலிக் குறிப்புகளுக்கிசைவாக ஓசை மாற்றம் உடையதாகவும் இருக்கும் என்பதை ஆசிரியர் அங்குள்ள ஐரோப்பிய மாணவர்களது பெயர்களிலேயே தொடர்புபடுத்தி விவரித்தார். இதனை ஏற்றுக் கொண்ட பிறட்டிறிக்கே, தமிழ்ப் பிள்ளைகளின் பெயர்கள் வித்தியாசமானவை அர்த்தமுள்ளவை என்றார். எல்லோரும் என்னைப் பார்த்தனர்.

எனக்கோ ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் எங்கள் சுயமான விருப்பின் அடிப் படையிலேயே பெயரிடுவோம். நாங்கள் வைக்கும் பெயர்களுக்கு ஒரு அர்த்தம் அனேகமாக இருக்கும். எங்களில் சிலர்

**புலம்பெயர்வு வாழ்வின் பெறுமானம்**
**தெரியாது முக்குளித்த முதற்**
**தலைமுறையும் இதனைத் தொடரும்**
**அடுத்த தலைமுறையினரும்**
**எடுத்துக் கொடுக்கும் தடவழிப்**
**பாதையில் பயணமாகப்போகும்**
**அடுத்தடுத்த தலைமுறையினர்**
**காலவோட்டத்தில் கரைந்து காணாது**
**போகப் போகிறார்களா ? அல்லது**
**தமது சுயத்தோடு உலகை வலம்**
**வரப்போகிறார்களா ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதப்பற்றாளர்களாயின் அவர்கள் விரும்பும் கடவுளர்களின் பெயர்களை வைப்பதும் உண்டு. என்றேன்.

அப்படியாயின், உங்கள் பிள்ளையின் பெயர் என்ன? அப்பெயர் வைக்கக் காரணமென்ன? அனைவரும் எனது பதிலுக்காக முகம் பார்த்திருந்தனர்.

எங்கள் பையன் பெயர் 'இளவேனில்' நாங்கள் வயது பிந்திய நிலையில்தான் மணம் முடித்திருந்தோம் ஆக எமக்குக் கிடைத்த முதல் பிள்ளை என்றென்றும் எமக்கான இளவேனில்தானே! இது மட்டுமல்ல இவன் பிறந்தது சித்திரை மாதம் இது இளவேனில் காலம்தானே ஆக அவனது பெயராக இயற்கையின் குறிச் சொல்லாகவே வைத்துவிட்டோம்.

ஆகா... என்ன அருமை! நல்லதொரு இலக்கிய உயிர்ப்பு உங்களது பெயரிடலில் இருக்கிறது. என ஆசிரியரும் பாராட்டினார்.

இதன்பின் பிறட்டிறிக்கேயிடம் ஆச் சரியமாகவே கேட்டேன் எப்படி இந்த விடையங்கள் உங்களுக்குத் தெரிந்திருந்தது?

அவள் சுவிஸில் எனக்கு நிறையவே தமிழர்களைத் தெரியும். எனக்கு நல்லதொரு தமிழ் நண்பர் இருக்கிறார். என்றார் மகிழ்வோடு.

4.

இப்போது எமது பிள்ளைகள் தலை யெடுத்துவரும் அடுத்த தலைமுறையினரது காலம். எனது இரண்டாவது மகன் இலக்கியன் இங்குள்ள யூதர்களால் நடாத்தப்படும் தனியார் உயர் கல்வியகத்தில் படிக்கிறான்.

ஒருநாள் வீட்டில், அம்மா... தமிழாக்கள் ஏன் தங்களுடைய பிள்ளைகளுக்கு என் னென்வோ பெயர்களை வைக்கிறார்கள்?

என் மனைவி திகைத்தவராகி, ஏன்... இப்படிக் கேட்கிறாய்? பெயர் வைப்பது அவர்களுடைய தனிப்பட்ட விருப்பம். அதுக்கு நாமென்ன செய்ய முடியும்? ஒருவாறு சமாளித்துக் கொண்டார்.

இல்லையம்மா... அரபுக்காரங்கள் தங்களது அடையாளப் பெயர்களைத்தான் வைக்கிறார்கள். யூதர்களும் அப்படித்தான் வைக்கிறார்கள். சீனாக்காரரும் அப்படித்தான் வைக்கிறார்கள். தமிழாக்கள்தான் சில்வா, நிக்கோலா, ஜோனாத்தன், மகிஷா, ஒலிவியே, டுலுக்ஷன், அநோஷா, ஆபிஷா எனப் பலவாக வைக்கிறாங்கள்!! எனக்குப் பிடிக்கவே இல்லை. என்றான்.

ஓ அதுவா. அதுதான் இப்ப பஃசன். இதனால் அவர்களது பெற்றோர் பெருமைப் படுகிறார்கள். கூப்பிடுகிற பெயரில என்ன பஃசன் இருக்கம்மா ? லூசுத்தனந்தான் கிடக்கு !!

தாயாரால் ஏதும் பேசவே முடியவில்லை.

மொழிபுரியாத நாடுகளில் வந்திறங்கிய முதற் தலைமுறையினரது பெயர்களை அந்தக்கால அகதிக் கோரிக்கை நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களால் உச்சரிக்கத் தெரியாது திணறித் திக்குமுக்காடிய ஒலிபெருக்கியின் குரல்களும், உடனே பரப்பரப்பாகி இது தமிழாக்களைத்தான் சுட்டுவதாக உற்றுக் கேட்டுப் புரிந்துக்கொண்டதையும், கால நீட்சியில் இன்று 'வணக்கம் ! – நன்றி ! – நல்வரவு ! நலமா ?' என்ற சொற்கள் உலகப் பரப்பில் தனித்துவ அடையாளத் தடமாகப் பவனிவருவதும் நினைவுத் திரையில் நிழலாட புன்முறுவலிட்டவாறு கணினியில் மூழ்கினேன் நான்.

★★★★★


புலம்பெயர்வு வாழ்வின் பெறுமானம் தெரியாது முக்குளித்த முதற் தலைமுறையும் இதனைத் தொடரும் அடுத்த தலைமுறை யினரும் எடுத்துக் கொடுக்கும் தடவழிப் பாதையில் பயணமாகப்போகும் அடுத்தடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்டுகள் இணைந்து பயணிக்காவிட்டால்...

**கி.ரா. பேட்டி**



**மக்களவைத் தேர்தலில் மட்டுமில்லாமல் வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் கம்யூனிஸ்டுகள் இதே போல் இணைந்து பயணிப்பார்களா?**

**இருவரும் இனிமேல் இணைந்துதான் பயணத்தை தொடரவேண்டும். இல்லாவிட்டால் அழிந்து போய்விடுவார்கள். கிராமத்தில் கோபத்தில சொல்ற மாதிரி, "நாசமா போய்டுவாங்க".**

*- இந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியிலிருந்து*

தலைமுறையினர் காலவோட்டத்தில் கரைந்து காணாது போகப் போகிறார்களா? அல்லது தமது சுயத்தோடு உலகை வலம் வரப்போகிறார்களா?

ஆனாலும் தொலைவு தொடர்பான கனவுகளுடனும் இதற்கான மீட்சிக்கான அயராத உழைப்புடனுமான பயணங்களில்தான் மானுடவாழ்வு புவியில் தடம் பதித்து மேலெழுகிறது. தமிழின் வரலாற்றுப் பாதையில் அகம் – புறமென காரண – காரியப் பெயர்ப் பதிவுகளுடனான சொற்களாலும் சொற்கோர்வைகளாலும் இன்று வரை தமிழ் தனித்துவமான மொழியாக வாழ்கிறது. புத்தம் பதியதான சொற்கள்கூட இவ்வகைப் பொருத்தப்பாடுகளுடனேயே நடைமுறைகளாகின்றன.

இன்று படைப்பாளி ஜோ டி குருஸ் முன்வைக்கும் 'பரதவர்கள்' தொடர்பான கருத்துரு விரிவான மீள் பார்வையைத் தொடுகிறது. இது தொன்மத்தின் நீட்சியிலான எமக்கான பெயர்களின் முக்கியத்துவம் தொடர்பான உரத்த சிந்தனையை முன்வைக்கிறது

பெயர்களைக் காவித் தொடர்ந்ததாலே தானே 'பெயரர்கள்' என்ற பேரர் அழைப்பைக் கொண்டது தமிழ். 'குப்பைத் திருமேனியாக – எவ்வளவு குப்பைகளைக் கொட்டினாலும் எந்தக் குப்பைத் துகளுமல்லாது சுத்தமாக குப்பைக்குள்ளிருந்தே மிளிரும் தாவரம். இதை இப்போது 'குப்பைமேனி' ஆக குப்பைக்குள் போட்டுவிட்டோம். செம்பருத்தி – செவ்விரத்தை எனவாக அதன் தோற்றத்துடனாக இருந்த பெயரை ஈவிரக்கமல்லாது 'செம்பரத்தை' எனவாக்கி விட்டோம் !

இராமபிரான் எனக் கடவுளாக்கப்பட்ட இதிகாச நாயகனால் மரண தண்டனை வழங்கப்பட்ட 'வாலி'யும் அவனது மகனான அங்கதனும், எம்மரபில் இன்றும் பெயரராக தொடர்கிறார்கள். இராவணனது பெயரும் அவனது மகன் 'இந்திரசித்'தும் இன்று வரை பெருமையுடன் தொடர்கிறது. ஆனால் இராமனுக்கு உதவிபுரிந்த 'சுக்கிரீவன்' பெயரோ இராமரால் முடிசூட்டப்பட்ட 'விபீடணன்' பெயரோ எங்காவது மதிப்பாகத் தொடர்வதுண்டா?

புலம்பெயர்வு வாழ்வில் எமது அடுத்துவரும் சந்ததியினர் எல்லாவற்றுக்கும் 'ஏன்? எதற்கு எப்படி?' எனும் காரண காரியங்களைத் தேடுவோராகவே தமக்கான கல்வித் தேடல் தளத்தில் பயணிக்கிறார்கள். இவர்களினது கேள்விகளுக்குப் பதிலளித்தவாறு தானே நாமும் பயணிக்க வேண்டும்.

## பிற்குறிப்பு

1. பெயரிடுதலும் அடையாளமும் கீதா கணபதி தொரே

   http://www.padippakam.com/document/mounam/mounam03.pdf

   (நன்றி: மௌனம் 3 இதழில் வெளிவந்த ஆக்கம் காண்க : பக்கம் 47)

2. சியல் கல்வி நிறுவனம்

   Ecole pour apprendre le français en France - CIEL Bretagne -

   http://www.ciel.fr/apprendre-francais/

3. புலம்பெயர்ந்த தமிழர்களால் தாம் பெற்றெடுத்த வாரிசுகளுக்கு இட்ட பெயர்கள். ஒரு குறுக்குவெட்டுப் பரிசீலனைக்கான தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் அற்ற வகுப்பறை

இந்த வகுப்பறை
இப்போது
மாணவர்கள் அற்று காட்சியளிக்கலாம்

இதற்கு முன்
இருவர் தங்களுக்குள் சண்டையிட்டு இருந்திருக்கலாம்

இருவர் பாடம் கவனிக்காமல் எங்கோ இருந்திருக்கலாம்
இருவர் நட்பை பரிமாறியிருந்திருக்கலாம்

இருவர் தங்கள் ரகசிய தோழி குறித்து
சிலாகித்து இருந்திருக்கலாம்

இருவர் மதிய உணவு குறித்து சிந்தித்து இருந்திருக்கலாம்
இருவர் நேற்று இரவு பார்த்த சினிமாவை நினைத்தப்படி இருந்திருக்கலாம்

இருவர் எதிரில் கொடுமைப்படுத்தி கொண்டிருப்பவரை
கொலைவெறியோடு பார்த்துகொண்டிருந்திருக்கலாம்
இருவர் காணாமல் போன தாயின் நினைவோடு இருந்திருக்கலாம்

இருவர் வீட்டில் நடந்த சண்டை குறித்து கவலைக் கொண்டவர்களாக இருந்திருக்கலாம்
இருவர் ஓடிப்போன சகோதரி குறித்த பயத்தில் இருந்திருக்கலாம்

இருவர் முடியாமல் படுத்த படுக்கையாக இருக்கும்
ஆயாவையோ தாத்தாவையோ எண்ணி வருந்தி இருந்திருக்கலாம்

இருவர் தன் தாய் கொண்டு வரும் உணவுக்காக காத்திருந்திருக்கலாம்
இருவர் எதையோ சாப்பிட்டு வாந்தி எடுத்திருக்கலாம்

இருவர் வாத்தியார் திட்டியதை நினைத்தப்படி அவர் மேல் வஞ்சத்தை செலுத்திக்கொண்டிருந்திருக்கலாம்
இப்படி எத்தனையோ இருந்திருக்கலாம்

வகுப்பறை என்றும் வெறுமை அற்று
காட்சியளிப்பதில்லை

மாணவர்கள் அற்ற வகுப்பறையை
அட இதில் என்ன இருக்கிறது
என சாதாரணமாக
கடக்க இயலாது..!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியில் நனைந்த சூளுரைகள்



"இந்தி பேசாத பிற மாநில மக்கள் இசைவு தெரிவிக்கும் வரை ஆங்கிலமும் தொடர்பு மொழியாக நீடிக்கலாம்" என்று அன்றைய நடுவணரசு இறங்கி வருவதுபோன்று ஒரு சமிக்கை காட்டியது. இது தொடர்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் வலுத்த விவாதங்களை நிகழ்த்தியபோதும், அதன் தலைமை இந்தி எதிர்ப்புப் போராட்டம் நின்றால் போதும் என்ற மனநிலையிலேயே இருந்தது. 'மாணவர்களின் கல்வி வீணாகக்கூடாது' என்றெல்லாம் தி.மு.க.தலைமை கூறினாலும், இந்தப் போராட்டம் தங்கள் கையை மீறிப் போகிறது என்று அது உள்ளூர அஞ்சியது.

'திராவிட நாடு' கோரிக்கையைத் திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க. பிரிந்து வந்தபோதும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டுதான் இருந்தது. ஒரு விடுதலை இயக்கத்துக்கான எந்த ஓர் இலட்சணத்தையும் தி.மு.க.தலைமை கொண்டிருந்ததில்லை. மொழி இனவகைப்பட்ட பற்றுணர்ச்சியைத் தி.மு.க முதலீடாகவே கருதியது. ஒரு புனைவியல் சார்ந்த உணர்வு நிலையையே தி.மு.க. தனது இளைஞர் அணியிடத்து வளர்த்து வந்தது. திராவிட நாட்டின் விடுதலைக் கோரிக்கையை அது முன்னிறுத்திய ஏனைய திராவிட இன மக்களிடம் கொண்டு செல்லவேண்டும் என்ற உருப்படியான எந்த ஒரு முயற்சியையும் அதன் தலைமை மேற்கொண்டதில்லை. திராவிட நாட்டின் விடுதலைப் போராட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல் அதன் தலைமையிடத்து இல்லை. எனினும் புனைவியல் பாங்கிலான அதன் பரப்புரைகள் ஏராளமான இளைஞர்களை ஈர்த்தன என்பது உண்மைதான்.

மற்றொரு சமூகவியல் உண்மையையும் சிந்திக்கத் தோன்றுகிறது. இந்திமொழிக்கு முன்பே வடமொழி எதிர்ப்பு என்பது தமிழர்களின் வரலாற்று வழிப்பட்ட உணர்வு. சமஸ்கிருத வாணர்களும் தமிழைத்தான் தங்களுடைய எதிர்மொழியாகக் கருதி வந்தார்கள். இல்லையெனில் தமிழை நீஷமொழி என்று சுட்டியதற்கு என்ன தேவை ஏற்பட்டது? இந்தக் கூற்று இன்னும் விரிவாக ஆராயப்பட வேண்டியது என்றாலும், எளிதில் புறந்தள்ளப்பட முடியாதது. ஆராயப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று கூறுவது இதன் காரணங்களைத் தொகுத்தறியத்தான். ஏக இந்தியா என்ற கருத்தே, பார்ப்பனியமயமான, சமஸ்கிருதப் பண்பாட்டுத் தலைமையிலான ஒரு தேசத்தைக் கற்பிதம் செய்வதற்கும், கட்டமைப்பதற்கும் உருவாக்கப்பட்டதுதான். பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழி என்று இந்திக்கு ஒரு தகுதியை ஏற்படுத்தினாலும், சமஸ்கிருதத்தின் சாயல் இந்திக்கு இல்லாமல் போயிருந்தால், இந்தப் பெரும்பான்மை 'நியாயம்' முன்வைக்கப்பட்டிருக்காது. இந்தி எதிர்ப்பு என்பது சமஸ்கிருத ஆதிக்கத்தின் மரபு வழிப்பட்ட எதிர்ப்புணர்வு என்ற உண்மையையும் புரிந்துகொள்ள வேண்டும். திமுக இப்படி ஓர் எதிர்ப்புப் பேரலையை எதிர்பார்க்கவில்லை. இதை முன்னெடுத்துச் செல்லும் விடுதலை உணர்வு அதன் தலைமைக்கு உருவானதில்லை. வெட்டிய கிணற்றிலிருந்து மெல்லிய ஊற்றுத் தண்ணீரை எதிர்பார்த்த தலைமைக்கு, ஒரு பூகம்பத்தை எதிர்கொள்ளும் துணிச்சல் இல்லை.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது நடுவண் அமைச்சர்கள் திரு.சி.சுப்பிரமணியமும், திரு.ஓ.வி. அளகேசனும் பதவி விலகினார்கள். ஏற்றுக்கொள்ளும் வரையிலும் ஆங்கிலம் நீடிக்கலாம் என்ற நடுவணரசின் அறிவிப்பும் வெளியானதைத் தொடர்ந்து மாணவர் போராட்ட அலைகளில் தணிவு ஏற்பட்டது. ஆயுதம் தாங்கிய போராட்டங்களின் தோல்விகளை நாம் சந்தித்துத்தான் வருகிறோம் என்ற போதிலும், பெரும்பாலும் ஆயுதம் ஏந்தத் துணியாத வெகுமக்கள் போராட்டமும், தோல்வி என்று தோன்றாத வகையில் தோற்கடிக்கப்பட்ட வரலாற்றைத் தான் மாணவர்களும் மக்களும் கடந்து வந்திருக்கிறார்கள்.

கல்வி நிலையங்கள் திறந்துவிட்டன. மதுரை தியாகராசர் கல்லூரியில் கைது செய்யப்பட்டிருந்த தோழர்கள் காளிமுத்து, காமராசன், பா.செயப்பிரகாசம் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். அன்றைய பக்தவத்சலம் அரசு, அவர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் (DIR) கீழக் கைதுசெய்யப்பட்டார்கள் என்று அறிவித்தது. பாளையங்கோட்டைச் சிறையில்தான் அவர்களும் வைக்கப்பட்டிருந்தார்கள்.

அந்த நாட்களைப் பற்றித் தோழர்கள் அசன்முகமதுவிடமும் சொக்கனிடமும் பகிர்ந்துகொண்டிருந்த ஓர் அண்மைப்பொழுதில், அசன் கூறினார்: 'அவர்கள் டிஐஆரில் கைது செய்யப்பட்டிருந்தாலும், அந்தச் சட்டப்பிரிவின் கீழ் வழக்குத் தொடரப்படவில்லை. அவர்கள் மாணவர்களாய் இருந்த காரணத்தினால் படிப்புப் பாதிக்கப்படும்' என்று பெருந்தன்மையுடன் அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலம் நடந்துகொண்டார். நான் மறுப்பேதும் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். தோழர் காளிமுத்துவுடன், என்னிலும் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த அசன் கூறியது மறுக்கப்பட முடியாததுதான். ஆனால் கடைசியில் காட்டிய இந்தப் பெருந்தன்மையைத் தொடக்கத்திலேயே காட்டி இருக்கலாம். அரச வன்முறையைத் தவிர்த்திருக்கலாம். துப்பாக்கிச் சூட்டை விலக்கியிருக்கலாம். தீக்குளித்து மாண்ட சிவலிங்கம் உள்ளிட்ட ஈகிகளின் உயிர்ச் சூட்டைக் கொஞ்சமேனும் உணர்ந்து இருந்திருக்கலாம்.

**நான் காளிமுத்துவின் உபயத்தைப் பேசினேன். கலைஞர் உட்பட அனைவரும் சிரித்தனர். கலைஞர் அதற்குப் பதிலளிக்கும்போது, 'பரிமளாவிடம் துக்காராம் ஏமாந்து போனான்; நான் உங்களை ஏமாற்றவில்லையே' என்று பதிலளித்தார். அரங்கம் மீண்டும் அதிர்ந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1965–66* கல்வியாண்டில், கல்லூரியின் இளங்கோ மன்றத்தின் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டேன். கவிஞர் சுரதா தலைமையில் ஒரு கவியரங்கத்தை நடத்தினோம். கவிஞர்கள் அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், நா.காமராசன், பொன்னிவளவன் போன்றோர் கலந்துகொண்டு கவிப் பெருக் காற்றினார்கள்.

கலைஞர் கருணாநிதியைக் கல்லூரிக்கு அழைக்க எனக்கு முன்னிருந்த இளங்கோ மன்றத்தலைவர்களைப் போல நானும் முயற்சி செய்தேன். கடிதம் எழுதினேன். அவரும் இசைவு தெரிவித்தார். அவரை எப்படி வரவேற்றுப் பேசுவது என்பதைக்கூட காளிமுத்து, காமராசன், நான் எல்லாரும் சேர்ந்து விவாதித்தோம். காளிமுத்து சொன்னார். 'புதையல் படத்தில் கதாநாயகி பரிமளாவுக்குத் துக்காராம் எழுதிய காதல் கடிதங்களைவிட நாங்கள் உங்களுக்கு எழுதியது ) அதிகம்' என்று சொல்லும் என்றார். துக்காராம் என்ற ஒருதலைக் காதலனாக நகைச்சுவை நடிகர் சந்திரபாபு அருமையாக நடித்திருப்பார். கதாநாயகி பத்மினி. கதாநாயகன் சிவாஜி. நான் காளிமுத்துவின் உபயத்தைப் பேசினேன். கலைஞர் உட்பட அனைவரும் சிரித்தனர். கலைஞர் அதற்குப் பதிலளிக்கும் போது, 'பரிமளாவிடம் துக்காராம் ஏமாந்துபோனான்; நான் உங்களை ஏமாற்றவில்லையே' என்று பதிலளித்தார். அரங்கம் மீண்டும் அதிர்ந்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் குறித்தும் பேசினேன். மாணவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவவேண்டும் என்று கோரினேன். 'நல்ல உழவன் விதை நெல்லை எடுத்துச் சமைக்கமாட்டான். நான் உழவன்; நீங்கள் விதை நெற்கள். எதிர்காலத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியவர்கள் நீங்கள்' என்ற கருத்துப்பட பதிலுரை நிகழ்த்தினார். நல்ல விதைகளாக இருக்கக் களஞ்சியத்தில் கிடக்க வேண்டும். புழு பூச்சிகளை அண்டவிடக் கூடாது. எத்தகைய சூறாவளி வீசினாலும் களஞ்சியக் குதிரை விட்டு வெளியே வந்துவிடக்கூடாது. நல்ல விதை நெல்லாக இருப்பது பாதுகாப்பானது என்று சில தோழர்கள் கருதினர். எந்தக் கழனியில் யார் கையால் விதைக்கப்பட வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். வரும் தேர்தலில் பங்கேற்க வேண்டும் என்பது சிலருக்குக் கனவாகப் பிடித்து ஆட்டியது.

எங்களில் சிலருக்கு திமுக அரசியல் அலையில் ஒரு துரும்பாக அடைக் கலமாக விருப்பமில்லை. திமுகவை தக்க வைத்துக்கொண்டே புரட்சிகர இளைஞர் களைக் கொண்டு ஒரு குழுவைத் தோற்றுவிக்க வேண்டும். மேடைச் சிலம்பங்களால் ஒரு விடுதலை பெற்ற தேசிய இனத்தைக் கட்டமைக்க முடியாது என்றெல்லாம் யோசித்தோம். இதற்கான செயலில் இறங்குவது என்றும் முடிவு செய்தோம். சுடர்முருகையா, எழுமலை செயராமன், பாண்டியன், நான், சரவணன், என்று முதலில் ஐந்து பேர் ஒரு சூளுரை எடுத்துக் கொள்வதற்காக, மதுரையை அடுத்துள்ள அழகர் மலைக்குச் சென்றோம். அங்கு சுடச்சுடப் பரிமாறப்பட்ட அடையை வாங்கிக்கொண்டு மலை உச்சிக்குச் சென்றோம். அங்கு ஓடையிலே ஊறுகிற மெல்லிய தீஞ்சுவைத் தண்ணீரைப் பருகியபடி அடையை உண்டபடியே நாங்கள் பேசினோம். மேடை அரசியலுக்கு அப்பால் செயல் சார்ந்த இயக்கம் ஒன்றைக் கட்டுவது, தேவைப்பட்டால் ஆயுதம் ஏந்துவது என்றெல்லாம் தீர்மானித்தோம். இந்த அமைப்பின் உறுதியைக் கட்டிக்காக்க இரத்தத்தால் சபதம் ஏற்பது என்று முடிவு செய்தோம்.

ஒரு தோழர் கையில் ஒரு புது பிளேடுடன் வந்திருந்தார். ஊற்று நீரில் கைகளைக் கழுவிவிட்டு இடது கையின் உட்புறத்தில் நடுவில், பிளேடால் கீறி, வரும் ரத்தத்தில் சபதம் ஏற்பது என்ற முடிவில் யாரும் பின்வாங்குவதாய் இல்லை. பிளேடை வாங்கி முருகையன் கையை அறுத்துக் கொண்டார். அடுத்து நான், செயராமன், பாண்டியன், சரவணன் என்று நாங்கள் அனைவரும் கைகளைக் கீறிக்கொண்டோம். எங்களுக்கு வலியில்லை. ஏதோ ஒன்றுக்கு நேர்ந்து கொண்டதுபோல் உணர்ந்தோம். எங்கள் குழுவை அடுத்து சேடப்பட்டி முத்தையா, (முன்னாள் சட்டமன்றஅவைத்தலைவர்) உட்பட வேறு சில தோழர்களும் இதே உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள் என்ற செய்தி வந்தது. அழகர்மலையில் ஊறிய இக்குருதி ஊற்று பெருகும் என்று நம்பினோம்.

இப்படிச் சூளுரை செய்தவர்களில் சிலரைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிளேடை வாங்கி முருகையன் கையை அறுத்துக் கொண்டார். அடுத்து நான், செயராமன், பாண்டியன், சரவணன் என்று நாங்கள் அனைவரும் கைகளைக் கீறிக்கொண்டோம். எங்களுக்கு வலியில்லை.**

தோழர் பாண்டியன் தியாகராசர் கல்லூரி மாணவர் அல்லர். மதுரையில் பல்தொழில்நுட்பக் கல்லூரி (Polytechnic college) மாணவர். கவிதைகளில் ஈடுபாடு கொண்டவர். காளிமுத்து அமைச்சரான பிறகு அவருக்குத் தனி உதவியாளராக (PA) பணியாற்றினார். படித்து முடித்துப் புதுக்கல்லூரியில் நான் பணியாற்றியபோது அவரை அடிக்கடி சந்தித்துக் கொள்வேன். ஒருநாள் அழகர் மலைச் சூளுரை பற்றி அவரிடம் பேச முற்பட்டேன். "என்னண்ணே அதையெல்லாம் இப்பவும் நெனச்சிக்கிட்டு", என்றார். குருதியில் நனைந்த சூளுரைகள் பிள்ளைக் கனவுகளாகிவிட்டன.

மற்றொரு தோழர் சரவணன். தியாகராசர் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்துக் கொண்டிருந்ததாக நினைவு. ஒருசமயம் தோழர்கள் செயராமன், சுடர்முருகையன், சரவணன் ஆகியோருடன் திருச்சிக்குப் போனேன். என்னுடைய நாடகம் ஒன்றை திருச்சி வானொலி நிலையம் நடத்திய வானொலி நாடகப்போட்டிக்கு அனுப்பி வைத்தேன். அதை ஒலிப்பதிவு செய்வதற்காகப் போயிருந்தோம். நாடகம் போட்டியில் தேறவில்லை. நாங்கள் ஒலிப்பதிவை முடித்துவிட்டு திருச்சி உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குப் போனோம். அங்குள்ள கோயிலுக்குள் சென்றபோது, கோயில் அலுவலர்கள் சரவணனை அனுமதிக்கவில்லை காரணம் அவர் கருப்புச் சட்டை போட்டிருந்ததுதான். அப்பொழுது ஐயனார் பக்தி முற்றாத காலம். "அவன் கருப்புச்சட்டைக்காரன்... சாமி இல்லங்கறவன்.. உள்ளே வரக்கூடாது" என்றார் அலுவலர். நானும் என் தோழர்களும் நீறில்லாத நெற்றியுடன்தான் நின்றோம். ஆனால் சரவணனுடைய கருப்புச்சட்டை அவர் கண்ணை உறுத்தி விட்டது.

"இவன் யாருன்னு தெரியுமா? கோயில்ல வைக்கிறியே நாதசுவர இசை... அதை வாசிச்சவரே இவன் அப்பாதான். ஆமாம் இவன் பேரு சரவணன் காருகுறிச்சி அருணாசலத்தோட மகன்" என்று குரலை உயர்த்திச் சொன்னார் செயராமன்.

"அவனைப் பாத்தா அப்படில்லாம் தெரியலே.." (சரவணன் நீறில்லாத நெற்றியோடுதான் நின்றார்) உடமுடியாது என்றார். "நம்ம கோயிலுக்குள்ளே போக வேண்டியதில்லே" என்று சரவணனோ செயராமனோ சொன்னார்கள். நாங்கள் சாமி தரிசனம் செய்யாமலேயே திரும்பிவிட்டோம்.

எழுமலை செயராமனைப் பற்றி முன்னரேயே குறிப்பிட்டிருக்கிறேன். படித்து முடித்தவுடன் கூட்டுறவு அலுவலகத்தில் பணியில் சேர்ந்துவிட்டார்; இடையில் அ.இ.அ.தி.மு.க.வின் ஆதரவாளராக இருந்தார் என்று நண்பர்கள் கூறினர். ஆனால் இன்றுவரை குன்றாத தமிழ் உணர்வுடன் இருந்து வருகிறார்.

இந்தி எதிர்ப்பில் பல்வேறு தோழர்களுடன் நெருக்கமான நட்பு கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் அழகர்மலையில் சூள் மேற்கொண்டதும் குழுவாக அமைந்ததும் யாருக்கும் தெரியாது; காளிமுத்து, காமராசன், பா.செயப்பிரகாசம், கன்னியப்பன், அசன்முகமது, சொக்கன், இப்படி நெருங்கிய தோழமையில் இருந்தவர்களிடமும் இரகசியம் கசியாதபடி பார்த்துக் கொண்டேன். "என் இதயம் நம் ரகசியங்களின் கல்லறையாக இருக்கும்" தன் காதலியிடம் காதலன் கூறுவதாக கலீல் ஜிப்ரான், 'முறிந்த சிறகுகள்' புதினத்தில் எழுதுவார். இன்றுவரை என் இதயமும் பல்வேறு ரகசியங்களின் கல்லறையாக இருந்து வருகிறது - என்னளவில் நான் வெளிப்படையானவனாக இருந்தபோதிலும். என்னுடைய மறதி என் கல்லறை ரகசியங்களை முத்திரையிட்டு மூடிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழியம்

சரியாக நான்கு மணிக்கெல்லாம் வினாடி சுத்தமாய்,வந்துவிடும்படியாக மருத்துவர் சொல்லியிருந்தது கோபாலனுக்கு நினைவு வந்தது. வரிவரியாக முதுகில் ஏறியமர்ந்திருந்த கொப்புளங்கள் கொடுத்த இம்சையால், மணிக்கொருமுறை சொறிந்துக்கொண்டே இருந்த கோபாலனின் பரிதாப நிலையைப் பார்த்து சீனு அண்ணன்தான் மருத்துவர் தெய்வ சிகாமணியிடம் பார்க்க நேரம் வாங்கிக் கொடுத்தார். "ரொம்ப முக்கியமான ஆளுப்பா.. எப்படியாவது அவரு சொல்ற நேரத்துக்கு போயிடு" சீனு அண்ணனின் குரல் மனதில் கிளர்ந்து எழுந்தது. மயிலாப்பூரின் நெருக்கடி மிகுந்த பிரதான சாலையின் தென்கோடியில் ஒரு சைவ மடத்தை ஒட்டி இருக்கிறது அவரது மருத்துவமனை. தோல் வியாதிகள் பிய்த்து தின்னும் ஜனக்கூட்டம் எப்போதும் மிகுந்திருக்கும் பரபரப்பான மருத்துவக்கூடமது. கோபாலனுக்கு நான்கு மணிக்கு அப்பாயின்மென்ட். அதுவும் சீனு அண்ணனின் தயவால்.



கோபாலன் தன் இடக்கையில் ஊறிக் கிடந்த கடிகாரத்தை முகத்துக்கு மேலாக உயர்த்திப் பார்த்தான். இரண்டரை ஆகியிருந்தது. இன்னும் அரைமணிநேரம், புதிதாக உருவெடுத்துக்கொண்டிருக்கும் தன் சைட்டில் மேலும் கீழுமாக ஏறியிறங்கி பொழுதை கடத்திவிட்டால்போதும், பின் அங்கிருந்து தைரியமாக நழுவி மயிலாப் பூருக்கு ஓடிவிடலாம். கோபாலனின் மனதில் சிந்தனைகள் பொங்கி வழிந்தன. அங்கிருந்து கிளம்புவதற்கான திட்டமிடலை மெல்ல மனதுக்குள் அரங்கேற்றிக் கொண்டிருந்தான். எப்போது பார்த்தாலும், சிமென்ட் கலவை புழுதியோடுக் குழைந்து முகத்தை முட்டும் அந்த இரக்கமில்லாத சைட்டில் இவ்வளவு நேரமும் விசுவாசமாக வேலை செய்ததே பெரிய காரியம் என நினைத்து திருப்திப் பட்டுக்கொண்டான்.

வானக்கூரையைதொட்டுவிட எத்தனிக்கு மளவுக்கு உயர்ந்து கம்பீரமாக எழுந்து நின்ற அந்த அப்பார்ட்மெண்ட்டில், முழுக்கவே கொல்கத்தாவிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்ட பதின்வயது சிறுவர் கள் உடலெங்கும் சிமென்ட் கூழை அப்பிக் கொண்டு அங்குமிங்கும் அலைந்துக் கொண்டிருந்தார்கள். கோபாலனை பார்த்ததும் "குட் ஆஃப்டர்னூன் சார்" என்று சல்யூட் வைத்தார்கள். அவன்தான் அந்த சைட்டின் ஒரே பொறியாளர் என்பதால் மரியாதைக்கு குறைவில்லை. மொழிப் புரியாத ஊரில் மனிதர்கள்கூட இறக்குமதி செய்யப்படும் பண்டங்களாக உருமாறி விடுகிறார்கள். தமிழ் பேசும் ஆட்களை வேலைக்கு வைத்தால் கூலி கட்டுபடியாகாது என்பதாலேயே இப்படி வங்காள சிறுவர்கள் இறக்குமதி செய்யப்படுவதாக சொல்லி சிரித்த மேஸ்திரியின் முகம் சட்டென்று கோபாலனுக்குள் மின்னி மறைந்தது. இரக்கமேயில்லாதவர் என்று உதட்டுக்குள் முணுமுணுத்துக்கொண்டான்.

சரியாக அப்போதுதான் அவனது சட்டைக்குள் சுருண்டு கிடந்த செல்போன் அதிர்ந்து சிணுங்கியது. மின் திரையில் மேஸ்திரியின் வறண்ட முகம் மின்னிக் கொண்டிருந்தது. எந்தெந்த தளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கூலியாட்கள் வேலை செய்கிறார்கள் என்பதை அறிந்துக்கொள்ள தினமும் இப்படி கோபாலனுக்கு மேஸ்திரி ஃபோன் செய்து விடுவார். ஃபோனை அட்டென்ட் செய்து காதோடு சேர்த்து அழுத்தினான்.

“சொல்லுங்க மேஸ்திரி”

“கோபாலா,நம்மபக்கத்துசைட்லலிஃப்ட் என்ஜின் பழுதாகிடுச்சு, காலையில இருந்து அங்க ஒரு வேலயும் நடக்கல, ஆட்டோலப் போட்டு என்ஜினஅனுப்பி வைக்கிறேன், செத்த டி.நகர் ஓர்க்ஷாப் வரைக்கும் போய்ட்டு வந்துடு” கட்டளைப் போல வந்து விழுந்தது ஒவ்வொரு வார்த்தையும்.

நான்கு மணிக்கு மருத்துவரிடம் சென்றுவிடும் உத்வேகத்தில் இருந்ததால், கோபாலனுக்கு இந்த திடீர் வேலை, தலையில் ஒரு லோடு சிமெண்ட்டை வாரி இறைத்ததுப் போல இருந்தது.

“அதில்ல மேஸ்திரி, நான் நாலு மணிக்கு ஹாஸ்பிடல் போகணும், ஸ்கின் டாக்டர்கிட்ட, ஓர்க்ஷாப்கு வேற யாராவது அனுப்பி வைங்களேன்”

“அதுக்கென்னப்பா நாலு மணிக்குத் தான, ஓர்க்ஷாப்புல என்ஜின இறக்கி விட்டுட்டு, நீ அப்படியே போயிடு. ஆட்டோக் காரன நம்ப முடியுதுல்ல. நம்ம ஆளு ஒருத்தன் கட்டாயம் கூடவே போகணும்” சொல்லி விட்டு கோபாலனின் பதிலுக்கு காத்திருக் காமல், சட்டென்று இணைப்பைத் துண்டித்து விட்டார். மேஸ்திரி சொல்லிவிட்டால் அங்கு மறுப்பேச்சுக்கு இடமேயில்லை. அவர்தான் கோபாலன் வேலை செய்யும் அஜய் அன்ட் கோவையே கட்டி ஆள்பவர். அவரின்றி அங்கு அணுவும் அசையாது.

கோபாலன் எப்படியாவது அந்த என்ஜினை ஓர்க்ஷாப்பில் தூக்கிவீசிவிட்டு, அங்கிருந்து நேரடியாக மயிலாப்பூருக்கு பஸ் பிடித்துவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கையில் அவனது சைட்டின் முகப்பில் ஒரு ஆட்டோ வந்து நின்றது.

ஆட்டோ ஓட்டுனருக்கு முப்பது வயதிருக்கலாம். சிவந்த உடல், சீப்பின் வாயைப் போல அகன்று விரிந்திருந்த முள் மீசை. சுருள் முடி. நிச்சயமாக மேஸ்திரி சந்தேகப்பட்டதுப்போல, இவர் என்ஜினை தூக்கிக்கொண்டு எங்கும் ஓடிவிடுபவர் போல தெரியவில்லை.

**சரியாக அப்போதுதான் அவனது சட்டைக்குள் சுருண்டு கிடந்த செல்போன் அதிர்ந்து சினுங்கியது. மின் திரையில் மேஸ்திரியின் வறண்ட முகம் மின்னிக்கொண்டிருந்தது. எந்தெந்த தளத்தில் எத்தனை கூலியாட்கள் வேலை செய்கிறார்கள் என்பதை அறிந்துக்கொள்ள தினமும் இப்படி கோபாலனுக்கு மேஸ்திரி ஃபோன் செய்துவிடுவார். ஃபோனை அட்டென்ட் செய்து காதோடு சேர்த்து அழுத்தினான்.**

“சார், மேஸ்திரி நமக்கு நல்ல பழக்க மானவர்தான். அவர்கிட்டயே ஆட்டோவுக்கு விலை பேசிட்டேன். நீங்க ஏறி உட்காருங்க” உதட்டில் சிரிப்பை குவித்துக்கொண்டு சொன்னார்.

ஆட்டோவின் பின் இருக்கையை, கோபாலனோடு மற்றொருவரும் பங்கிட்டுக் கொண்டிருந்தார். ஆட்டோ சகிக்க முடியாத சப்தத்தை கக்கிக்கொண்டு அந்த சைட்டிலிருந்து விலகி மறைந்தது.

“நம்ம தோஸ்த்தான் சார், பேச்சுத்து ணைக்காக கூட்டிட்டு வந்தேன்.பொதுவா தி.நகர் வரைக்கும்லாம் போறதில்ல. ஆனா, பொழப்புஇப்பவேறமாதிரி ஆகிடுச்சு.எல்லா இடத்துலயும் ஷேர் ஆட்டோ நிறைஞ்சுடுச்சு. அதனால, வேற வழியே இல்லாம கிடைக்குற சவாரிய ஏத்திக்க வேண்டியிருக்கு”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது குரலில் கூடியிருந்த பணிவும், பாவமும் கோபாலனை அவர்மீது இரக்கப்பட வைத்திருந்தது.

"உண்மைதாண்ணே... நானும் தினமும் சைட்டுக்கு, ஷேர் ஆட்டோலதான வரேன், இப்போலாம் ஆட்டோவ பாக்கவே முடியுறதில்ல"

"என்ன சார் பண்றது, முன்னாடி எல்லாம் நாங்க வச்சதுதான் சட்டம், எவ்ளோ கேக்குறோம்மோ, மறுக்காம கொடுத்துடுவாங்க, இப்போலாம் அப்படியா இருக்கு, தோ... ஐநூறு ரூபா ஆகுன்னேன்.. மேஸ்திரி, மூன்னூத்தி அம்பது ரூபாதான் தருவேங்குராரு.. எங்க கஷ்டத்த நல்லா புரிஞ்சவருதான்... ஆனா என்ன செய்ய?"

ஆட்டோ ஓட்டுனர்களின் ஆட்சி நடந்துக்கொண்டிருந்த சென்னையை கோபாலன் நன்கு அறிவான். ஏறும்போது கேட்கும் பணத்தை விடவும், இறங்கும்போது கூடுதலாக கொடுக்க வேண்டியிருக்கும். அதுவும் அதட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் குறைவேஇருக்காது. ஆனால், நிலைஇப்போது தலைகீழ். ஷேர் ஆட்டோக்கள், ஆட்டு புழுக்கையைப்போல நகர சாலையெங்கும் நிரம்பிக் கிடக்கின்றன. பிடித்த வண்டியில் ஏறிக்கொள்ளாலாம். கோபாலனேஎப்போதும் பாடல்கள் வழியும் ஷேர் ஆட்டோவில்தான் தேர்வு செய்து ஏறியமர்வது வழக்கம்.

"காய்கறி வெலக்கூட கொஞ்ச நாள்ல மளமளன்னு ஏறிடுச்சு சார், ஆனா நாங்க மட்டும் மீட்டர் பாத்துதான் பணம் வாங்கனுமாம், எங்களுக்குன்னு நிலையான கட்டணம் வாங்கக்கூட எங்களுக்கு உரிமையில்ல சார்"

ஆட்டோ இப்போது, புறநகர் பகுதியிலிருந்து பிரிந்து, பிரதான சாலையை நெருங்கிக்கொண்டிருந்தது. "போலீஸ்காரன் எவனாவது கேட்டா, மீட்டர் பணம்தான் பேசியிருக்குன்னு சொல்லிடுங்க சார், நம்ம பாடு அவனுக்கு தெரியாது. எது ஏறுனாலும், இறங்குனாலும் அவனுக்கு மட்டும் மொய் எழுதியாகனும், கழுகுக்கூட்டம் சார்"

உண்மைதான் என்று உள்ளுக்குள் நினைத்து சிரித்துக்கொண்டான் கோபாலன். நான்கு தினங்களுக்கு முன்புதான் நண்பன் ஒருவனை சந்திக்க அண்ணா நகர் வெஸ்ட் டிப்போ பகுதிக்கு சென்று பத்தரை மணி வாக்கில் திரும்பும்போது, அவனை வழி மறித்தபோலீஸ்காரர் ஒருவர், எப்படியாவது கொஞ்சம் பணத்தை அவனிடமிருந்து உருவிவிட வேண்டுமென்று, கோபாலனை துருவித் துருவி விசாரித்து துன்புறுத்தினார்.

"பஸ் பிடிக்க போய்கிட்டு இருந்த என்னையே ஒரு போலீஸ்காரர், வழிமறிச்சு பணம் பாத்துடலாம்ன்னு எவ்வளவோ முயற்சி பண்ணினார்ண்ணே.. உங்களுல்லாம் சொல்லவா வேணும்"

"பெரிய வழிப்பறிக் கொள்ளையாவுல இருக்கு. ஆனா, எல்லாரையும் அப்படி சொல்லிட முடியாது சார். நிறைய நல்ல போலீஸ்காரங்களும் இருக்காங்க. ஏனோ நம்ம வழியில குறுக்கிடுறவங்க மட்டும், இப்படி யாவே இருக்காங்க. எல்லாம் நேரம் சார்"

பேச்சு நீண்டுகொண்டேப்போனது, ஆட்டோ இப்போது கிண்டி பாலத்தின் அடியில் புகுந்துக்கொண்டிருந்தது. மணி மூன்றே காலை நெருங்கி சுழன்றது. இன்னும் சற்று நேரத்தில் தி.நகரை அடைந்து தன் காலுக்கடியில் கிழ ஆமைபோல கிடந்த எஞ்சினை போட்டுவிட்டு, மயிலாப்பூருக்கு ஓடிவிடலாம் என்று கோபாலன் எண்ணிக் கொண்டான். இவ்வளவு நேரமும் கோபாலனின் பக்கத்தில் வாய் திறவாமல், வெறுமனே ஆட்டோக்காரருக்குஒத்திசைத்துக் கொண்டிருந்த அவரது நண்பர்,

"எழவு, வெங்காயம் விலைக்கூட ஏறிடுச்சு, அதுக்கெட்ட கேடுக்கு..." என்று தன் கணக்கை துவங்கி வைத்தார்.

"வெறும் தோளுதான்... அதுக்குக்கூட அவ்ளோ மதிப்பு. சரி! அடுத்த மாசம் அமாவாசைக்கு குன்றத்தூர் பக்கத்துல்ல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்ம தோஸ்த்தான் சார், பேச்சுத்துணைக்காக கூட்டிட்டு வந்தேன். பொதுவா தி.நகர் வரைக்கும்லாம் போறதில்ல. ஆனா, பொழப்பு இப்ப வேற மாதிரி ஆகிடுச்சு. எல்லா இடத்துலயும் ஷேர் ஆட்டோ நிறைஞ்சுடுச்சு. அதனால, வேற வழியே இல்லாம கிடைக்குற சவாரிய ஏத்திக்க வேண்டியிருக்கு

இருக்குற கோவிலுக்கு குடும்பத்தோடு போயிட்டு வரலாமா?"

பேச்சு இப்போது அவர்களுக்குள்ளாக சுற்றிக்கொண்டிருந்தது. கோபாலனுக்கு கோவில் சமாச்சாரங்களில் எவ்வித பிடிப்பும் இல்லாததால், கண்களை வெளியே மேய விட்டான்.

"நானே கேக்கணும்னு, நினைச்சேன் மச்சி...அவசியம்போயிடலாம்..பணமெல்லாம் பாக்காத. நான் பாத்துக்குறேன்.

ரெண்டு குடும்பமும் ஒண்ணா போயி எவ்ளோ நாளாகுது"

"கட்டாயம் போகணும் மச்சி. ரொம்ப வருஷமா போகணும் போகணும்ன்னு பாக்குறேன். ஆனா, ஒருமுறைக்கூட போகவே முடியல"

"எது இயேசு கோவிலுக்காக, ரெண்டு வருஷம் முன்னாடிதாண்டா நாம ரெண்டு பேரும்போயிட்டு வந்தோம்...ஒருமுறைக்கூட போவலங்குற..?"

"இயேசு கோவிலுக்கு யார் போகாம இருக்கா... நான் சொல்றது முருகன் கோவிலுக்குடா. ரொம்ப அழகான கோவிலு"

"ஒரு கிருஸ்துவனா இருந்துக்கிட்டு, முருகன் கோவிலுக்கு போகணும்ங்கிறியே, அறிவில்ல உனக்கு"

"நமக்கு அந்த பேதமெல்லாம் இல்லப்பா... ஏன் சார்.. நீங்க என்ன சார் சொல்றீங்க?" ஆட்டோ ஊர்ந்துக்கொண்டிருந்த பாலத்தில் கோபாலனின் பார்வைகொத்தியிருந்ததால், ஆட்டோ ஓட்டுனரும், அவரது நண்பரும் பேசிக்கொண்டதுகுறித்துஎவ்விதபிரக்ஞையும் இல்லாமல்,

"என்னது வெங்காயம், பத்தியா கேட்டீங்க..." என்றான்.

சட்டென்று அதிர்ந்த ஆட்டோ ஓட்டுனர், "அதில்ல சார், கடவுள் பத்தி கேட்டேன், எந்த கடவுள கும்பிடுவீங்க?"

"நமக்கு வெங்காயமும், கடவுளும் ஒண்ணுதாண்ணே.. ரெண்டுமே உள்ள ஒன்னுமில்லாதது" அயர்ச்சியாக இருந்தது கோபாலனுக்கு. மருத்துவரை பார்த்துவிடும் நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அவனிட மிருந்து நழுவிக்கொண்டிருந்ததால் கடவுளை பற்றிய சர்ச்சைக்குள் அவன் சிக்க விரும்பவில்லை. "கரெக்ட் சார், அதான் என் எண்ணமும்" ஆட்டோ ஓட்டுனருக்கு கோபாலனின் பதில் திருப்தி அளிக்கவில்லை என்றாலும், வலிந்து ஒரு நல்ல சவாரியை பகைத்துக்கொள்ள அவர் தயாராயில்லை. அப்போதைக்கு கடவுளை விடவும், அவருக்கு சவாரிதான் முக்கியமாக இருந்தது.

"அண்ணே... கொஞ்சம் சீக்கிரம் போங்கண்ணே... நான் நாலு மணிக்கு... மயிலாப்பூர் போயாகணும்.." சொல்லிவிட்டு பின்னால் சாய்ந்து உட்கார்ந்து, முன்னாலிருந்த கண்ணாடியில் பிரபலித்துக்கொண்டிருந்த ஆட்டோ ஓட்டுனரின் கழுத்தைப் பார்த்தான். அதில்ஒருசிலுவைஊசலாடிக்கொண்டிருந்தது. கடவுளை தாங்கிப்பிடிக்கக்கூட ஒரு துணை தேவைப்படுகிறது என்று நினைத்து, தன்னுள் புழுங்கிக்கிடந்த மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

நொடிகள் நழுவி மறைந்தன. ஆட்டோ இப்போது ஓர்க்ஷாப்பின் வாயிலில் நின்றது. கோணியில் சுற்றப்பட்டிருந்த எஞ்சினை ஆட்டோ ஓட்டுனரும், அவரது நண்பருமாக பிடித்துஇழுத்து ஓர்க்ஷாப்பின் உள் தரையில் பரப்பினார்கள். கோபாலன் மேஸ்திரிக்கு ஃபோன்செய்தான்.

"மேஸ்திரி. கடையில இறக்கியாச்சு, நான் கிளம்புறேன்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“அய்யா... அடிக்காதீங்கய்யா... மன்னிச்சிடுங்கையா.. எனக்கு கண்ணு தெரியாதுங்கையா... குருட்டு பாவியா நானு...” என்று விரலை தரையில் படரவிட்டு எதையோ கண்டெடுத்தவர், அந்த திடமான பொருளை தன் உதட்டில் வைத்து மெல்ல மனதை வதைக்கக்கூடிய இசையை உமிழத் துவங்கினார்.**

“இருப்பா... ஃபோன ஓர்க்ஷாப் குமாராண்ட குடு..” என்று அவரசப்படுத்த, கோபாலன் வேறு வழியின்றி, ஃபோனை குமாரிடம் கொடுத்துவிட்டு, நகத்தை கடித்தபடி அவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டு வெளியே நின்றிருந்தான்.

“ஆமாண்ணே..மைனர் மிஸ்டேக்தான். தோ.. கொஞ்சம் நேரத்துல சரியாகிடும்.... ம்ம்ம் கையோட கொடுத்து விடுறேன்.., இந்தாப்பா மேஸ்திரி பேசனுங்குறார்” ஓர்க்ஷாப் குமார், ஃபோனை மீண்டும் கோபாலனின் கைகளிலேயே திணித்தான்.

நிலமையை புரிந்துக்கொண்ட கோபாலன் “அண்ணே.. நான் ஹாஸ்பிடல் போகணும்...” என்று இழுத்து சொல்லி முடிப்பதற்குள்,

“நாளைக்கு போனா என்னா குறைஞ்சா போயிடுவ... வேலை முக்கியம்ப்பா... என்ஜின் அதைவிட முக்கியம்... சின்ன மிஸ்டேக் தானாம்... நீ இருந்து அப்படியே ஏத்திகிட்டு வந்து சைட்ல போட்டுரு..., நான் பேசிட்டேன்” சட்டென்று கட் செய்து விட்டார்,

கோபாலனுக்கு கண்களில் அழுகை திரண்டெழுந்தது. மனம் விம்மி புடைத்துக்கொண்டு நின்றது. மரியாதை யற்றவாழ்க்கை. அப்படியே சென்று மேஸ்திரியின் முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிடலாம் போல தோன்றியது.

சில நொடிகள் உடல் அதிர அப்படியே நின்றிருந்த கோபாலனை, கடக்க முயன்ற ஒருவர் சட்டென்று அவனை இடித்துவிட்டு கீழே விழுந்துவிட்டார்.

யாரின் மீது முட்டினோம் என்றுக்கூட உணர முடியாமல், வெறிக்கிளம்பி கீழே கிடந்த மனிதரின் இடுப்பின் மீது ஓங்கி ஒரு உதை விட்டான் கோபாலன்.

“அய்யா... அடிக்காதீங்கய்யா... மன்னிச் சிடுங்கையா.. எனக்கு கண்ணு தெரியாது ங்கையா... குருட்டு பாவியா நானு...” என்று விரலை தரையில் படரவிட்டு எதையோ கண்டெடுத்தவர், அந்த திடமான பொருளை தன் உதட்டில் வைத்து மெல்ல மனதை வதைக்கக்கூடிய இசையை உமிழத் துவங்கினார்.

இசையின் அலையால் மனம் கரைந்த கோபாலன், சட்டென்று சுய நினைவுக்கு வந்தவனாய், அவரை மேலே உயர்த்திவிட முயன்றனர்,

அதற்குள் வேறு இருவர் “ஏம்பா. கண்ணு தெரியாத ஆளப்போயி.. அடிக்கிறியே உனக்கு அறிவில்ல...” என்று திட்டயபடியே அவரது தோளைப் பற்றி மேலே தூக்கிவிட்டனர்.

“இல்லங்க.. சாரு மேல தப்பில்ல.. நான்தான் தெரியாம.. அவர்மேலமோதிட்டன்... அவர திட்டாதீங்க “ என்று கோபாலனுக்கு பரிந்துப்பேசிய கண் பார்வையற்ற முதியவரின் கழுத்தில் சிலுவையில் இயேசு தொங்கிக் கொண்டிருந்ததைப்பார்த்தான் கோபாலன்.

மனம் மெல்ல பொசுங்கி உயிர் அறுந்து அதே இடத்தில் விக்கித்து நின்றது. காதுகளில் “சார்.. எஞ்சின் ரெடியாகிடுச்சு சார்.. கிளம்பலாம்.... அவர விடுங்க... ரோடு எங்க இருக்கு... இங்க வந்து இடிச்சுட்டு....” ஆட்டோக்காரர் சமாதானம் கூறி அவனது மன வலியை துடைக்க முற்பட்டார்.

கோபாலன் உடல் கூச ஆட்டோவில் நுழைய, தொலைவில் மெல்ல ஜனக் கூட்டத்தில் தன் உதட்டு குவியத்திலிருந்து மென் இசையை மேலெழுப்பி பரப்பியபடியே கரைந்துக்கொண்டிருந்தார் கண்பார்வையற்ற முதியவர். ●

# நோர்வே தமிழ்த் திரைப்பட விழா விருதுகள் அறிவிப்பு





தமிழ்த் திரைப்படங்கள் திரையிடல் மற்றும் விருது வழங்குதலை மையப்படுத்திய நோர்வே தமிழ் திரைப்பட விழா முதலாவதுமுறையாக நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் 2010ல் தொடங்கியது. VN இசைக்கனவுகள் என்ற தனியார் கலை நிறுவனத்தினால் தொடர்ச்சியாக ஒவ்வோராண்டும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற நோர்வே தமிழர் திரைப்பட விழா இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் நாள் முதல் 27ம் நாள் வரை இடம்பெறவுள்ளது.

தமிழ்ச்சூழலில் ஓரளவு படைப்பு நேர்த்திமிக்க, தரம்மிக்க திரைப்படங்கள் என்று அடையாளப்படுத்தப்படுகின்ற திரைப் படங்களும், வியாபார ரீதியில் வெற்றி பெற்ற திரைப்படங்களும் திரையிடலுக்குத் தெரிவு செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு 15 வரையான திரைப்படங்கள் தெரிவாகியுள்ளன.

இவ்விழாவில் திரையிடப்படுகின்ற மற்றும் விருதுகளுக்குத் தெரிவாகுகின்ற திரைப்படங்கள், படைப்பாளிகள் தொழில் நுட்பக்கலைஞர்கள் பெரும்பான்மையானவர் கள் தமிழ்நாட்டு திரைத்துறை சார்ந்தவர்கள். ஈழத்தைச் சேர்ந்த புலம்பெயர் படைப்பாளி களின் திரைப்படைப்புகளும் திரையிடப்படு கின்றன. அந்த வகையில் கனடாவில் உருவாக்கப்பட்ட லெனின் சிவம் அவர்களின் ஒரு துப்பாக்கியும் ஒரு கணையாழியும் (A GUN & A RING) திரைப்படம் இந்த ஆண்டு விருதினை வென்றுள்ளது. அவுஸ்ரேலியா, கனடா, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், பிரித்தானியா ஆகிய நாடுகளிலிருந்து குறும்படங்கள் போட்டிக்கு அனுப்பப்பட்டிருந்ததாக இம்முறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்க மீன்கள், சென்னையில் ஒருநாள், ஹரிதாஸ், ஓநாயும் ஆட்டுக்குட்டியும், ஆதலால் காதல் செய்வீர், ராஜா ராணி, A Gun & A Ring (கனடா), Paranoid Patient (டென்மார்க்), பரதேசி, விடியுமுன், சூதுகவ்வும் ஆகிய திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளதோடு, போட்டிக்கும் தெரிவாகியுள்ளன.

சிறந்த குறும்படம், சிறந்த நடிகர், சிறந்த இயக்குனர், சிறந்த கதை, சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த பாடல் காணொலி, சிறந்த ஆவணப்படம், சிறந்த வரைகலைப் படம் (Animation) ஆகிய படைப்பாக்க மற்றும் தொழில்நுட்பப் பிரிவு களுக்குரிய விருதுகள் வழங்கப்படுகின்றன. தமிழர் விருது, நள்ளிரவுச் சூரியன் விருது ஆகிய பெயர்களில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டின் சிறப்பு அம்சங்களாகவும் இவ்விழாவின் முன்னேற்றத்தில் ஒன்றாகவும் கருதக்கூடியது, ஈழத்தைச் சேர்ந்த முத்திரை பதித்த ஒரு படைப்பாளியினதும், மற்றுமோர் கலைஞருடையதும் பெயர்களில் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழ் மற்றும் இந்திய திரைச்சூழலில் திரைமொழி சார்ந்தும் ஒளிப்பதிவு சார்ந்தும் தனித்துவம் மிக்கதோர் அடையாளமாகத் திகழும் மறைந்த பாலு மகேந்திரா மற்றும் ஈழத்தின் தலைசிறந்த தனிநபர் நகைச்சுவை மற்றும் நாடகக் கலைஞர் கே.எஸ் பாலச்சந்திரன் ஆகியோரது பெயர்களில் விருதுகள் இந்த ஆணடு மட்டுமல்லாது தொடர்ச் சியாக ஒவ்வோராண்டும் வழங்கப் படவுள்ளன.

புலம்பெயர் நாடுகளில் உருவாக்கப்படும் குறும்படங்கள் மற்றும் பாடல் காணொலிக் காட்சி (Music Video) திரையிடலோடு, அவற்றில் சிறந்த படைப்புகளுக்கு விருது வழங்குகின்றமையையும் இத்திரைப்பட விழா வின்சிறப்பாகக் குறிப்பிட முடியும். இது குறும்பட மற்றும் திரைப்பட முயற்சிகளில் ஈடுபடும் புலம்பெயர் கலைஞர்களுக்கு, குறிப்பாக இளைய கலைஞர்களுக்கு உந்துதலாக அமையக்கூடியது என்பதும் குறிப்பிடத்தக்கது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆமந்துறையும் இடையன்குடியும்

பாளையங்கோட்டை சேவியர் பள்ளியில் பத்தாவது தேறுவேன் என்று துளிகூட நான் நினைத்திருக்கவில்லை. தேர்வு முடிவுகள் பற்றியான எந்த பதைபதைப்பும் என்னிடம் கிடையாது. இன்று என் பிள்ளை ஆறாவதுதான் படிக்கிறான். ஆனால் ஒவ்வொரு சாதாரண வகுப்புத் தேர்வுக்குக்கூட அவன் மெனக்கெடுவதைப் பார்த்தால் என் பிள்ளையா இப்படி இருக்கிறது என்று ஆச்சரியமாய் இருக்கிறது. தேர்வு முடிவுகள் வெளியாகியிருந்த தினத்தந்தி நாளிதழில் என்னுடைய எண்ணும் தேர்வானவர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. படிப்பு என்றால் என்ன? அதற்கான தேவை என்ன? படித்து அந்தப் படிப்பின் மூலம் நான் என்னவாக விரும்புகிறேன் என்று எதுவுமே அறியாத ஒரு மந்தமான நிலை. என்னுடைய இந்த நிலை புரிந்ததனால்தானோ என்னவோ நத்தம்பட்டிக்காரன்லூர்தையாவுடன்சேர்த்து என்னையும் தியான வகுப்பில் சேர்த்து விட்டிருந்தார் அப்போதைய உதவி தலைமை ஆசிரியரும், விடுதிக் காப்பாளருமான ஃபாதர் ஆரோக்கியசாமி.'ஜமா' என்றதியான மந்திரத்தை உச்சரித்துக்கொடுத்தவர் அவர்.

விடிகாலையிலேயே பாதிரிமார் தங்கும் விடுதியின் முன்னால் விழுந்து கிடக்கும் வெளவால் கடித்த பாதாம் பழங்களையும் எடுத்து வந்து தருவார். புறாவைப்போல் கபடமற்றவரான அவரை என்னோடு விடுதியில் படிக்கும் பசங்கள் கோப்ஸ், கோப்ஸ் என்று கிண்டலாக அழைப்பார்கள். கோபம் வந்தால் நாக்கை பாம்பைப்போல் இடதுபுறமும்,வலதுபுறமும் நீட்டியபடியேஇருப்பார். பின்னாளில்தூத்துக்குடியில்சவேரியானாவில் தள்ளாத வயதில் அவரைச் சந்தித்திருக்கிறேன். அதே நாக்கு நீட்டல்தான் ஆனால் வேகம் குறைந்திருந்தது. எப்போதும் சோகம் தோய்ந்த ஒரு புன்சிரிப்பு. பேச்சுவாக்கில் முதுமையில் தனிமை வாட்டுவதையும், பதவியில் இருக்கும் இளம் குருமாரின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்சியத்தையும் கோடிட்டுக் காட்டினார். துறவற சபைகளில் வயதான கன்னியாஸ்திரிகள், குருமாரின் நிலை மிகவும் பரிதாபமாகவே இருக்கிறது. தங்கள் உள்ளக் கிடக்கையை யாரிடமும் சொல்ல முடியாமல் தவியாய் தவிக்கிறார்கள்.

ஆமந்துறைமுதுபெரும் ஆசிரியர்செல்வமரியானின் புண்ணியத்தில் இடையன்குடி கால்டுவெல் மேல்நிலைப்பள்ளியில் விஞ்ஞானப் பாடப் பிரிவில் சேர்ந்திருந்தேன். ஓய்வு பெற்றிருந்தாலும் நல்லாசிரியராய் இருந்ததால் அங்கு அவர் சொல்லுக்கு மரியாதை இருந்தது. ஆமந்துறையில் தைரியநாதர் குருசடியருகே பெரிய அரசமரம், வாலிபத்தில் அவரே தன் கைபட வைத்து தண்ணீர் ஊற்றிப் பராமரித்ததாகச் சொல்வார்கள். ரயில் என்ஜின் போல் வாயிலிருந்து புகைவர நடந்தபடியே இருப்பார். புலிக் கொடி பிடித்தமான சுருட்டு. பக்கத்து ஊர்களுக்கு சென்றுவர சைக்கிள்தான் வாகனம். அதனால்தான் முதிர் வயதிலும் திடகாத்திரமாகவே இருக்கிறார். இன்றும் ஆமந்துறை சென்றால் முடிந்தவரை அவரைச் சந்திக்க முயலுவேன்.

இடையன்குடியில் இருபாலாரும் சேர்ந்து படிக்கும் சூழல். கோட்டு போட்ட தலைமை

**விடிகாலையிலேயே பாதிரிமார் தங்கும் விடுதியின் முன்னால் விழுந்து கிடக்கும் வௌவால் கடித்த பாதாம் பழங்களையும் எடுத்து வந்து தருவார். புறாவைப்போல் கபடமற்றவரான அவரை என்னோடு விடுதியில் படிக்கும் பசங்கள் கோப்ஸ், கோப்ஸ் என்று கிண்டலாக அழைப்பார்கள். கோபம் வந்தால் நாக்கை பாம்பைப்போல் இடதுபுறமும், வலது புறமும் நீட்டியபடியே இருப்பார்.**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆசிரியர், கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு முடித்த கையோடு 'பெல் பாட்டம்' அணிந்து வந்திருந்தஇளம்வயதுவாத்திமார்.கத்தோலிக்க ஜெப ஆராதனைகளுக்கு பழக்கப்பட்டிருந்த எங்களுக்கு "எங்கள் அருமையான யேசு கிறிஸ்து ராஜா, இந்த அருமையான காலை பொழுதிற்காக உமக்கு ஸ்தோத்திரம். உம் சமூகத்தின் முன் கூடியிருக்கும் பிளைகளான எங்களை கண்ணோக்கிப் பாரும்..." என்று காலையில் நடக்கும் அசெம்ளியில் தலைமை யாசிரியர் ஜெபிக்கும் காட்சி வித்தியாசமாய் இருந்தது.

பால்ராஜ் வாத்தியார் ஆங்கில வகுப்பில் ஹேப்பி பிரின்ஸ், லண்டன் மாநகர கோபுர உச்சியிலிருந்துஒருஊர்க்குருவியின்உதவியோடு சிரமப்படும் ஏழைகளுக்கு உதவும் கதையையும், சார்லஸ்டிக்கன்சின் நகைச்சுவையான,'பிக்விக் பேப்பர்ஸ்', ஜே.பி.பிரிஸ்ட்லியின் 'ஆண் டுயிங் நத்திங்' போன்றவற்றையும் தத்ரூபமாக விவரிப்பார்.

அடிக்கடி எழுந்து கேள்வி கேட்பேன். உற்சாகமாய் பதில் சொல்வார். பெரிய மேதாவி ஒருவன் வந்துவிட்டான் என்று

**தாழையார் மகள் சேசம்மாக்கா வந்து இரால் மீன் கொண்டைகளை உடைத்துத் தருவாள். கடல் தண்ணியிலே கால் நனைக்காத ஆமந்துறையின் பெரும்பாலான மெனக்கெடர்கள் காரு, பங்குளா என பணக்காரர்கள் ஆனதற்கு இந்த இரால் மீன் தொழிலே காரணம்.**

நினைத்திருப்பார். ஆனால் எல்லாமே முதல் தேர்வு வந்த ஒருசில மாதங்களுக்குத்தான். "ஸ்பேரோ, ஸ்பேரோ, லிட்டில் ஸ்பேரோ" என முதல் வரிசையில் இருக்கும் என்னை செல்லமாகஅழைத்தவர்முதல்இடைத்தேர்வில் என் லட்சணத்தைப் பார்த்துவிட்டு "கழுதை தேய்ந்து கட்டெறும் பான கதை" என்றார். தமிழ் வாத்தியார் குசேல பாண்டி வந்தாலோ நேர், நேர் தேமா, நிரை நேர் புளிமா... "எலேய் தமிழ்ல பெசலடிச்சவமெல்லாம் முன்னால வாங்கடே" என்றார். முதல் ஆளாக நான். தேர்வு காலங்களில் ஞாபகத்தில் வந்து மதிப்பெண் பெற்றுத்தராத பாடங்களும், பாடல் வரிகளும் இன்று அருவியாய் வந்து கொட்டுகின்றன. அது எப்படி என்றும் எனக்கு புலப்படவில்லை. இன்றும் என் ஜெபவேளைகளில் முன்னிலை வகிப்பது,

"சிந்தித்த எல்லாம் என்
சிந்தையறிந்தே உதவ
வந்த கருணை மழையே – பராபரமே
கன்றினுக்கு சேதா
கனிந்திரங்கல் போலெனக்கு
என்றிரங்குவாய்க் கருணை
எந்தாய் பராபரமே
ஆழித் துரும்பெனவே
அங்குமிங்கும் உன் அடிமை
பாழில் திரிவதென்ன
பாவம் பராபரமே
வித்தின்றி யாதும்
விளைவதுண்டோ நின்
அருளாம் சித்தின்றி
யாங்களுண்டோ
செப்பாய் பராபரமே
நெஞ்சகமே கோயில்
நினைவே சுகந்தம்
அன்பே மஞ்சன நீர்
பூசை கொள்ள வாராய் பராபரமே."

மேல்நிலை முதலாண்டில் படித்த தாயுமானவரின் பாடல் வரிகள், இன்றும் பசுமரத்தாணியாய் நினைவில்..

இடையன்குடி தியாகராசனும், சிமிழி வாத்தியார் மகன் ரோலண்டும், கீழ உவரி சுயம்பானந்தனும் முது முத்தமிழ்மொழி கதிரேசனும், கூடங்குளம் தாணுவும் மேல் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் அறிமுகமானார்கள். ஆங்கிலத் தேர்வு ஒன்றில் திருக்குறள் பற்றிய கட்டுரையை, "திருக்குறள் இஸ் 2 அடிகளை உடையது" என்று எழுதி பள்ளியெங்கும் பரபரப்பைக் கிளப்பிய தாணு பின்னாளில் கள்ளிகுளம் கல்லூரியிலும் என்னோடு படிக்க வந்தான்.

ஆத்தாவுக்கு ஆமந்துறையிலேயே ஆசிரியை வேலை கிடைத்து அய்யாவும் குடும்பப் பொறுப்புணர்ந்து எங்களோடு இணைந்து ஆமந்துறையின் வடக்குத் தெருவில் கல்வீடு கட்டி குடியிருந்த காலம். சிக்கனமாய் சேர்த்திருந்த பணத்தில் மணப்பாட்டுக்காரன் ஒருவனிடம் 'நொய் இனிப்புக்காக' இழந்த பத்தாயிரம் போக மீதியை வைத்து கடற்கரையில் கட்டுவை கட்டியிருந்தாள் ஆத்தா. இரால் மீன் தொழில் நடக்கும் காலங்களில் கட்டுவைக்கு பணம் வாங்கியவர்கள் தாங்கள் பிடித்துவரும் இரால் மீன்களை மட்டும் கட்டுவைக்கு பணம் வாங்கியவர்களிடம் விற்க வேண்டும். எங்களுக்கு நடுத்தெருவில் ஒரு வலைக் காரரும் கிழக்கே செல்வமாதா கோயில் பக்கம்ஒரு வலைக்காரரும் இருந்தார்கள். அவர்களிடமிருந்துஎண்ணிக்கையில்எடுக்கும் இரால் மீன்களை ஏற்றுமதி நிறுவனங்களுக்கு நிறுவைக்குப் போடுவோம். எக்ஸ்மேரியா, ஓசானிக், இந்தியா சீ பூட்ஸ், கிங்ஃபிசரிஸ் என ஆமந்துறைக்கு வரும் பெரும்பாலான ஏற்றுமதி கம்பெனிகள் எல்லாம் கேரளத்தை சேர்ந்தவை. அந்தக் காலத்தில் இந்த இரால் மீன் வண்டிகளைக் கண்டாலே ஆனந்தம்.

கடற்கரையிலிருந்து இரால் மீன்களை மூங்கில் கூடைகளில் வைத்து தலை வலிக்க தூக்கி வருவோம். இடையன்குடியில் பள்ளி நேரம் முடிந்து வந்தால் வெக்கு வெக்கென கடற்கரைக்கு ஓடவேண்டும். சில வேளைகளில் நடுச்சாமம் தப்பியும் கட்டு மரங்களை கரைபிடிப்பார்கள். கொண்டை யோடு வீட்டிற்கு கொண்டு வரப்படும் இரால்மீன்களின்கொண்டைகளை உடைத்து ஏற்றுமதிக் கம்பெனிக்காரர்கள் கொண்டு வந்து கொடுக்கும் ஐஸ்கட்டிகளை உடைத்து போட்டு அவர்கள் வரும் நேரம்வரை விழித்திருந்து நிறுத்துக் கொடுக்க வேண்டும். தாழையார் மகள் சேசம்மாக்கா வந்து இரால் மீன் கொண்டைகளை உடைத்துத் தருவாள். கடல் தண்ணியிலே கால் நனைக்காத ஆமந்துறையின் பெரும்பாலான மெனக்கெடர்கள் காரு, பங்குளா என பணக்காரர்கள் ஆனதற்கு இந்த இரால் மீன் தொழிலே காரணம். 'கார்ட்டல்' என்று அறியப்படும் ரகசிய ஒப்பந்தம் அந்த நாளிலேயே ஆமந்துறை மெனக்கெட இரால் மீன் ஏஜெண்டுகளிடம் இருக்கக் கண்டிருக்கிறேன். ஆமந்துறையில் இரால் மீன்களுக்கான விலை நிர்ணயம் பண்ணும் நாட்கள் பட்ஜெட் அறிவிப்பு நாட்களைப் போல பரபரப்பானவை. சீசன் ஆரம்பிக்கும் வேளையில் எழுபத்தி ஐந்து காசுகளுக்கு வாங்கப்படும் ஒரு இரால்மீன் சீசன் முடியும் வேளையில் இரண்டு ரூபாய் கூட தாண்டிவிடும். அதுபோல ஒரு கிலோ எழுபத்தி ஐந்து ரூபாய்க்கு விற்கப்படும் இரால் மீன்கள் சீசன் முடிவில் இருநூறு ரூபாய்கூட தாண்டிவிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீசன் ஆரம்பத்தில் ஒரு கிலோவிற்கு முப்பதிலிருந்து முப்பத்தி ஐந்து வரை தேறும். இரால்மீன்கள் சீசன் முடிவில் பதினைந்து / இருபது மீன்களே ஒரு கிலோ என்ற நிலை வரும். காரணம் வளர்ச்சி. ஆடி மாதத்தில் மேற்கு கடற்கரையிலிருந்து பல்கிப் பெருகி நீவாட்டு சாடைக்கு வழிந்து வரும் இந்த மீன்கள் ஆமந்துறை மடையில் நின்றுவிடும். இரால் மீன்களை ஆறுமாதத்திற்குள்ளாகவே பிடித்துவிட வேண்டும் என்பார்கள்.

கடற்கரையில் காலகாலமாகவே ஒரு சொலவடை உண்டு. "பட்டவனுக்கு பட்டுலுக்கி படாதவனுக்கு ஒண்ணுமில்ல." அதுபோல முன்னேறியவர்கள் முன்னேற, முன்னேறாதவர்கள் முடங்கிக்கிடக்கிறார்கள். நிலம் போல் கடலுக்கு உரிமையில்லாமல் போனாலும் தொழில் செய்வதற்கான சாதனங்கள் பெரும்பங்கு செலவினத்திற்கு வழிவைத்து விடுகின்றன. அப்பன் காலத்தில் கட்டுவைக்கு வாங்கிய பணம் திருப்பி செலுத்தப்படாமல் பிள்ளைகள் காலத்திலும் தீராக் கடனாய் தொடர்கிறது. காலகாலமாய் இந்த மக்களோடுதான் என் உறவு தொடர் கிறது. இவர்களுக்கு ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்று மனம் பாடாய் படுகிறது.

ஆமந்துறைக்கும், இடையன் குடிக்குமான தூரம் எனக்கு ஒருபோதும் ஒரு பொருட்டாய் தெரிந்ததே இல்லை. நிலப்பரப்பை ரசித்தபடியே என் கால்கள் பயணித்திருக்கின்றன. கொதிக்கக் கொதிக்க வடித்த கஞ்சிக்குள் தேங்காய் துவையலைப் போட்டுத் தருவாள் ஆத்தா. மதியம் பாத்திரத்தைதிறந்தாலே கஞ்சியும் துவையலும் கலந்த மணம் வரும். பசி வயிற்றை கிள்ளும் மதிய நேரம், அந்த உணவு தேவாமிர்தம் போல் சுவையாக இருக்கும். பள்ளியின் பின்புறமுள்ள புளிய மரத்து நிழலில், நல்ல இளங்காற்றில் உண்ட மயக்கத்தோடு அயரும் அந்த வேளைகளை நினைத்தாலே மனம் ஏங்குகிறது. கைக்கு எட்டிய உயரத்தில் கிளிமூக்கு மாங்காயும், இனிக்கும் புளியும் கண்களை உறுத்தி கைநீட்ட வைக்கும். கிரகோரி வாத்தியார் தோப்பில் குண்டு குண்டாய் கருநீல நிறத்தில் கத்தரிக்காய்கள், நீட்டு நீட்டாய் வெண்டைக்காய்கள், சாலையோரத்தில் மஞ்ச மஞ்சளாய் பொன்னாவரி பூத்திருக்கும்.

வழிநெடுக வளர்ந்து நிற்கும் நாட்டு உரிமரங்கள் பூக்கும் காலங்களில் ஒருவகையான தேன்வாசம் வீசும். பொன் வண்டுகளும், தேனீக்களும் அவற்றைச் சுற்றி ரீங்காரமிடும். பனை மரங்கள் பாளை சீவி பதனீருக்காக கலையம் கட்டும் காலங்களில் மற்றொரு வகையான சுண்ணாம்பு கலந்த சுகந்த மணம் வீசும். அந்த மணமே மனதிற்கு தெம்பையும் சூழலுக்கு இனிமையையும் தந்தது. தூரம் தூரமாய் தெரியவேயில்லை. மனதிற்குஇனிமை யான நாட்கள் அவை. அந்த நாட்களையும் மனிதர்களையும் நினைத்தாலே மனதிற்குள் உற்சாகம் ஊற்றெடுத்துப் பாய்கிறது.

●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலுசொலி

"சல்க் சல் சல்க் சல் சல்க் சல்"

மிகத் தெளிவாகக் கேட்டது கொலுசு சத்தம். யாரோவொரு பெண்மணி மாடிக்கு ஏறிவருகிறாள் என்றுதான் முதலில் நினைத்தான் சிவா. மொட்டை மாடியில் எதையோ காய வைத்ததை எடுக்க வருவதானாலும் நடு இரவில் பனிரெண்டுமணிக்கும் மேலாகவா எடுக்க வருவார்கள் என்ற எண்ணம் உதித்தபோதுதான், மனவில்லிலிருந்து பயஅம்பு ஒன்று தொண்டைக்குள் பாய்ந்தது. படுத்தபடியே மீண்டும் உற்றுக்கேட்டான். அதே சத்தம் தெளிவாகக்கேட்டது.

இந்த வீட்டிற்கு குடிவந்து இரண்டு மாதங்கள்தான் ஆகிறது. மூன்றாவது மாடியின், மொட்டைமாடியில் ஓர் ஓரமாக கட்டப்பட்டிருந்தது வீடு. வாடகை சற்று குறைவு என்பதால், மூன்று மாடி ஏறியிறங்குவது அப்படியொன்றும் சிரமமானதல்ல என அவனுக்காக அடித்து சொன்னார்கள் அவனின் அம்மாவும் மனைவியும்.

இந்த இரண்டு மாதங்களில் இன்றுதான் அதிகநேரம் விழித்திருக்கிறோமோ என்ற சந்தேகம் சிவாவுக்கு எழுந்தது. இரவு தூக்கம் என்ற வான்மழை உழைக்காதவனுக்கு வெறும் தூறலாகவே வருகிறது. உழைப்பவருக்கோ அடைமழையென அடிக்கிறது. இன்றுமட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்படித்துக்கொண்டிருந்த புத்தகத்தின் சுவாரசியம் குடையென மாறி தன்னை கொஞ்ச நேரம் நனையவிடாமல் செய்து விட்டது என எண்ணினான்.

படித்த புத்தகங்களினாலும், பழகிய நண்பர்களினாலும் இவனுக்கு கடவுள் நம்பிக்கை இல்லாதிருந்தது. அதனாலேயே பேய் பற்றிய நம்பிக்கையும் இல்லாதிருந்தது. ஆனாலும், அந்த சத்தம் தலை நிறைய மல்லிகையும், வெள்ளை புடவையும் கட்டிய அழகிய இளம் பெண்ணான மோகினி என்ற பிம்பத்தை இவனுள் எழுப்பியது. பழைய ஜெகன் மோகினி ஜெயமாலினியும், புதிய ஜகன் மோகினி நமீதாவும் நினைவில் வந்துப்போனார்கள். உடனேயே இந்த நினைப்பு இங்கிருக்கும் மோகினியை அவமானப்படுத்தும் நினைப்போ? என்ற சிந்தனை எழுந்து சிரிப்பை வரவழைத்தது.

என்ன சத்தமாக இருக்குமிது!? என ஆழ சிந்தித்தான். மின் விசிறியின் சிறு பழுதின் காரணமாக ஏற்படும் சத்தமா?, அல்லது ஏதேனும் பூச்சிகளின் சத்தமா?என குழம்பினான். இரவின் அமைதியில் அந்த சத்தம் துல்லியமாகக் கேட்டது. எழுந்து வெளியே சென்று பார்த்துவிடலாம் என தீர்மானித்தான். மின்விளக்கைப்போட படுக்கையிலிருந்து எழுந்தபோது சட்டென அவன் கை பிடித்து இழுக்கப்பட்டது. ஒருகணம் அவன் உடல் உதறிவிட்டது. திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் படுத்திருந்த அவன் மனைவி அவனின் கரம் பற்றியபடி அவனைப் பார்த்து லேசாக சிரித்தாள். பெரிதாக சிரித்தே பழக்கப்பட்டவள் மெல்ல சிரிக்கிறாள். அந்த சிரிப்பை மூடுவதுபோல் உதட்டின் மீது ஒரு விரல் வைத்து "ஷ்" என்றபடி "எங்க போறிங்க?" என்றாள் மெதுவாக. இவன் வெளியே என்பதாக வாசல்பக்கம் கைக்காட்டினான். "சத்தம் கேக்குதுல்ல, சும்மா கம்முனு படுங்க" கண்டிப்புடன் சொல்லியபடி கைகளை இறுகப் பற்றிக்கொண்டாள். இவன் விடுவித்துக்கொண்டு வெளியே செல்லலாமா என யோசித்தான். ஆனால், வெளியே ஹாலில் அம்மா படுத்திருக்கிறாள். அவர்கள் விழித்துக்கொண்டால் நிலைமை இன்னும் மோசமாகும் என்பதால் பேசாமல் மீண்டும் படுக்கையிலேயே படுத்துக்கொண்டான்.

ஹால் என்றதும் நீங்கள் ஏதேனும் பெரிதாக நினைத்துக்கொண்டீர்களா?... ஆம் எனில் அதையே நான்கு பங்குகளாக ஆக்குங்கள். முறையே வரவேற்பறை, சமையலறை, படுக்கையறை, குளியலறை என பெயரிடுவீர்களானால் அதுவே அவன் வீடாகும். இப்பொழுது வடசென்னையில்கூட வாடகைக்கு வீடு கிடைப்பது என்பது, வேலை கிடைப்பது போன்றதொரு கடின மான காரியமாகிவிட்டது. வடசென்னையில் இவன் வசிக்கும் பகுதி புறநகர் பகுதியாக இருந்தது. சிறுவயதில் பனந்தோப்பாக, தென்னந்தோப்பாக, மாந்தோப்பாக, கீரைத் தோட்டமாக இருந்தது. கொய்யாத்தோப்பு, சோலைவாயில், கீரைத்தோட்டம் என்ற பெயரிலிருந்த அந்த சுற்று வட்டாரமெல்லாம், பெயருக்கேற்ற அழகெல்லாம் மொத்தமாக அழிந்து, தலைவர்களின் பெயர் கொண்ட, கடவுளர்களின் பெயர் கொண்ட நகர்களாக மாறிப்போனது.

தாத்தா, தகப்பனுக்கு "அந்த காலத்துல" என்று கால மாற்றத்தை கதைகதையாக சொன்னார். அவன் அப்பன் அவனுக்கு "இப்போ மாதிரியில்லடா அப்ப" என சமூக வளர்ச்சியை சலித்துப்போய் சொன்னார். ஆனால், இப்போதோ பொருளாதார மாற்றம் ஒரு தலைமுறை வரை பொறுப்பதில்லை. வளர்ச்சி என்ற பொய்யைப்பூசிக்கொண்ட இந்த வீக்கம் தம்மைப்போன்றவர்களை மாங்காத்தலைப் பையன்களாக்கி தமக்குத்தாமே புலம்ப வைத்துவிட்டதாக எண்ணினான்.

நகரம் எனும் புற்றுநோய் வேக மாக புறநகர் பகுதிகளில் எல்லாம் பரவி விட்டது. வெளியே தெரியாத அந்த நண்டுக்குடைச்சல் வலியில் உழைக்கும் மக்கள்தான் உருக்குலைந்துக்கிடப்பதாக அவனுக்கு தோன்றியது.

இந்த வீடு கிடைப்பதற்குள் இவன் படாதப்பாடுபட்டான். வாங்கும் சம்பளத்தில் சரிபாதி வாடகைக்கே சரியாக போகிறது. மாதத்தில் பாதிநாள் வெறும் வாடகைக்காகவே உழைக்க வேண்டியதானது.

இதற்குமுன் இருந்த வீடு கீழ்தளத்தில் இவர்களும், மேல்தளத்தில் வீட்டின் உரிமையாளரும் தங்கும்படியாக இருந்தது. பெரிய வாசல் கொண்டிருப்பதே உரிமை யாளர் மேல்செல்ல காரணமானது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறகுதான் புரிந்தது. தினமும் காலையும் மாலையும் கூட்டாக சேர்ந்து வாசல் கூட்டி இடுப்பொடிந்துப்போனார்கள் இவன் தாயும் மனைவியும்.

செல்லப் பிராணிகள் மீது இவன் மனைவிக்கு கொள்ளைப்பிரியம்., இவன் மீதும்தான். ஒருநாள் தெருவிலிருந்த ஒரு நாய்க்குட்டியை தூக்கி வந்து சொன்னாள். "அழகாயிருக்குப்பா !,என்னைப் பார்த்ததும் ஓடி வந்துச்சி !, நாம வளர்க்கலாமா !!".

ஏண்டி, இது என்ன பாமரேனியனா, இல்ல அல்சேஸனா !, வீட்ல வளர்க்க ??".

"ஏன், அதெல்லாம் தான் நாயா ?!, இவ குரைக்க மாட்டாளா ! பாசமா வாலாட்ட மாட்டாளா !,நீங்க வேணாப்பாருங்க, இந்த அழகி எப்படி இருக்கப்போறான்னு".

அப்படியேதான் "அழகி"யும் அழகாக வீட்டில் வளர்ந்தது. உணர்வுகளை சூழ்நிலைதான் தீர்மானிக்கிறது என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல, பிராணிகளுக்கும் பொருந்தும் என்பதை அப்போதுதான் சிவா உணர்ந்தான்.

ஆனால்,வீட்டின் உரிமையாளர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. நாயெல்லாம் வளர்க்கக்கூடாது என சாடைமாடையாக சொல்லிப்பார்த்து பின் ஒருநாள் கண்டிப்புடன் சொல்லிவிட்டார். இவனும் வேறு வழியின்றி அழகியை ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் (எங்கே திரும்ப வந்துவிடுமோ என அஞ்சி) கொண்டு போய்விட்டான். அன்றவன் தொலைத்தலின் வலியை முழுமையாக அனுபவித்தான். மனைவியின் அழுகைக்கு ஆறுதல் சொல்லத் தெரியாமல் அவளை அதட்டி வைத்தான்.

வீட்டுக்காரரின் குடும்பத்தில் பக்தி துள்ளி குதித்து கொண்டிருந்தது. அது இவர்களையும் வந்து முட்டியது. வெள்ளிக்கிழமைகளில் வீட்டைக்கழுவி வாசலுக்கு குங்குமம் மஞ்சள் வைப்பது கட்டாயமாக்கப்பட்டது. கிருத்திகை, அமாவாசை, பிரதோசம் எல்லாம் பார்க்கச் சொல்லி பணித்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, வாசல் மதில் சுவற்று பிள்ளையார் இவர்களுக்கு தாரை வார்த்து தரப்பட்டது. "தினமும் பூஜை செய்து கும்பிடு !, அப்புறம் பார் !" என சிவாவின் மனைவியிடம் சொன்ன வீட்டுக்காரம்மாள் மேலும் சொன்னார். "அதனால தான் பொம்பளைங்க வேலைக்கு போற குடும்பத்துக்கு நாங்க வீடு தரதில்லை".

என்றாலும் மனைவியின் மனதில் "அழகி" விட்டு சென்ற இடத்தை பிள்ளையாரால் நிரப்ப முடியவில்லை என்றே இவனுக்கு தோன்றியது.

ஜனவரி மாதந்தான் ஐநூறு ரூபாய் வாடகை உயர்த்தினார்.பொதுவாக வருடத்திற்கு ஒருமுறை நூறோ இருநூறோ வாடகை உயர்த்துவது சகஜமாகிவிட்டது. இவரோ அநியாயமாக ஐநூரு ரூபாய் உயர்த்தியதோடு நில்லாமல் ஜூன் மாதம் மேலும் ஐநூறு ரூபாய் உயர்த்தினார்.

உடைந்துப்போனவன் உக்கிரமாகி அவரிடம் கேட்டபோது "விலைவாசி யெல்லாம் ஏறிடுச்சே சார் !" என்றார்.

அவருக்கு மட்டும்தான் விலைகளெல்லாம் உயர்கிறதா என்ன !?.

கடுப்பாகிப்போனவன் வீட்டை காலி செய்தான்.

இதோ இப்போது இந்த வீட்டில் புதிதாகப் பிரச்சனை. மனைவியை எப்படியும் பகுத்தறிவுப் பேசி சமாளித்து விடலாம். ஆனால், அம்மா பயந்து விட்டால், கலக்கமுற்று கவலைக்கொண்டால்...? மறுபடி வேறு வீடு தேடவேண்டும்.வாடகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுமையை தாங்க முடிந்த அளவிற்கு தங்கும் வீடு அமைய வேண்டும். மீண்டும், அஞ்சலில் வரும் மாத இதழ் தொடங்கி எல்லாவற்றிலும். முகவரி மாற்றம் செய்ய வேண்டும்.இரவு விளக்கின் மங்கிய ஒளிபோல அவன் மனமும் மயங்கிக்கிடந்தது நினைவு தெரிந்த நாள் முதல் அவன் வாடகைவீட்டின் வாசத்தையே நுகர்ந்திருக்கிறான். சிறுவயதில், வீட்டிற்குள் பந்து விளையாடாதே!, சுவற்றில் கிறுக்காதே!, சத்தமாக அழாதே! என எந்த அதட்டலானாலும் அதன் வாலாக ஒட்டிக்கொண்டு வரும் வாக்கியம் "அவுஸ் ஓனர் திட்டுவார்" என்பதாகத்தான் இருக்கும். அந்த வயதில் தனக்கு வீட்டு உரிமையாளர்கள் பூச்சாண்டிகளாக தெரிந்ததை நினைத்துக்கொண்டான்.

தனது வாழ்க்கைப் பயணத்தில் வாடகைவீடுகள் பிணைந்துள்ளதை எண்ணிப்பார்த்தான். முதன்முதலில் தமது ஏழ்மையை தனக்கு எடுத்துச்சொல்லிய அந்த சிமெண்ட் ஷீட் வீடு, தன் முதல்கா தலைக் கண்ட கோயில்தெரு வீடு, அச்சில் தனது கவிதையைக்கண்டபோது பத்திரிக்கையோடு துள்ளிக்குதித்த தரையைக்கொண்ட மேட்டுவீடு, அப்பா மரணமடைந்த முட்டுத்தெரு வீடு என ஒவ்வொன்றாக அவன் நினைவில் வந்துப்போனது.

உண்ண, உடுக்க, உறங்க என எல்லாவற்றிற்குமான ஒரேஒரு அறையைக் கொண்ட வீட்டில் அவன் பலகாலம் வாழ்ந்திருக்கிறான்,அவன் அக்காவோடு சேர்த்து நான்கு பேர்களாக. மூன்று தனித்தனி வீடு( அறை)களுக்கும் சேர்த்து ஒரேயொரு கழிப்பறை, குளியலறைதான் இருக்கும். அவன் கழிப்பறைக்கும், குளியலறைக்கும் செல்வதற்கு காத்திருந்த காலங்கள் அது.

அக்கா வீட்டிற்குள் உடை மாற்றினால், இவன் வெளியே நிற்பான். இவன் உடை மாற்றினால் அக்கா திரும்பி நிற்பாள். யாரேனும் உறவினர்கள் வீட்டிற்கு வந்துவிட்டாலோ, அதை நினைத்துப்பார்க்கவே அவன் மனம் இப்போது கூசியது. அக்கா திருமணமாகி செல்லும் சமயத்தில்தான் கொஞ்சம் பெரிய வீடுகளில் வசிக்க தலைப்பட்டார்கள்.

"இருக்கறவனுக்கு ஒரு வீடு, இல்லாத வனுக்கு பல வீடுடா!" என்று குடியிருப்பை காலி செய்யும் போதெல்லாம் அவன் அப்பா(இருந்தவரை) இப்படி சொல்வார். அது ஆறுதலுக்காகவா அல்லது ஆதங்கத்திலா என அவனுக்கு இதுவரை சரியாகத் தெரியவில்லை. ஆனால், அது ஆணவத்தினால் அல்ல என்பது மட்டும் அவனுக்கு புரிந்திருந்தது.

ஆயினும், எந்த நேரமும் சண்டை யிட்டுக்கொள்ளும் வாசல்தெருவையும், யார் செல்வதென எட்டிக்கூடப்பார்க்காத வாசல்தெருவையும் தான் பார்த்திருப்பதை உணர்ந்தான். பலதரப்பட்ட மனிதர்களோடு சகஜமாக கலந்துவிடும் பக்குவம் இந்த வாடகைவீடுகளால்தான் தனக்கு கிட்டியதாக நினைத்தான். என்றாலும், இந்த பக்குவத்தை விட பாதிக்கப்பட்டதே அதிகம் என்ற எண்ணம் அவனுள் பாரமாக இறங்கியது. இப்படியாக, ஏதேதோ எண்ணியவாறு சிவா உறங்கிப்போனான்.

காலை கண் விழித்தபோது லேசாக கண்கள் எரிந்தது. சிவா எழுந்ததை கண்ட அவன் மனைவி அருகில் வந்து "எழுந்து வாங்க!, டீ குடிக்கலாம்!" என்றவாறு வெளியே சென்று அம்மாவிடம் "அவர் எழுந்துட்டார்மா!" என்றாள் சிரித்தபடி.

வெளியே ஹாலுக்கு( !) வந்து டீ குடிக்க ஆரம்பித்ததும் ஆர்வம் தாளாமல் அவளே ஆரம்பித்தாள்.

"அம்மா, நேத்து நைட்டு இவர்கூட அந்த கொலுசு சத்தத்தை கேட்டார்மா!!".

சிவா சுதாரித்தான்.

"அட, நீ வேறம்மா !, இந்த காம்ப்பவுண்ட்ல எட்டு குடித்தனம் இருக்கு, யார் வீட்லயோ பேன் சரியில்ல?, அதான் அந்த சத்தம், நைட்ன்றதால கிளியரா கேக்குது, அவ்வளவுதான்."

" நான் சொல்லலம்மா!,இவர் ஒத்துக் கவே மாட்டாரு! இங்கே குடித்தனம் வந்ததிலிருந்தே எங்களுக்கு நைட்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலுசுசத்தம் கேட்டுக்கிட்டு தான் இருக்கு., சொன்னா நீங்க நம்பமாட்டீங்கன்னுதான் உங்ககிட்ட சொல்லல!!".

பிரச்சனை இப்போது அம்மாவிடம் சென்றது. இவன் தாயின் முகத்தை உற்று நோக்கினான்.

"நான் விசாரிச்சேன் சிவக்குமாரா!, கீழே ரெண்டாவது மாடியிலே இருக்கிற பொட்டுக்கார அம்மா ஒருநாள் மொட்டைமாடியிலே காத்து நல்லா வருமேன்னு புள்ளையை கூட்டிக்கினு மேலவந்து படுத்தாங்களாம். நல்லா நடுராத்திரி யாரோ தன் மேல வந்து உக்காந்து அமுக்கறாப்போல இருந்துச்சாம். துடிச்சி புடிச்சி எழுந்தாங்களாம். நல்லா கொலுசு சத்தம் கேக்குதாம், பையனை கூட்டிகிட்டு கீழே ஓடியாந்துட்டாங்களாம். மறு நா காலையிலே அவுஸோனர்கிட்ட சொல்லி இருக்காங்க, அவர் கேக்காத மாதிரி கம்முனு இருந்துட்டாராம். ஆனா, அவுஸ் ஓனர் ஆயா மட்டும் இவங்களை கூப்பிட்டு மெதுவா சொல்லிருச்சாம்., இந்த வீட்டை கட்டிக்கிட்டு இருந்தப்போ மேல்மாடியிலே விளையாட வந்த இவங்க பெரிய பொண்ணு தவறி கீழே விழுந்து செத்துப்போச்சாம். கன்னிப் பொண்ணா செத்ததாலே இங்கேயே ஆவியா, இந்த வீட்டுக்கு காவல் தெய்வமாகவே இப்பவும் இருக்குதாம். வருசாவருசம் அந்த பொண்ணு நினைவு நாளுக்கு படையல் போட்டு தெருவில இருக்கற கன்னி பொண்ணுங்களுக்கு ரவிக்கை துணி எடுத்துக்கொடுத்து கும்பிடறாங்களாம்".

ஒரே மூச்சில் சொல்லி முடித்த அம்மாவைப்பார்த்து மூர்ச்சையடைந்தவனாகக் கேட்டான். "அப்ப வேற வீடு பார்க்கவாம்மா?".

"அட, நீ வேற ஏண்டா!, ஆவி, பேயெல்லாம் நம்ம மாதிரி ஏழை பாழைகளை ஒண்ணும் பண்ணாதுடா!, பொட்டுக்காரிச்சி ஊரெல்லாம் அநியாய வட்டிக்கு விடுறா, அதான் அவள அமுக்கிடுச்சி!, நம்மையெல்லாம் ஒன்னும் பண்ணாது, நீ எதுக்கும் கவலைப்படாம வேலையைப்பாரு!!".

தன் காதுகளையே நம்ப முடியாமல் கவலை மறந்து நம்பிக்கையுடன் மனைவியின் முகம் பார்த்தான்.

சற்று ஆழ்ந்த யோசனையில் இருந்த அவள் பின் மெதுவாக கேட்டாள் "ஏம்பா!, இப்படியொரு விசயம் இருக்கறதால அவுஸ் ஓனர் வருசாவருசம் ஏத்தற வாடகையை நமக்கு அதிகமா ஏத்த மாட்டாங்கல்ல!!".

இரவு கேட்ட கொலுசுச் சத்தம் அவனுக்கு இப்போது இனிய ஒலியாக தோன்றியது.

சில மாதங்கள் கழித்து, வீட்டின் உரிமையாளர் ஆள் வைத்து வீட்டைச் சுற்றிலும் ஆங்காங்கே குழிப்பறிக்க செய்தார். ஏனெனக் கேட்டதற்கு, பூச்செடிகள் நடப்போவதாக சொன்னார்கள். ஆனால், இரண்டு நாள் கழித்து குழிகள் மூடப்பட்டிருந்தன, எந்த செடிகளும் வைக்கப்படாமலேயே. நடந்தது புரியாமல் சிவா விழித்துக்கொண்டிருந்தப்போது அவன் அம்மாதான் விளக்கிவைத்தார்.

"அந்த குழியெல்லாம் செடி, கிடி வெக்கறத்துக்காக நோண்டலடா,வெளிவாசல்ல பாத்தியா பெரிய கண்ணாடி ஒண்ணு வெச்சிருக்காங்க!, அங்க அப்படியே தலைத்தூக்கி மேலப்பாரு, பூசணிக்கா சைசுல ஒரு துணி மூட்டையை தொங்கவிட்டுருக்காங்க!,வீட்டைச்சுத்தி துர்காத்து இருக்குன்னு ஒரு பெரிய பூசாரியை வெச்சி யாருக்கும் தெரியாம ராத்திரியிலே இதெல்லாம் பண்ணியிருக்காங்க!, அவுஸ் ஓனர் இன்னக்கிதான் குடித்தனக்காரங்க எல்லார்கிட்டயும் சொல்லியிருக்கார். இனிமே எந்த பிரச்சனையும் இருக்காது, கவலையேப் படாதீங்கன்னு., இந்த சாங்கியத்துக்கு அம்பதாயிரம் ரூவா செலவாச்சாம், அது மட்டும் இல்லைப்பா., வாடகையை ஏத்தப்போறோம்னு பேச்சுவாக்குல சொல்லியிருக்காரு, நீ வீட்டுக்கு வந்ததும் உன்னை வந்து பாக்க சொன்னாரு, போய் ஒருஎட்டு பாத்துட்டு வந்துடுறியா!?, என்ன சொல்லப்போறாரோ, எவ்வளவு ஏத்தப்போறாங்களோ?."

பணி முடித்து அப்போதுதான் வீட்டுக்கு வந்தவன் உடை மாற்றாமல் உடனே கீழே தரைத்தளத்தில் இருக்கும் வீட்டு உரிமையாளரை பார்க்கக்கிளம்பினான். படி இறங்கும் போது அன்று அந்த இரவில் தோன்றிய பயத்தைவிட பலமடங்கு அதிக பயம் மனதில் உருவானதை உணர்ந்தான்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லும் “போல்” கள்

பிறந்ததும்
அம்மா போல என்றார்கள்

வளர்கையில்
அப்பா போல என்றார்கள்

பள்ளியில்
பழைய மாணவர் போல என்றார்கள்

கல்லூரியில்
பேராசிரியர் போல என்றார்கள்

அலுவலகத்தில்
முன்னாள் அலுவலர் போல என்றார்கள்

பயணம் செய்கையில்
ஊர்சுற்றி போல என்றார்கள்


அவரைப் போல
மதிப்பெண் எடுக்கவில்லை என்றார்கள்

இவரைப் போல
பட்டம் பெறவில்லை என்றார்கள்

உவரைப் போல
வேலைக்குப் போகவில்லை என்றார்கள்

எல்லோரைப் போலவும்
வருமானம் ஈட்டவில்லை என்றார்கள்


இப்படி எண்ணற்ற “போல்”கள்
என்னுடைய
“நான்” என்னும் உண்மையை
நாளும் நசுக்கிக் கொல்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்காலிகள்



கால்கள் நான்கென்றபோதும்
கைகள் பலவாய் நீளும்
சில நாற்காலிகளுக்கு...........

அதிகார மணிமுடி தரித்து
ஆணவச் செங்கோல் தாங்கி
மாணவப் பந்தடிக்கும்
சில நாற்காலிகள்

தனக்குப் பின்னான வாரிசுகளுக்காய்
கஜானாக்களுக்குக் காவலிருக்கும்
சில நாற்காலிகள்

உட்கார்ந்தால் ஒருமுழம் உள்வாங்கும்
பகட்டு நாற்காலிகளைச் சம்பாதிக்க
பதவி நாற்காலிகளைப் பயன்படுத்தும்
சில நாற்காலிகள்

நாற்காலியின் கைப்பிடியில்
பெயர் பொறித்து
நகரவிடாமல் பார்த்துக்கொள்ளும்
தனக்கானதாய்க் கட்டியங்கூறி
சில நாற்காலிகள்

வி.ஐ.பி. வீடுகளில்
வணிகப் பங்குதாரரை......
செருக்குற்ற செல்வந்தரை....
திரையுலகப் பிரமுகரை......
சீமான்களை வசீகரிக்க உடைமாற்றி
தலைசாய்க்கஞ் கைவைக்கவென துணியுடுத்தி
ஆடம்பரம் பூண்டிருக்கும்
சில நாற்காலிகள்

வீடுகளின் வெளிவராந்தா ஓரத்தில்
திண்ணையில்லாக் குறைதீர்க்கும்
முதியோரின் முடக்கத்திற்காய்
சில நாற்காலிகள்
தீண்டமுடியா உயரத்திலுள்ள
தின்பண்டங்களைத் திருடித்தின்ன
சிறுவர்க்கு உதவும்பொருட்டு
சில நாற்காலிகள்


அண்ணன் பாதுகையை அமர்த்தி
அழகு பார்த்துத்
தொண்டனாகவே வாழ்விழக்கத்
துணை செய்வதாய்
சில நாற்காலிகள்

பதவி உயர்வுக்குப்
பரிசாய்க் கிடைத்த சுழல்நாற்காலியில்
சுற்றிக் குதூகலிக்கும் இறுமாப்போடு
அன்பு கொண்டோரின்
இதய நாற்காலி
பறிபோவது தெரியாமல்
சில நாற்காலிகள்........!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடதுசாரி இயக்க வரலாறு




புதிய பண்பாட்டுக்கான வெகுசன அமைப்பு சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருந்த வேளையில் எனக்கு அறிமுகமானவர் தோழர் நடராஜா ஜனகன். அவர் நவ சமசமாஜக் கட்சியில் நீண்டகாலம் சமூகச் செயற்பாட்டாளராக இருந்து வருகின்றவர். தமது தேடல்களில் கிடைக்கப்பெற்ற தகவல் களையும் அனுபவங்களையும் கொண்டு History of Left Movement in Sri Lanka என்ற நூலை எழுதியிருக்கின்றார். இந்நூல் வெளியீடு ஜனவரி 30 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. ஏதோ மறதியின் காரணமாக எனக்கு அழைப்பிதழ் அனுப்ப மறந்திருக்க கூடும்;. நண்பர் மல்லியப்பு சந்தி திலகர் தான் இது பற்றிய பத்திரிகை செய்தியை எனக்கு அறிவித்ததுடன் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

நிகழ்வு சரியாக மாலை 5 மணிக்கு தொடங்கிவிட்டது. முதலாவது உரையினை கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி வழங்கினார். இடதுசாரி இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, ஒவ்வொரு காலகட்டத்திலும் அவை எடுத்துக்கொண்ட முயற்சி என்பன குறித்து உரையாற்றிய அவர் இன்று ஏற்பட்டுள்ள சமூக மாற்றங்கள் அத்தகைய மாற்றங்களின் பின்னணியில் இடதுசாரி இயக்கங்கள் தன்னை எவ்வாறு புனரமைத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றி கூறிய அவர்,மிக முக்கியமாக இடதுசாரி இயக்கங்கள் பற்றிய பல விடயங்களை பேசுகின்ற இந்நூல் இன்று ஏற்பட்டுள்ள சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது பற்றியும் கூறியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து தமிழ் மொழிகள் பற்றி உரையாற்றிய எஸ்.ஜோதிலிங்கம் (திரு சிவகுருநாதன் சிங்கள மொழியில் மொழிமாற்றம் செய்தார்). இன முரண்பாட்டை தீர்ப்பதில் இடதுசாரி இயக்கங்கள் வகித்த பங்கு குறித்துக் குறிப்பிட்டார். தமிழ் இளைஞர் இயக்கங்கள் எவ்வாறு இடதுசாரிப் போக்கிலிருந்து அந்நியப்பட்டதாக மாறியிருந்தது என்பன குறித்துஉரையாற்றிய அவர்இலங்கைஇடதுசாரி இயக்க வரலாற்றில் நவ சமசமாஜக்கட்சி ஒன்றே நேர்மையுடனும் உறுதியுடனும் செயற்படுகிற ஒரே கட்சி எனவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மட்டுமே ஒரே ஒரு இடதுசாரித் தலைவர் எனவும் குறிப்பிட்டார். இக் கூற்று விமர்சனத்திற்குரியதாக சபையை அதிர்ச்சிக் கொள்ளச் செய்தது. திரு. ஜோதிலிங்கத்துடன் தொலைபேசியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்தபோது இனமுரண்பாடுகள் குறித்தும் இன்று வரையில் பேரினவாத செயற்பாடுகள் எல்லையை தாண்டி எவ்வாறு முன் நிறுத்தப்பட்டு வருகின்றது என்பன குறித்த உங்களின் பார்வை முக்கியமானது என்றும் குறிபிட்டேன். மேலும் நவ சமசமாஜக் கட்சி பற்றியும் தோழர் விக்கிரமபாகு பற்றியதுமான உங்களது பார்வை அகவயமானது எனக்கு குறிப்பிட்டபோது அவ்விமர்சனத்துடன் உடன்படுவதாகவே குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் இறுதியாக உரையாற்றிய விக்கிரமபாகு கருணாரத்ண தமதுரையில் இலங்கைசமூகத்தில்இருந்தஒடுக்குமுறைகளும், அடக்குமுறைகளும் இடதுசாரி இயக்கங்கள் தோன்றுவதற்கு ஏதுவான காரணியாக அமைந்திருந்தன. இடதுசாரி இயக்கத்தின் தாக்கத்தினால், செல்வாக்கினால் தான் இந்நாட்டில் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டன என்பதையும் குறிப்பிட்டார். இந்நாட்டில் குமிழ்விட்டு மேற்கிளம்பிய இனவாதமானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்குவதாக அமைந்திருந்தது. எனவே இதற்கு எதிராக தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. இவ்வகையில் தமிழர் களினதும் இந்நாட்டில் வாழ்கின்ற அடக்கி யொடுக்கப்பட்ட மக்களினதும் உரிமை களுக்கு எதிராக செயற்படுகின்ற ஆதிக்க சக்திகளுக்குஎதிராகபோர் குணம்கொண்டுள்ள யாவருடனும் நாங்கள் ஐக்கியப்பட்டு போராட்டங்களை நடத்த தயாராக உள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

**தமிழர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். மூழ்கி வருகின்ற இன்றைய சூழலில் தமிழர்களின் நியாயமான உரிமைகள் குறித்து சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது சிங்கள புத்திஜீவிகளின் கடமையாகும். இந்த வரலாற்றுப் பணி எந்தளவு நிறைவேறுகிறது என்பது முக்கியமான கேள்விதான். தோழர் விக்கிரமபாகுவும் இது விடயத்தில் போதிய அக்கறையெடுத்திருப்பதாக தெரியவில்லை.**

தோழர் விக்கிரமபாகு கருணாரத்ன அவர்களின் கருத்துக்களை தொடர்ந்து அவதானித்து வருகின்றவன் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைத் தொடர்பில் முக்கியமான விடயம் ஒன்றினை இவ் விடத்தில் குறித்துக்காட்டுவது அவசிய மானதொன்றாகின்றது. அதாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக தீவிர குரல்கொடுத்துவருகின்றஅவர் அதனைசிங்கள மக்களில் இருந்து அந்நியப்பட்ட கருத்தாகவே கூறி வருகின்றார். பெரும்பாலான சிங்கள மக்கள் இனவாதத்திற்குள் (தமிழர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர்) மூழ்கி வருகின்ற இன்றைய சூழலில் தமிழர்களின் நியாயமான உரிமைகள் குறித்து சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது சிங்கள புத்திஜீவிகளின் கடமையாகும். இந்த வரலாற்றுப் பணி எந்தளவு நிறைவேறுகிறது என்பது முக்கியமான கேள்விதான். தோழர் விக்கிரமபாகுவும் இது விடயத்தில் போதிய அக்கறையெடுத்திருப்பதாக தெரியவில்லை.

இந்நூல் நவ சமசமாஜ கட்சி குறித்தும் அதன் தலைவர்கள் குறித்துமான தகவல்களை வெளிக்கொணர்வதாக அமைந்திருக்கின்றது. இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் பொதுவான போக்கு மார்க்சிய அரசியலாக இருந்து வந்துள்ளது என்ற போதினும் இயக்க தன்மையில் இருவிதமான போக்குகள் இருந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். ஒன்று ட்ரெக்ஸிச தத்துவத்தை பின்பற்றிய போக்கு மற்றொன்று, மார்க்சிய லெனினிசத்தின் பின்னணியில் அதன் வளர்ச்சிப் போக்கினை பின் பற்றியதாக பிரகடனப் படுத்திக் கொண்ட கம்யூனிஸ்ட் இயக்கம். இந்நிலையில் இந்நூலாசிரியர் நவ சமசமாஜக் கட்சியை மட்டும் இடதுசாரி இயக்கமாக கருதியதாலோ என்னவோ இந்நூலுக்கும் "இலங்கையில் இடதுசாரி இயக்க வரலாறு" என தலைப்பிட்டிருக்கின்றார். நூல் செய்திகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமாகக் கொண்டு நோக்கினால் இலங்கையில் நவ சமசமாஜக் கட்சி வரலாறு என தலைப்பிட்டிருப்பின் பொருத்தமானதாக அமைந்திருக்கும் என சொல்லத் தோன்றுகின்றது. இந்நூலில் இழையோடுகின்ற தகவல்கள் நூலாசிரியரின் அகச் சார்பான பார்வைகளுக்கு அப்பால் இடதுசாரித் தலைவர்கள் குறித்த பல செய்திகளை வெளிக்கொணர்கின்றது. அவ்வகையில் இந்நூல் கவனிப்பிற்குரியதொன்றாகும்.

இவ்விடத்தில் முக்கியமானதொரு செய்தியைக் கூறவேண்டியுள்ளது. இடதுசாரி இயக்கம் குறித்த ஆய்வுகளை ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது அது மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளதைக் காணலாம். ஒன்று இடதுசாரிக்கு எதிரானவர்கள் இவ்வியக்கங்கள் குறித்த பல அவதூறுகளை பரப்பி வருவதைக் காணலாம். இடதுசாரி இயக்க வரலாற்றில் ஏற்பட்ட சிறு சிறு தவறுகளை மிகைப்படுத்தியும் இவ்வியக்க வரலாற்றை சிறுமைப்படுத்த முனைந்துள்ளனர். இன்றைய உலகமயமாதல் சூழலில் பழைய இடதுசாரிகளைக் கொண்டும் அல்லது சிலர் இடதுசாரிகள் போன்று பாசாங்கு செய்தும் அவ்வரலாற்றைப் பிழையாகக் காட்டுவதிலும் அவ்வியக்கம் காலாவதியாகிவிட்டது எனக் காட்டுவதிலும் முனைந்துள்ளனர். இவர்களின் பின்னணியில் ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்கள் உள்ளன. இரண்டாவதாக இடதுசாரி இயக்க வரலாற்றை தமது அணி சார்ந்து அல்லது தான் சார்ந்து எழுத முனைகின்றபோக்கு. தங்களை தவறுகளுக்கு அப்பாற்பட்டவர்களாகவும், புரட்சியின் புனிதர்களாகவும் காட்ட முனைகின்ற போக்கு இடதுசாரி இயக்கத்தின் செயற்பாடுகளை பின்னடையச் செய்துள்ளன. சாதனைகள் மிகுந்த கடந்த காலத்தை புகழ்ந்து எதிர்காலம் குறித்த குழப்பமான சிந்தனைகளை வெளியிடுவதாகவும் இவ்வாய்வுகள் காணப்படுகின்றன. மூத்த சில இடதுசாரி தோழர்களில் கூட இந்த பலவீனம் காணப்படுகின்றது. மூன்றாவதாக இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சி குறித்த விமர்சனம் சுயவிமர்சனத்தின் அடிப்படையில் நோக்கி எதிர்காலவியலை உருவாக்க முனைதல். இலங்கையில் இடதுசாரி இயக்கம் தற்காலிக பின்னடைவை அடைந்துள்ள சூழலில் அதனை மீண்டும் புணரமைப்பதற்கான தருணத்தை நோக்கிய ஆய்வுகளாக அவை காணப்படுகின்றமை பலமான அம்சமாகும்.

நூல் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு நோக்கினால் இலங்கையில் நவ சமசமாஜக் கட்சி வரலாறு என தலைப்பிட்டிருப்பின் பொருத்தமானதாக அமைந்திருக்கும் என சொல்லத் தோன்றுகின்றது. இந்நூலில் இழையோடுகின்ற தகவல்கள் நூலாசிரியரின் அகச் சார்பான பார்வைகளுக்கு அப்பால் இடதுசாரித் தலைவர்கள் குறித்த பல செய்திகளை வெளிக்கொணர்கின்றது. அவ்வகையில் இந்நூல் கவனிப்பிற்குரியதொன்றாகும்.


பரந்துபட்ட அடிப்படையில் இடதுசாரிக் கட்சிகள், குழுக்கள், இயக்கங்கள், தனி நபர்கள் என்பவர் குறித்த உருவாக்கம், குறிக்கோள், வளர்ச்சி, பலம், பலவீனம், வெற்றி, தோல்வி என்பன குறித்த காத்திரமான ஆய்வுகள் வெளிவரவேண்டியது காலத்தின் தேவையாகும். யாவற்றிற்கும் மேலாக, நமது சூழலில் ஐரோப்பிய மார்க்சிய சிந்தனைகளை அப்படியே நகலெடுப்பதற்கு பதிலாக நமது பண்பாட்டு சூழலுக்கு ஏற்ற வகையில் மார்க்சியத்தை பிரயோகிப்பதற்கான ஆய்வுகள் அவசியமானவையாகின்றன. இவ்வாய்வுகள்; எண்ணிக்கையில் குறைவுற்றிருந்தாலும் அவை நமது சிந்தனைகளில் காத்திரமான தாக்கத்தினை ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

இத்தகைய ஆய்வுகளே இன்றைய தேவையாகவுள்ளது.

வெளியீடு: Oswin Workers' School
143, Kew Road, Colombo - 02.
தொலைபேசி 0112430621



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதன் பிறந்த கதை

கழிப்பறையில்
என்னை ஊற்றியப்பின்
எனது மகனையும் சேர்த்து
ஊற்றியிருக்கலாம் என்றபடி
முகத்தை சுழித்துக் கொண்டு
சிறுநீர்க் கழிப்பவர்கள்,
மூக்கை விரலால் மூடவில்லை
கால் சட்டைகளையும் நனைத்துக்கொள்ளவில்லை.

தலைமுறைகளின் தலைமுறை
சேகரமாகும் செப்டிக் டேங்குகளிலிருந்து
அவியும் குரலுக்குத் திரும்பாக் கடவுளின்
தலையை வெடுக்கெனத் திருகி
கழற்றிவிட்டு
உடலுக்குள் துளாவி
கசடு நீக்கி
வெற்றிடத்திற்குள் பிணாயிலை நிரப்பி
உலகின் நாற்றத்தைத் துடைக்க
கழிப்பறைக்கு அனுப்பினேன்.

கடவுளும் தன்னை
கழிப்பறையில் ஊற்றியப்பின்
இன்னும் அவரது சக பந்துக்களையும்
சேர்த்து ஊற்றியிருக்கலாம் என்றபடி
முகத்தை சுழித்துக்கொண்டு
சிறுநீர்க் கழித்தனர்.

துணுக்குற்றக் கடவுள்
செப்டிக் டேங் குகையில்
கடுந்தவமிருந்து உருவாக்கினார்
அட்டாச்டு டாய்லெட்டுடன் மனிதரை
செப்டிக் டேங்கிற்குள் தங்களைத் தாங்களே
ஊற்றிக் கொள்வோர்
மோட்சம் பெற்றனர்
(அண்ணன் மாரிக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறிலங்கா
## ஐ.நா மனித உரிமைகள் பேரவை விசாரணை
# நீதியைத் தேடும் நீண்ட பயணம்

**"சிறிலங்கா மீதான ஐ.நா விசாரணையானது வலுமிக்கதாக இருக்காது. ஐ.நா தனது விசாரணையின் இறுதியில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றிடம் தீர்வெட்டுமாறு கோரும் போது இந்த விசாரணையை ரஸ்யா மற்றும் சீனா மறுக்கும் என்பது நிச்சயமானதாகும்." இவ்வாறு THE HUFFINGTON POST UK என்னும் இணையத்தில் பிபிசி முன்னாள் செய்தியாளர் Frances Harrison* எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார். அதனை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்தவர் நித்தியபாரதி.**

**2009** இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட சிறிலங்காவின் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு யுத்த மீறல்கள் தொடர்பாக சுயாதீன அனைத்துலக விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என சிறிலங்காவைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்நிலையில் கடந்த மாதம் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் போது அதன் உறுப்பு நாடுகள் சிறிலங்காவுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தனர்.

இந்த விசாரணையானது ஐ.நா வால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் தாங்கள் இந்தப் பிரச்சினையிலிருந்து விலகிக் கொள்ள முடியும் என பல நாடுகளின் அரசாங்கங்கள் கருதுகின்றன.

ஐ.நா விசாரணை இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது இன்னமும் முடியவில்லை. ஐ.நா விசாரணை என்பது நீதியை எட்டுவதற்கான நீண்டதொரு நகர்வாகஇருக்கும்.தற்போதுசிறிலங்காமீதான விசாரணை தொடர்பில் இந்த உலகம் தனது



கவனத்தைச் செலுத்துவதை நிறுத்தினால் அது மிகவும் ஆபத்தான, அழிவுமிக்கதாக இருக்கும்.

செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள பேரவையின் அடுத்த கூட்டத் தொடரின் போது, சிறிலங்காவும் அதன் கூட்டணி நாடுகளும் சிறிலங்கா மீதான அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் தீர்மானத்தை எதிர்த்து வேறொரு நடவடிக்கைஎடுக்கலாம். சிறிலங்காவை ஆதரித்து 12 நாடுகளும் இத்தீர்மானத்திற்கான வாக்களிப்பைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புறக்கணித்து 12 நாடுகளும் உள்ளன. இவை இரண்டையும் இணைத்துப் பார்த்தால் சிறிலங்காவை எதிர்த்து வாக்களித்த 23 நாடுகளை விட அதிகமானதாகும்.

சிறிலங்காவில் போர் முடிவடைந்த ஆரம்ப மாதங்களில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது சிறிலங்கா தனது நாட்டில் நிலைத்திருந்த பயங்கரவாதத்தை அழித்து வெற்றியை நிலைநாட்டியதாக புகழாரம் சூட்டி அதனைப் பாராட்டியது. தொடக்கம் நாள் முதல் இந்த விவகாரத்தைக் கவனித்துவருகிறேன். பேரவையால் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகளில் மிகவும் வெட்கப்பட வேண்டிய ஒன்றாக இது இருக்கும் என்பது நிச்சயமானதாகும்.

போரில் ஈடுபட்ட சிறிலங்காப் படைகள் போர்ச் சட்டங்களை மீறியுள்ளன என்பதையும் பலபத்தாயிரக்கணக்கான தமிழ் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்களைப் படுகொலை செய்தன என்பதையும் தற்போது அனைத்துலகமும் பரவலாக ஏற்றுக்கொண்டுள்ளது. போரிலிருந்து மீண்டெழுந்த பலரை நேரில் கண்டு அவர்களிடம் அவர்கள் சந்தித்த அனுபவங்கள் தொடர்பாக கேட்டறிந்து நான் புத்தகம் ஒன்றை வெளியிட்டிருந்தேன். இவர்கள் என்னிடம் தெரிவித்த சம்பவங்கள் என்னை மிகவும் அதிர்ச்சியில் ஆழ்த்தின. இதன்மூலம் பலர் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற அராஜகங்கள் தொடர்பாக அறிந்தனர்.

**போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளில் ஊடகவியலாளர்கள், சட்டவியலாளர்கள், ஐ.நா அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் சில பிரதமர்கள் போன்றோர் சிறிலங்காவில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட குறுகிய கடற்கரையோரத்தில் உண்மையில் என்ன நடந்தது என்கின்ற பயங்கரமான சம்பவங்களை நன்றாகப் புரிந்துள்ளனர்.**

போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளில்ஊடகவியலாளர்கள்,சட்டவியலாளர்கள், ஐ.நா அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் சில பிரதமர்கள் போன்றோர் சிறிலங்காவில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட குறுகிய கடற்கரையோரத்தில் உண்மையில் என்ன நடந்தது என்கின்ற பயங்கரமான சம்பவங்களை நன்றாகப் புரிந்துள்ளனர். ஆனால் சிறிலங்காவில் போர் இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை என்பதை இவர்கள் இன்னமும் முற்றாகப் புரிந்துகொள்ளவில்லை.

சிறிலங்காவில் மிகப் பரந்தளவில் வெளிப்படையாக இடம்பெறும் அடக்குமுறைகள், இனப்படுகொலைகள் மற்றும் சித்திரவதைகளின் ஒரு பகுதியாக அண்மைய மாதங்களில் சிறிலங்காப் பாதுகாப்புப் படைகளால் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்ட, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட தமிழ் ஆண்கள் மற்றும் பெண்களை நான் சந்தித்துள்ளேன். போரின் இறுதியில் பல பத்தாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது இந்த உலகம் இதற்கெதிராக எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. இதனால் மீறல்களைப் புரிந்த குற்றவாளிகள் மேலும் மேலும் குற்றங்களைப் புரிய முடியும் என்கின்ற நிலை தோன்றியுள்ளது.

சிறிலங்கா மீதான ஐ.நா விசாரணை யானது வலுமிக்கதாக இருக்காது. ஐ.நா தனது விசாரணையின் இறுதியில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றிடம் தீர்வெட்டுமாறு கோரும் போது இந்த விசாரணையை ரஸ்யா மற்றும் சீனா மறுக்கும் என்பது நிச்சயமானதாகும். இது வடகொரியா மீதான விசாரணைக்காக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு போன்று முழுமையானதாக இருக்காது.

சிறிலங்காவில் தொடரும் மனிதாபி மானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்யப்பட மாட்டாது. போரின் இறுதி ஆண்டுகளை முதன்மைப்படுத்தியே இந்த விசாரணை மேற்கொள்ளப்படும்.

**பக்கச்சார்பு மற்றும் திரும்பத் திரும்ப ஒன்றையே செய்தல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சிறிலங்கா மீதான விசாரணையில் புதிய குழுவொன்றை அமைக்க ஐ.நா விரும்புவதாக கூறப்படுகிறது.**

இந்தச் சிக்கலான மிகப் பெரிய விவகாரத்தை ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று 1.4 மில்லியன் டொலர்கள் செலவில் வெறும் பத்து மாதங்கள் மட்டுமே விசாரணை செய்யும். இந்தக் குழுவானது இவ்விசாரணையின் ஆரம்பத் திட்டமிடலுக்காக ஐரோப்பாவில் வெறும் ஏழு நாட்களும், ஆசியாவில் பத்து நாட்களும் வடஅமெரிக்காவில் பத்து நாட்களும் மட்டுமே செலவிடவுள்ளன. போர்ச் சாட்சியத்தை வெளிப்படுத்தும் ஒருவரது அறிக்கையின் மொழிபெயர்ப்பை விபரமாக ஆராய்வதற்கு பல நாட்கள் தேவைப்படும் நிலையில் பல நூறு பக்க அறிக்கையை வாசிக்க பல வாரங்கள் தேவைப்படும்.

பக்கச்சார்பு மற்றும் திரும்பத் திரும்ப ஒன்றையே செய்தல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சிறிலங்கா மீதான விசாரணையில் புதிய குழுவொன்றை அமைக்க ஐ.நா விரும்புவதாக கூறப்படு கிறது. ஏற்கனவே மிக முக்கிய சாட்சியங்கள் அடையாளங் காணப்பட்ட நிலையில் இப்புதிய குழு எவ்வாறு இதனை மேலும் ஆராய்ந்து கொள்ள முடியும்?

2011 மார்ச் மாதத்தில், சிறிலங்கா மீதான மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வரையறையான சட்ட ஆராய்ச்சிகள் தேவை என ஐ.நா செயலாளர் நாயகத்திடம் வல்லுனர் குழு ஆலோசனை வழங்கியிருந்தது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டதற்கு அப்பால் இப்புதிய விசாரணையானது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது தெளிவற்றதாகும்.

போர்க் குற்றவாளிகள் தற்போதும் சிறிலங்கா அரசாங்கத்தின் உயர் மட்டம், இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் சிறிலங்கா இராஜதந்திர உயர் பிரதிநிதிகளாக பணியாற்றுகின்றனர். இவர்கள் கட்டளைகளை வழங்கியவர்கள் என்ற வகையிலும் நாட்டின் உயர்மட்டத்திலுள்ளவர்கள் என்றவகையிலும் இவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் தேவைப்பாடானது என பலரும் வாதிடுகின்றனர். இதற்கு அரசியல் பலம் மட்டுமன்றி, 2009இல் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் மற்றும் சிறிலங்காவிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதொரு தொடர்பாடல் போன்றனவும் முக்கியமானதாகும்.

சாட்சியங்களைப்பாதுகாப்பதென்பது மிக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். சாட்சியங்களைப் பதிவு செய்பவர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் கூட இவர்களது அடையாளங்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என அனுபவம் வாய்ந்த விசாரணையாளர்கள் கூறுகின்றனர். சிறிலங்காவில் வாழும் சாட்சியங்களை விசாரணைக் குழு பாதுகாக்கும் என்பது சாத்தியமற்றதாகும். ஏற்கனவே இவ்வாறு சாட்சியம் வழங்கிய குடும்ப உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

'முடிவுறாத யுத்தம்: 2009–2014 வரை சிறிலங்காவில் இடம்பெற்ற பல்வேறு சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்புணர்வுகள்' என்கின்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 40 சம்பவங்களில் ஒன்பது வரையானவர்களின் உறவுகள் அவ்வது குடும்ப உறுப்பினர்கள் இவர்கள் புலம்பெயர்ந்துசென்றபின்னர் சிறிலங்காவில் கடத்தப்பட்டவர்களாக, காணாமற் போனவர்களாக் அல்லது படுகொலை செய்யப்பட்டவர்களாக உள்ளனர். சிறிலங்காவிலுள்ள தமது உறவுகளிடம் தாம் பிரித்தானியாவில் இடம்பெற்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களின் போது பங்குபற்றிய ஒளிப்படங்களை சிறிலங்கா அரசாங்கம் காண்பித்து, விபரம் கேட்பதாகவும் சிலர் கூறுகின்றனர். புலம்பெயர் தமிழ் சமூகத்தைக் கூட சிறிலங்காவின் புலனாய்வாளர்கள் மிகவும் நெருக்கமாகக் கண்காணித்து வருகின்றனர்.

சிறிலங்காவில் போருக்குப் பின்னான சமாதானம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. கோபி என்பவரைத் தேடும்நடவடிக்கையில்சிறிலங்கா அதிகாரிகள் பத்துப் பெண்கள் உட்பட 60 பேர் வரை கைதுசெய்தனர். பின்னர் கோபி என்பவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தோன்றுவதைத் தடுப்பதற்காக புலம்பெயர் தமிழ்க் குழுக்கள் மற்றும் தனிப்பட்ட தமிழர்களைத் தான் தடைசெய்துள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் திடீரென அறிவித்தது. புலம்பெயர் தமிழ்ச் சமூகம் முற்றாக பயங்கரவாத நடவடிக்கையில் செயற்படுகின்றது என்பதையே சிறிலங்கா அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கை சுட்டிநிற்கிறது. சிறிலங்கா அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட தமிழர்களில் இறந்தவர்களின் பெயர்கள் கூட உள்ளடங்கியுள்ளன. தமிழ் மக்கள் சார்பாக பேச்சுக்களில் கலந்து கொள்ளும் உலகத் தமிழர் பேரவையையும் சிறிலங்கா தடைசெய்துள்ளது.

இவ்வாறு தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் கடந்த காலங்களில் தொடர்பைப் பேணிய தமிழர்கள் மீண்டும் சிறிலங்காவுக்குச் செல்வதில் தயக்கம் காண்பிக்கின்றனர். புலம்பெயர் சமூகத்தின் போர்ச் சாட்சியங்கள் மற்றும் தகவல்களைப் பெறுவதைத் தடுப்பதற்கான சிறிலங்கா அரசாங்கத்தின் தெளிவான முயற்சி இதுவாகும். ஐ.நா விசாரணைக்கு சாட்சியமளிக்கின்ற எவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும்எனசிறிலங்கா அரசாங்கம் ஏற்கனவே எச்சரித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில், ஐ.நா தனது விசாரணையை மேற்கொள்வதென்பது கடினமான செயலாகும். புலம்பெயர் தமிழர்கள் இந்த விசாரணைக்கு தமது விருப்பத்தையும் ஆதரவையையும் தெரிவித்துள்ளபோதிலும், ஐ.நா விசாரணை சாதாரண செயலல்ல. சிறிலங்காவில் வாழும் சிங்கள மக்களிடம் இந்த விசாரணையின் தீர்வு நம்பகமானதும் பாரபட்சமற்றதும் என நம்பவைப்பது கடினமானதாகும். கடந்த காலச் சம்பவங்கள் மட்டும் விசாரணை செய்யப்படக்கூடாது. இதன் மூலம் தற்போது தொடரப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட மாட்டாது.

சிறிலங்காவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்பது வெறுமனே ஐ.நா விசாரணையின் மூலம் மட்டும் கிடைக்கமாட்டாது. பல்வேறு நாடுகளிலும் மீறல்களைப் புரிந்தவர்களுக்கு எவ்வாறான தண்டனை வழங்கப்பட்டனவோ அதேபோன்று சிறிலங்காவிலும் மீறல்கள் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதற்கு அரசியல் உறுதியும் பல ஆண்டுகால தெளிவான ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் போன்றன தேவைப்படுகின்றன.

நன்றி: புதினப்பலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனகுவின் கனவு

“புள்ளத்தாய்ச்சி பொண்ணு இப்டி கூன் போட்டு உட்காரதடீ..”செல்லமாக அதட்டினாள் கனகு. “அத்தே.. சக்கரைபொங்கலுக்கு பெரிய படிக்கு ரெண்டு படி அரிசி போட்டா சரியாயிருக்குமாத்தே..?” கனகுவிடம் கேட்டாள் நல்லமுத்துவின் மருமகள். “எக்கா சோத்தை வடிச்சுவுட ரெண்டுதட்டுகூடை போதுமில்ல..?” என்றதேவானையை நல்லமுத்து அதட்டினான். “அதான் தவுசுப்புள்ள லிஸ்ட் போடுறாப்பல அண்ணி சொல்லிடுச்சே.. அப்பறமும் என்னா அதுக்கிட்ட தொணதொணத்துக்கிட்டு.. வளைவிக்காரன் வந்துட்டான்.. தேவைப் பட்டதை அது பாத்து எடுத்து வைக்குமில்ல..”

“பாட்டீ..” திரைசீலையை விலக்கி விட்டு தூக்கக்கலக்கத்துடன் உள்ளே நுழைந்த பேத்தி நித்யா அனிச்சையாக கனகுவின் மேல் விழுந்தாள். ‘அட.. கனவு கண்டேனாக்கும்..’ நித்யாவை அணைத்துக்கொள்ள கையை அசைக்கும்போது தான் முதுகு வலியின் தீவிரம் தெரிந்தது கனகுவுக்கு.‘பாழாப்போன முதுவுவலி காலங்காத்தாலயே இப்டி கொல்லுதே..’ சிறிது நேரம் மல்லாந்து படுத்து ஆசுவாசம் செய்துக் கொள்ள தோன்றியது.“செத்த நவுருடா..பாட்டி நேரா படுத்துக்கறன்..” நித்யாவிடம் பேசிக் கொண்டே அறையில் இருந்த கடிகாரத்தை பார்த்தாள். மணி ஆறை தாண்டியிருந்;தது. காற்றில் ஆடிய திரைச்சீலையின் இடுக்கில் எதிர் அறை சாத்தியிருந்தது தெரிந்தது.

தீபாவும் மாப்பிள்ளையும் இன்னும் எழுந்துக் கொள்ளவில்லை போலிருக்கிறது. மூன்றாம் வகுப்பு படிக்கும் பேத்தி நித்யா அடிக்கடி பாட்டியின் அறைக்கு ஓடி வந்து விடுவாள். அதனாலேயே கதவைச் சாத்திக்கொள்ள வேண்டியிருந்தது. கதவு சாத்தியப்படியே இருக்க நித்யா வந்துவிட்டாள். தீபா கூட இப்படித்தானே இருப்பாள். மகளை நினைத்துக்கொண்டாள் கனகு. ஒரே மகள் தீபா. அது குறித்து கனகுவின் கணவன் ராமசாமிக்கு பெரிய குறை தான். தரித்த சிசுவெல்லாம் என்ன காரணத்தாலோ தங்காமலேயே போய் விட்டது. தீபா தரித்ததிலிருந்து பிறந்தது வரைக்கும் கனகுவை உள்ளங்கையிலேயே ஏந்திக் கொண்டார் ராமசாமி. உள்ளூர் பள்ளியில் இடைநிலை ஆசிரியையாக வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து வந்த கனகு குழந்தைக்காகவே இரண்டு வருடங்கள் விடுப்பு எடுத்துக் கொண்டாள்.

"நீ கொண்டார்ர காசுல தான் ஒல கொதிக்க போவுதாக்கம்.. போதும்போதுங்க வொள்ளகாடு கெடக்கு.. பம்பு செட்டும் பாடுபட நானும் இருக்கும் போது நீ என்னாத்துக்கு தொண்ட தண்ணி வத்தி போவ கத்திக்கிட்டு கெடக்க..?" ராமசாமியின் பேச்சு இந்த ஒரு விஷயத்தில் மட்டும் எடுபடவில்லை. ஐம்பத்தெட்டு வயது வரை போதுமென்றளவுக்கு நின்று கொண்டிருந்ததாலோ என்னவோ இப்போதெல்லாம் நிற்பதும் நடப்பதுமே பெரிய பாடாகி விடுகிறது கனகுவுக்கு. வீட்டுக் குள்ளேயே என்றால் புழங்கி விடுவது சுலப மாக இருக்கிறது. வெளியில் போவதென்றால் பெரியபாடு தான்.

நாளைக்கு கொழுந்தன் நல்லமுத்துவின்; மகளுக்கு வளைகாப்பு. கட்டாயம் போயாக வேண்டும். இங்கிருந்து ஒரு மணி நேர பயணம். அங்கிருந்து ஆறேழு கிலோ மீட்டர் உள்ளடங்கி இருக்கும் கிராமம். காத்திருந்தால் ஊருக்குள் செல்லும் பேருந்து அரை மணி நேர பயணத்தில் கொண்டு சேர்த்து விடும். இல்லையெனில் வந்திருக்கும் சேதியை தெரிவித்தால் யாராவது வந்து அழைத்து சென்றுவிடுவார்கள். 'இந்த பயணமாவது தள்ளி போகாம இருந்தா சரி..' எண்ணிக் கொண்டே தன்னை சிறைப்படுத்தியிருந்த நித்யாவின் கால்களை மெல்ல நகர்த்தி விட்டாள்.

கணவன் ராமசாமி உயிரோடு இருக்கும் போது அவருடன் மகள் வீட்டுக்கு பேருந் தில் வந்து போவது ஒன்றும் சிரமமாக இருந்ததில்லை. பணிஓய்வுக்குப்பிறகு கணவனும் இறந்துவிட மகள் தீபாவின் வீட்டிற்கு வந்து விட்டாள். ஆரம்பத்தில் மகள் வீட்டிற்கு வந்து விட்டோமே என்ற தயக்கம் தான் இருந்தது, 'எப்படா கிராமத்துல எதாவது விசேஷம் நடக்கும்.. ஓடலாம்னு நினைப்பு வரும்.. இப்ப முட்டிவலியும் முதுகுவலியும் வந்தததுலேர்ந்து ஊருக்கு போய்ட்டு வர்றதுங்கறது பெரிய அவஸ்தையா மாறி போச்சு.' தீபாவின் வேலை நேரம் வேறு மாறிக் கொண்டேயிருப்பதால் நினைத்து வைத்தது போல் ஊருக்கு போக முடிவதில்லை.

போன மாதம் பங்காளி வீட்டில் ஒரு சாவு. 'என்னை பஸ் ஏத்தி வுட்டுடுமா பாப்பா.. நான் போறேன்..'; தகவல் வந்ததும் இப்படி தான் ஆரம்பித்தாள் கனகு.

"உன்னாலதான் பஸ் படிக்கட்டுல ஏற முடியலேம்மா.. எப்டி போவ..?"

"நீயும் வாயேண்டீ.. உனக்கு பெரியப்பா முறை தானே அவரு.." மெல்ல மகளை துணைக் கழைத்தாள் கனகு. அவள் கைத்தாங் கலாக பிடித்துக் கொண்டால் பஸ்ஸில் ஏறி விடலாம்.

"நான் எங்க வர்றது..? அடுத்த வாரம் நித்தியோட டான்ஸ் ப்ரோகிராம் இருக்கு.. அதுக்கு வேற லீவு போடணும்..."

"ஆமாத்தே.. இன்னிக்குன்னு பார்த்து நித்யாவுக்கு அரை நாளு தான் ஸ்கூல்... வீட்டில ஆள் இருக்கணுமே.. கருமாதிக்கு போயிக்கலாம்.." மருமகன் முரளி வழிமொழிய அப்போதைக்கு விட்டுவிட்டாலும் மனதில் உறுத்திக் கொண்டேயிருந்தது கனகுவுக்கு.

"பதினாறாம்நாளு தேவைக்கு கருமாதி பத்திரிக்க அனுப்பியிருக்கான் உன் தம்பி.. நீயும் தான் வாயேன் பாப்பா.. ஊருல எல்லாரையும் பாத்துட்டு வந்தாப்பல இருக்கும்.. எல்லாம் நம்ம பங்கும் பங்காளிங்க தானே.. நான் உசுரோட இருக்கப்பவே போக வர இருந்தா தானே நல்லது கெட்டது புரியும் உனக்கும்.. பொம்பளப்புள்ளய வேற வச்சிருக்க.. ஆவ தேவைன்னா அவுங்களும் வரணும்ல்ல.." மகளை சரிக்கட்ட பார்த்தாள்.

"எனக்கு எங்கம்மா நேரமிருக்கு.. வாரம் ரெண்டு நாளு லீவுன்னு தான் பேரு..

**ஐம்பத்தெட்டு வயது வரை போதுமென்றளவுக்கு நின்று கொண்டிருந்ததாலோ என்னவோ இப்போதெல்லாம் நிற்பதும் நடப்பதுமே பெரிய பாடாகி விடுகிறது கனகுவுக்கு. வீட்டுக்குள்ளேயே என்றால் புழங்கி விடுவது சுலபமாக இருக்கிறது. வெளியில் போவதென்றால் பெரிய பாடு தான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா சனிக்கிழமைக்குன்னு எதாவது ஒரு வேலை வச்சிருப்பாங்க ஆபிசுல.. சன்டே ஒரு நாளு தான் ரெஸ்ட்.. அந்த நாளையும் காலி பண்ணீட்டமுன்னா அடுத்த வாரத்துக்கு ஓடுற தெம்பே போயிடும்.. நீ போய்ட்டு வாம்மா.." மகள் தட்டிக்கழித்து விட அலுத்து போனது கனகுவுக்கு. கால்களை தொங்கவிட்டவாறு செல்லும்போது வீங்கி விடுகிறது. மடக்கவும் முடியவில்லை. கைகளின் தயவினால் பஸ்ஸில் ஏறுவதால் கை தசை வீங்கி போகிறது. அதுவும் உட்கார இடமில்லை என்றால்; அழுகையே வந்து விடுகிறது. 'அப்பறம் பாத்துக்கலாம்.. பாத்துக்கலாம்ன்னே ஒவ்வொரு தேவையா கழிஞ்சு போவுது.. பாவம்.. பாப்பாவை கொறை சொன்னா அவ மட்டும் என்னா பண்ணுவா.. அவங்கப்பாரு சொன்னாப்பல அவளையும் என்னை மாதிரியே ஒரு டீச்சராக்கி வுட்டுருக்குணும்.. உள்ளுரு மாப்பிள்ளையா இருந்தா நிலம் நீச்சுக்கும் கேடு வராம இருந்துருக்கும்..'

"நித்தும்மா.. இன்னிக்கே வீட்டுப்பாட மெல்லாம் முடிச்சுடும்மா.. நாளைக்கு உன் சித்திக்கு வளகாப்பு.. நம்பள்ளாம் ஊருக்கு போலாம்.." வலியால் மொத்த உற்சாகத்தையும் ஆக்ரமிக்க முடியவில்லை.

"அப்டீன்னா இன்னைக்கு நீயும் எங்களோட வா பாட்டீ.." என்றாள் நித்யா தூக்கம் கலைந்தவளாக. அய்யய்யோ.. இந்த முறையும் தட்டிப்போயிடுமோ..' மனது திக்கென்றிருந்தது. "பாட்டிய எங்கடா வர சொல்ற..?"

"நித்துவோட அத்தை பொண்ணு பெரியவளாயிட்டாளாம்.. நேத்து ராத்திரி பத்து மணிக்கு மேல ஃபோன் வந்துச்சு.. நீ தூங்கிட்டே.. சாரி ஒன்ன டிஸ்டர்ப் பண்ண வேண்டாமுன்னுஎழுப்பல.." கட்டிலில் அம்மாவின் அருகில் வந்து உட்கார்ந்துக் கொண்டாள்; தீபா.

"அந்த ராதிகாகுட்டியாடீ.. அதுக்குள்ள பெரிய மனுசியாயிட்டாளா..? நம்பவே முடியல பாரேன்.. என்ன.. ஒரு பத்து வயுசு இருக்குமா அந்த புள்ளக்கு.. நம்ப நித்திக்குந்தான் வயுசு எட்டாயிடுச்சு.. நீயும் தாயராயிக்கணும் போலருக்கு பாப்பா.." என்றவள் மருமகன் பேஸ்ட்டும் பிரஷ்ஷுமாக நிற்பதை பார்த் ததும் மகளை அவசரப்படுத்தினாள். "சாரி.. சாரி.. தாய்மாமன் தான் இந்த மாதிரி விசயத்துக்கெல்லாம் மொதல்ல நிக்கணும்.. நீ போய் கௌம்பு.. போ.."

"நீங்க வர்றீங்களா அத்தே..?" வாயில் பிரஷ்ஷோடு வந்தான் முரளி.

"நான் வர்லப்பா.. பதினோராவது நாள் ராதிகாவ வீட்டுக்கு அழைச்சு வுடுவாங்க.. அப்ப வரேன்.. இப்ப நீங்க மூணு பேரும் போய்ட்டு வாங்க.." கட்டிலை விட்டு இறங்கினாள். காலைக்கடன்களை கழிப்பது கனகுவை பொறுத்தவரை சிரமமான வேலையாக மாறி விட்டது. மூட்டுவலியினால் கால்களை மடக்கி உட்கார முடிவதில்லை.

அவளுக்காகவே கட்டிய வெஸ்டர்ன் டாய்லெட்டை உபயோகிப்பது என்பது இவ்வளவு நாளாகியும் பழக்கத்திற்கு பொருந் தாமலேயே இருந்தது.

அம்மாவின் முகம் ஏதோ உணர்த்த "சித்தப்பா வீட்டுவளைகாப்புஎன்னைக்கும்மா..?" என்றபடியே காலண்டரை பார்த்தாள் தீபா. கனகுவுக்கு ஞாபகமறதி அதிகமாகி விட்டதால் எல்லா விஷயங்களையும் மாதாந்திர காலண் டரில் எழுதி வைத்து விடுவாள்.

"பன்னென்டாம் தேதி.. அட நாளைக்காம்மா.. நீ எப்டி தனியா போவ..?"

"நாளைக்கு தான்டீ வளைகாப்பு.. நாம என்னா விருந்தாளியா.. இன்னிக்கு போனா தேவலன்னு பாத்தன்.. நீயும் வரேன்னு சொன்னியே.."

"சொன்னன் தான்.. திடீர்ன்னு என் நாத் தனாரு பொண்ணு பெரியவளாயிட் டாளே.. பேசாம குழந்தை பொறந்து போய்க்கலாம்.."

"அண்ணன் குத்துயிரும் கொலையுயிருமா கெடக்குது.. நகைநட்டுங்க தான் இப்ப முக்கியமா..?" பதினைந்து நாட்களுக்கு பிறகு அறுவை சிகிச்சை முடித்து அண்ணனை மீண்டும் அண்ணியிடம் ஒப்படைத்த கொழுந்தனை தெய்வமாகவே பார்த்தாள் கனகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“வேணாம் பாப்பா.. அப்றம் அப்டியே தட்டிக்கிட்டே போயிடும்.. இன்னைக்கு போக முடியலேன்னாலும் நாளைக்குன்னாலும் போய்தான்டீ ஆகணும்..” கணவன் ராம சாமியின் தம்பி தான் நல்லமுத்து. திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பில் ராமசாமி இறந்து விட்டார். அவருக்கு பிறகு அவரின் தங்கைகள் இருவரும் அடுத்தடுத்து இறந்து விட இப்போது உயிருடன் இருப்பது நல்லமுத்து மட்டும் தான்.

“போகணும் தான்.. ஆனா திடீர்ன்னு நாங்க வெளிய கௌம்பறாப்பல ஆயிடுச்சே அத்தே.. இன்னிக்கு லீவு நாளுன்னு டாய்லெட் பைப்பபாக்கபிளம்பரைவரசொல்லியிருந்தேன்.. எப்போ வர்றானோ.. என்னவோ தெரியல.. இன்னிக்கு விட்டா இனிமே அடுத்த வாரம் தான் வருவான்..” இழுத்தவாறே பேசினான் முரளி.

கனகுவுக்கும் நல்லமுத்துவுக்கும் ஒரே வயது தான். தீபாவுக்கு ஒரு வயதாகும் போது நல்லமுத்துவுக்கு கல்யாணம். சொந்த அத்தை மகள். நிறைய நகைநட்டுகளுடன் வந்தாள். உடனுக்குடன் இரண்டு மகன்களும் ஒரு மகளுமாக மூன்று குழந்தைகள் பிறந்த விட பெரிய குடும்ஸ்தனாகி போனான் நல்லமுத்து. அந்த நாள் இன்றும் ஞாபகம் இருந்தது கனகுவுக்கு. அவள் பள்ளிக்கு சென்றிருந்தாள்.

“கனகு டீச்சர் வீட்டுக்காரருக்கு கரண்டு ஷாக் அடிச்சுடுச்சாம்..” வந்த தகவலில் வெலவெலத்து போனாள். நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் போடும் போது கையில் சுருசுருவென்று கரண்ட் ஏற ஏதோ தோன்றி வெடுக்கென்று கையை இழுத்த வேகத்தில் மோட்டார் ரூமின் சிமிண்ட் தரையில் விழுந்து விட்டார். தலையில் நல்ல அடி. கனகு போவதற்குள் நினைவிழந்து கிடந்த ராமசாமியை மாட்டு வண்டியில் தூக்கி வைத்திருந்தனர். நல்லுமுத்துவின் மடியில் மயங்கிய நிலையில் கிடந்த கணவனை கண்டதும் கதறினாள் கனகு.

உள்ளூர் மருத்துவமனையில் கையை விரித்து விட்டனர்.

“அண்ணி.. நீங்க ஒண்ணும் கவலப் படாதீங்க.. இந்த ஊருல வச்சு வைத்தியம் பண்றதுக்கு வசதி பத்தாதுங்கறாங்க.. மெட்ராசுக்கு போனா பொளச்சுக்குலாம்னு சொல்றாங்கள்ல.. காரு வச்சு அண்ணன மெட்ராசுக்கு கூட்டிட்டு போவோம்..”

“அய்யோ.. தம்பி.. அம்புட்டு பணத்துக்கு எங்க போறது..?” கதறினாள்.

“நீங்க கவலப்படாதீங்க... எம்பொண்டாட்டி நகைங்கள்லாம் எதுக்கு இருக்கு..? வித்துப்புடலாம்..”

“தேவானை எதும் நெனைக்காதே தம்பி..?

“அண்ணன் குத்துயிரும் கொலையுயிருமா கெடக்குது.. நகைநட்டுங்க தான் இப்ப முக்கியமா..?” பதினைந்து நாட்களுக்கு பிறகு அறுவை சிகிச்சை முடித்து அண்ணனை மீண்டும் அண்ணியிடம் ஒப்படைத்த கொழுந்தனை தெய்வமாகவே பார்த்தாள் கனகு.

“வேற யாரு வீட்டுல தேவைன்னாலும் போவாம இருந்துக்கலாம்.. இது சொந்த கொழுந்தனாச்சேப்பா..” மருமகனிடம் தணிந்து பேசினாள்.

“ப்ளம்பரை கூட அடுத்த வாரம் வர சொல்லலாம்... ஆனா நீங்க எப்டித்தே தனியா போவீங்க.. இந்த வாரம் கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணலாம்னு நெனச்சேன்.. இன்னிக்கு தங்கச்சி வீட்டுக்கு போயாகணும்.. நாளைக்கு என் கொலீக் வீட்ல ஒரு பர்த்டே பார்ட்டி இருக்கு.. மிஸ் பண்ணவே முடியாது.. போய் தொலையுணும்.. ச்சே.. வீக் என்ட் சந்தோஷமே போச்சுத்தே..” இயல்பாக பேசினான் முரளி.

“மாப்ளை தான் புதுசு.. ஒண்ணும் தெரியாது.. ஒனக்குமாடீ தெரியாது உங்க சித்தப்பனோட குணம்.. உங்க சித்தப்பனுக்கு இந்த உடம்ப செருப்பா கூட தைச்சு போடலாம்.. நான் கட்டாயம் போகணும்...” உள்ளறையில் இருந்த மகளிடம் கிசுகிசுப்பாக பேசினாள் கனகு.

“உன் சென்டிமெண்ட்டயலாக்கஎல்லாம்; மூட்டை கட்டும்மா.. மூட்டு வலியோட நீ எப்படி போக போற..? இங்கேயர்ந்து ரெண்டு பஸ்ஸு மாத்தணும்... உடனுக்கொடனே பஸ் வந்தா கூட போய் சேர எப்படியும் ஒன்றரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி நேரமாவது ஆவும்.. நாங்க கூட்டிட்டு போற மாதிரி இருந்தா நான் இவ்ளோ நேரம் பேசிக்கிட்டு இருக்க மாட்டேன்.. வாம்மா.. வந்து காருல ஏறுன்னு சொல்லிருப்பேன்...” பேசியவாறே காபி போட சென்றாள் தீபா.

‘நல்லா பேசக் கத்துக்கிட்டா இவளும்.. லட்சுமி அத்தாச்சி பேரப்புள்ளங்க காதுக்குத்துக்கு ஊருக்கு போனது தான் கடசி.. அதுந்தான் ஏழெட்டு மாசம் ஆயிடுச்சே.. பாழாப்போன மூட்டு வலி பஸ்ஸுல ஏற வுட மாட்டேங்குது.. ஒவ்வொரு தடவையும் வெளிய போகணும்னா காரோ ஆட்டோவோ தேட வேண்டிய தாயிருக்கு.. நாலு பேரும் சேர்ந்து போனா பரவால்ல.. ஒத்த பொம்பளைக்கு போயி காரு எடுக்க முடியுமா...? தனியா காரு வச்சுக்கிட்டு அங்க போயி இறங்குனா தான் நல்லாருக்குமா..? நான் பணம் குடுக்குறேன்னு சொன்னாலும் கெழவிக்கு பென்ஷன் வாங்கற திமிர்ன்னு மாப்ள நெனைச்சுக்க மாட்டாராக்கும்..’ பலவித எண்ணத்தோடு காபியை குடித்தாள் கனகு.

“நீங்க எப்போ கௌம்புறீங்க பாப்பா..?”

“நேத்து பூரா இவ டி.விக்கு முன்னாடி உட்காந்துட்டா.. வீட்டுப்பாடம் அப்டியே கெடந்து போச்சு.. முடிச்சுட்டு தான் கௌம்பணும்..” தீபா சொல்லி முடிப்பதற்குள் வேலைக்காரப் பெண் அழைத்தாள்.

“எக்கா.. துணிமணிய எடுத்து போடு.. ஊறவச்சுட்டு பொறவு பாத்தரம் வெளக்கறன்..”

“நீ போடீ.. போய் வேலைய பாரு.. நித்திக்குட்டிய நான் பாத்துக்கறேன்..” நான்காம் வகுப்பு கணக்கு ஒன்றும் ஊருக்கு கிளம்புவது போல பிரம்மசூத்திரமாக இருப்பதில்லை கனகுவுக்கு. வகுத்தல் கணக்குகளை தமிழில் சொல்லி தந்தவாறு ஒருவழியாக பேத்தியின் வீட்டுப்பாடத்தை முடித்தாள்.

“தீபா.. நான் கடைக்கு போய்ட்டு வர்ரேன்..” மனைவியிடம் சொல்லியவாறே முரளி பைக்கை கிளப்பிக் கொண்டு போவது தெரிந்தது கனகுவுக்கு. ‘வண்டி ஓட்ட தெரிஞ்சா நானும் இப்படி கிளம்பி போயிருக்கலாமோ.. அட.. அப்போ மட்டும் என்னா வண்டியிலயா போனோம்.. தெரிஞ்ச எடம்.. சொந்தக்காரங்க.. நடையோ பஸ்ஸோ எல்லாத்துக்கும் தொணைக்கு ஆள் இருந்துச்சு. போகறதுக்கு தெம்பும் இருந்துச்சு..’ நித்யாவின் குரல் எண்ணத்தை தடைப்படுத்தியது.

“பாட்டி.. இந்த கோஷண்டையும் ரிமைண்டரையும் எங்க எடுத்து எழுதுணும்..?”

“ஈவு எத்தனைடீ வருது..? அதை தலைக்கு மேல எழுது.. மீதிய கணக்குக்கு கீழ எழுது..” ‘மீந்து போனா கீழ தான் கெடக்கணும் போலருக்கு.. தீபாவும் முரளியும் நல்லா தான் வச்சுருக்காங்க.. ஆனா கல்யாணம்.. தேவைன்னு அவங்க வீட்டு சனங்களோட மட்டும் எப்படி ஒட்டிக்கிட்டு கெடக்கறது..? நம்ம ஊரு.. நம்ம சனங்கன்னு மனசு தேடுதே..’

இப்போது முதுகு வலி சற்று குறைந்தது போலிருந்தது. ஊருக்கு போனால் சுத்தமாக நின்று விடும் என்று எண்ணிக் கொண்டாள். தீபா சமையலறையில் ஏதோ செய்துக் கொண்டிருந்தாள். “நான் ஒண்டி ஆளு பாப்பா.. என்னத்தையோ தின்னுட்டு போறன்.. நீ சோறல்லாம் ஆக்க வேணாம்.. நித்திய குளிச்சு வுட்டு எங்கிட்ட அனுப்பு.. அவள கிளப்பி விடறன்..”

சமையல் வேலையும் குறும்புக்கார மகளை கிளப்பும் வேலையும் இல்லையென்றாகியதில் சட்டென்று ஒரு சந்தோஷம் வந்தது தீபாவுக்கு. “அடுத்த வாரம் நம்ப ஊரு பக்கம் தான் எனக்கு இன்ஸ்பெக்ஷன் இருக்கு.. எங்கூடவே கிளம்பி வந்தீன்னா உன்ன சித்தப்பா வீட்ல இறக்கி வுட்டுட்டு சாயந்தரமா கூப்டுக்குறேன்.. ஓகேவா.. என் செல்ல அம்மா..” அம்மாவின் கன்னத்தை கிள்ளி விட்டு சிறுபிள்ளையாக ஓடினாள் தீபா.

‘தேவானைகோவுச்சுக்குவா..ஒருபோனை போட்டு சொல்லிப்புடணும்..’ மனசுக்குள் தோன்றியதை எண்ணமாக்க அலைபேசியை தேடினாள்.‘எங்க வச்சேன்..? இந்த நித்திக்குட்டி தான் எங்கையாவது எடுத்து போட்டுடுவா..’ செல்லமாக அலுத்துக் கொண்டே மகளின் அறையின் திரையை மட்டும் மெலிதாக விலக்கி எட்டிப் பார்த்தாள் கனகு. மற்ற அறைகளை புழங்குவது போல இந்த அறையை மட்டும் அவளால் எளிதாக புழங்க முடிவதில்லை. தீபா மகளிடம் பேசிக் கொண்டிருந்தாள். “மம்மி சுடிதார்போட்டுக்கட்டுமா..சாரிகட்டிக்கிட்டுமாடீ..?”; அரவம் கேட்டு திரும்பினாள்.

“என்னம்மா.. நான் என்ன உடுத்திக்கட்டும்..?” கேள்வியை அப்படியே தாயை நோக்கி திருப்பினாள். திருத்தப்பட்ட புருவங்கள் வில்லாய் வளைந்திருந்தது.

“புடவையே கட்டிக்கோடீ..” என்றவள் “அந்த செல்போன எடும்மா..” என்றாள் பேத்தியிடம்.

“நீ சுத்த வேஸ்ட் பாட்டீ.. உள்ள கூட வர மாட்ட..” என்றவள் “சாரி.. யாருக்கு போட்டு தரட்டும்..” என்றாள் பழக்கப்பட்டவளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லமுத்து.. நல்லமுத்து தாத்தாவுக்கு.." செல்லும் கையுமாக இருந்த நித்யாவை பார்த்து கோபமானான் அப்போதுதான் உள்ளேநுழைந்த முரளி. "எப்போ பாரு செல்லுல விளையாட்டு தான்.. அதான் மார்க்கெல்லாம் கொறையுது.."

"நான் ஒண்ணும் வௌயாடல..பாட்டிக்கு கால் மேக் பண்ணி குடுத்தன்.." ரோஷமானாள் நித்யா. செல்போனை எடுத்துக் கொண்டு முன்கூடத்திற்கு வந்தாள் கனகு.

"அலோ.. தேவான.. நான் தான்டீ அக்கா பேசறன்.. நேத்துலேர்ந்து முதுவு வலி தாங்க முடியிலடீ.. படுக்கைய வுட்டு எழுந்துக்க முடியில.. பத்தாததுக்கு ரெண்டு முட்டியிலயும் பெல்ட் போட சொல்லியிருக்காரு டாக்டரு.. பஸ்சுலயும் ஏறி இறங்க முடியாது.. புவனேசுக்கு வளைகாப்புபோட்டு வீட்டுக்கு கூட்டியாந்துடு..

அடுத்த வாரமா வர்றன்.. உன் புருசன் தான் கோவிச்சுக்குவாப்பல.. செத்த சொல்லிப் புடு.. நா தூக்கி வளத்தவ புவனேசு.. அதுக்கு வளையல் அடுக்கறத பாக்கற குடுப்பின தான் இல்லாம போச்சு எனக்கு.." பேசிக் கொண்டே வந்தவளின் குரல் தழுதழுத்தது.

"எனக்கு தெரியாதுக்கா.. நீயே உன் கொளுந்தன்கிட்;ட பேசிக்க.." போனை கணவனிடம் நீட்டினாள் தேவானை. "அக்காளுக்கு முதுவு வலியாம்.. வர முடியாதுங்கறாப்பல.."

"என்னாண்ணீ செய்யுது..?" பதறலாக வந்தது நல்லமுத்துவின் குரல்.

"ஒண்ணுமில்ல தம்பி.. எப்பவும் வர முது வு வலியும்.. மூட்டு வலியுந்தான்.. நேத்து காய்கறி பையை தூக்கியாந்தன்..நல்ல புடிச்சுக்குச்சு..வர வாய்க்காது போலருக்கு.. புள்ளக்கு வளையலு அடுக்கி கூட்டியாந்துடு.. வர்ற வாரத்துல வாரேன்னேன் உன் பொண்டாட்டிக்கிட்ட.. அது பொசுக்குன்னு கோவப்பட்டு உங்கிட்ட குடுத்துடுச்சு.."

"முதுவு வலி தான.. பஸ்ல தான ஏற முடியாது உனக்கு.. நீ ஒண்ணும் செரமப்பட வேணாம்ண்ணீ.. நம்ப குடும்பத்துக்கு மூத்தது நீ தான்.. உன்ன வுட்டுப்புட்டு தேவ செய்றது எப்புடீ.. மருமவன்ட்ட எதும் சொல்லாத..

நான் காரு பேசி அனுப்பி வுடறன்.. உம்மவனையும் கூடவே அனுப்பறன்.. நீ படுத்துக்கிட்டே வந்து சேந்துருண்ணீ.. எம்பொறந்தவன் இருந்தா வுட்டு குடுத்துருவாரா..? இல்ல நீதான் ஊர வுட்டு போயிருப்பியா..?" நல்லமுத்துவின் கரிசனத்தில் உரிமையும் கலந்திருந்தது.

அதற்குள் பட்டுப்பாவடையும் சட்டை யையும் கையில் ஏந்திக் கொண்டு அருகில் வந்தாள் நித்யா. "பாட்டீ.. போட்டு விடேன்.." என்றவள் பாட்டியின் கண்கள் கசிந்தருப்பதை கண்டதும் சற்றே தயங்கினாள்.

"அவங்க ஊர்லேர்ந்து யார் பேசுனாலும் பாட்டி அழுதுடறாங்க.. ஏன் மம்மி..?" சுடிதாரின் துப்பட்டாவை தொங்க விடலாமா.. மடித்து போடலாமா என்று சிந்தித்த தீபா மகளின் பேச்சை கேட்டு முன்கூடத்திற்கு வந்தாள்.

"என்னண்ணீ.. பேச்சே காணாம்.. சொன்னது காதுல வுளுந்துச்சில்ல.. நீ கௌம்பி தயாரா இரு.. நாளக்கு வளக்காப்பு முடிஞ்சு புவனேசுவரிய கூட்டியார ஏற்கனவே காரு பேசி வச்சுருக்கு.. ராசாவும் வருவான்.. நீ மொதல்ல ஊருவந்து சேரு..நாளைக்கு மகளும் மருமவனும் வர்றப்படி வரட்டும்.."

பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு போக வேண்டுமென்று முரளி சொன்னது நினைவிற்கு வந்தது அவளுக்கு. "அதுங்க வந்துச்சுங்கன்னா தான் அவங்க கார்லய வந்துருப்பனேப்பா.. ஆபிசுல முக்கியமான வேலையாம் பாப்பாவுக்கு.. கட்டாயம் போவுணும்னு சொன்னா.. பேத்தி பள்ளிக்கூடத்துல ஆண்டுவிழாவாம்ப்பா.. அவ கூட ரெண்டு மூணு பிரைஸ் வாங்குறா.. அவளை மாப்ளைதான் அழைச்சுட்டு போறாரு.. அதான் அடுத்த வாரம் தங்கச்சிய பாக்க போவுலாம்ன்னுச்சு பாப்பா.." தயங்கி தயங்கி பேசினாள் கனகு.

"சாரியண்ணீ...அதுங்கவர்றப்பவரட்டும்.. நீ வந்துடு.. சுருக்கா காரு வந்துடும்.. வந்து சேரு மொதல்ல.." என்றான் முடிவாக.

"இல்லப்பா.. முதுவு வலி குனிய நிமிர முடியில.. இப்ப கூட வெறுந்தரையில மல்லாக்கா தான் படுத்துருக்கன்.. தலைக்கு தலைகாணி கூட வைக்க முடியில.. நீ புவனேச பாத்து பதனமா கூட்டியாந்துடு.. நம்ப வீட்ல வந்து பாத்துக்கறன்.. புள்ளத்தாய்ச்சி புள்ள.. நா செய்ற பால்கொளுக்கட்டைன்னா உசிர வுடுவா.. செஞ்சு எடுத்தாரன்.. சம்பந்தசனங்க மனங்கோணாமா நீ நல்லப்படியா தேவைய முடிப்பா..சாரிப்பா..நான் போன வச்சுடறன்.."

"கடவுளே.. அடுத்த வாரம் இதுங்க ரெண்டுக்கும் வேறெந்த வேலையும் வர கூடாதே.." மனம் மௌனமாக பிரார்த்தித்துக் கொண்டது.

"நித்திக்குட்டீ.. வாம்மா.. பாட்டி பாவாடை கட்டி வுடறன்.." பேத்தியை அருகே அழைத்தாள் கனகு. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்ணிய பனுவல்

## சங்க இலக்கிய உரைகள் (பழந்தமிழ்க் கவிதையின் இடைக்கால வாசிப்பு) என்கிற சதீஷ் அவர்களின் நூலை முன்வைத்து...

தொன்மையான சமூகம் அனைத்திற்கும் தொன்மையென்கிற அடையாளங்களைத் தேடுவதும், பேணுவதும் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாகிறது. இக்கடமை உணர்வு கொண்ட வினைப்பாடுகள்தாம் அச்சமூகத்தின் வாழ்வைப் புதுப்பிக்கவும் நீட்டிக்கவும் இயலும். நமது தொகையாக்க மரபை உற்றுநோக்கும் எவருக்கும் இவ்வுண்மை தெற்றென விளங்கும்.

நமது பழந்தமிழ்ச் செய்யுள் உருவாக்கத்திலும் தொகையாக்கத்திலும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பேணுகையும், அதனைத் தொடர்ந்து ஒருங்கிணைக்கப்பட்ட அடையாள உருவாக்கமும் இணைத்தே பதிவாக்கப்பட்டுள்ளது. இங்கு ஒருங்கிணைக்கப்பட்ட அடையாள உருவாக்கம் என்பது, தமிழ்நிலம் அல்லாத பிற மொழி நில, மத, அரசு உள்ளிட்ட நிறுவனங்களின் அடையாளங்களோடு இணைந்த தமிழ் அடையாளங்கள்தாம். இந்த அடையாள உருவாக்கத்தின் மூலம் தமிழியம் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் அவ்வக்கால கல்வி நிறுவனங்களுக்கு ஏதுவாகிறது. பழந்தமிழ் மரபின் தனித்த அடையாளங்களின்மீது தாக்குதல் நிகழ்ந்தபோதெல்லாம் அரசு நிறுவனங்களும் மத நிறுவனங்களும் தமிழ் மரபின்மீது ஆர்வம்கொண்ட புலவர் தொகுதியும் பேணிவந்துள்ளனர். இத்தகைய பேணுகை முயற்சியில் ஈடுபட்டவர்களுள் உரையாசிரியர்களின் பங்கு மிகவும் போற்றத்தக்கது.

இந்தப் பின்புலத்தில் வைத்துதான் சதீஷின் சங்க இலக்கிய உரைகள் என்னும் பனுவல்குறித்தபேச்சு அல்லது அதுதொடர்பான சிந்தனை நமக்குத் தேவைப்படுகிறது. நவீன அறிவாக்கமரபின் பின்புலத்திலிருந்து கொண்டு பழந்தமிழ்க் கவிதைமீது நிகழ்த்தப்பட்டுள்ள இவ்வாய்வு,இடைக்கால உரையாசிரியர்களின் இடத்தினை அறிய நன்கு உதவுகிறது.கடந்தகால பனுவலுக்கு நிகழ்கால அர்த்தத்தைக் கற்பிப்பதின் மூலமே எந்த ஒரு சமூகமும் தனது மரபை உறுதி செய்துகொள்வதோடு மட்டுமல்லாமல் நீட்டித்துக்கொள்ளவும் செய்கிறது. இத்தகைய நிலைமைகள் உணரப்பட்டதின் அடிப்படையில், இப்பனுவலாக்கம் போற்றத்தக்கது. உரை உருவாக்கத்திற்கான அடிப்படையிலிருந்து இப்பனுவல் தோற்றுவாய்கொள்வதிலிருந்து, ஆய்வாளரின் நன்குதிட்டமிடப்பட்டுள்ள சிந்தனைத்தன்மை புலனாகிறது எனலாம். நச்சினார்க்கினியர், பரிமேலழகர் உள்ளிட்ட மிகுந்த புலமைத்துவம் கொண்ட அடர்த்தியான செல்நெறி கொண்ட உரைகளை மட்டுமல்லாமல் கருத்துரை மற்றும் குறிப்புரைகளாகவும் விளங்கும் பழைய பெயர் அறியப்படாத உரைகளையும் தேர்ந்தெடுத்து நன்குகட்டமைக்கப்பட்டுள்ளது இப்பனுவல். தமிழிய வரலாற்றில் திருமுருகாற்றுப் படையின் இடத்தை மிகவும் சிக்கலுக்குரியதாக மாற்றியதில் தொகுப்பாளர்கள் அதனை தொடர்ந்து உரையாளர்கள் ஆகியோரின் பங்கு இன்றியமையாததாகிறது. இதனை கருத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுதான்திருமுருகாற்றுப்படையின்ஐந்து உரைகள் தேர்ந்தடுக்கப்பட்டுள்ளதாகக் கருத முடிகிறது. ஆனாலும் திருக்குறளுக்கு உரை எழுதியவர்களே திருமுருகாற்றுப்படைக்கும் உரை எழுதியுள்ளனர். அறம்,பொருள்,இன்பம் ஆகியவற்றை விளக்கத் திருக்குறளுக்கும், வீடு என்பதை உணர்த்த திருமுருகாற்றுப் படைக்கும் உரை எழுதப்பட்டுள்ளது. என்கிற தகவலை பதிவு செய்திருப்பதின் மூலம் இப் பனுவலில் ஒருங்கிணைந்த தமிழ் அறிவு மரபை விளக்குவதாக தோன்றுகிறது. இந்த ஒருங்கிணைக்கப்பட்ட மரபை நூலாசிரியர் தனித்து விளக்கவில்லையென்றாலும், அதற் கான அழுத்தம் இப்பனுவலில் ஆங்காங்கே தென்படுவது தற்செயலாகப்படுகிறது.

இங்கு இப்பனுவல் குறித்த உரை யாடலைத் தொடர்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என கருதி பனுவல் அமைப்பைத் தொகுத்துக்கொள்வது இன்றியமையாத தாகிறது. சங்க இலக்கிய உரைகள் ஐந்து இயல் களாகப் பகுக்கப்பட்டுள்ளன. உரை வரலாறு, நச்சி னார்க்கினியரின் உரை, பரிமேலழகர் உரை,திருமுருகாற்றுப்படையின் ஐந்துரைகள், ஐங்குறுநூறு அகநாநூறு உள்ளிட்ட வைக்கான உரைகள், மற்றும் மேற்கோள் உரைகள் என இடைக்காலப் புலமைத்துவத்தின் புலப்பாட்டுநெறியைத் தொகுத்து விளக்க முயற்சிக்கிறது இப்பனுவல். பழந்தமிழ்ச் செய்யுள்கள் மூடுண்ட அமைப் பைக் கொண்டவை எனினும் பல்பொருள் கோடலுக்கான வாய்ப்பினை வைத்துக் கொண்டுள்ளன. "மாட்டு" என்னும் உத் தியைப் பயன்படுத்தி செழுமையான தனது புலமைத்துவத்தால் தனித் தன்மையுடைய உரைகாரராக நச்சினார்க்கினியர் இனங் காட்டப்பட்டுள்ளார். பரிமேலழகர் உள்ளிட் டோர் தம் காலத்திய இடைக்கால அறிவு உருவாக்கத்தின் சார்பில் இருந்துகொண்டு பழந்தமிழ் மரபுக்குப் பொருளுரைக்க, நச்சினார்க்கினியரோ தொல்காப்பியத்தைக் கோட்பாட்டாக்கமாக வைத்துக் கொண்டு பழந்தமிழ்ச் செய்யுள்களுக்கு உரை செய்துள்ள தன்மை விளக்கப்பட்டுள்ளது. ஒரு பனுவலுக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கோடலை நிகழ்த்தமுடியும் என்று தொழிற்பட்ட நச்சினார்க்கினியரை, நவீனகாலத்தில் சிந்தனையாளராக அறியப்பட்ட மறைமலை (மறைமலை

**நச்சினார்க்கினியர், பரிமேலழகர் உள்ளிட்ட மிகுந்த புலமைத்துவம் கொண்ட அடர்த்தியான செல்நெறி கொண்ட உரைகளை மட்டுமல்லாமல் கருத்துரை மற்றும் குறிப்புரைகளாகவும் விளங்கும் பழைய பெயர் அறியப்படாத உரைகளையும் தேர்ந்தெடுத்து நன்கு கட்டமைக்கப்பட்டுள்ளது இப்பனுவல்.**

அடிகளார்) உள்ளிட்டோர் விமரிசித்ததை இணைத்துக்காட்டியிருப்பதின் மூலம், தமிழின் தொல்மரபு அடையாளங்களை அறியாத மரபுவாதிகளும் இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல முயற்சிக்கிறது இப்பனுவல். திருக்குறளுக்கு உரை எழுதும் பரிமேலழகர், போசராசனின் ஆக்கத்தோடு அதாவது சமஸ்கிருத ஆக்கத்தோடு இணைக்கும் முயற்சியைச் சுட்டுகிறார். பெயர் அறியப்படாத பழைய உரைகாரர் ஒருவர், திருமுருகாற்றுப்படையில் வரும் "தலை தந்து" என்பதற்கு இருக்கஇடம்தந்துஎன்றபொருளை விளக்குவதையும் குறிப்பிடுகிறார் அ. சதீஷ்.

உரையாசிரியர்கள் அனைவரும் தாம் எடுத்துக் கொள்ளும் பனுவலுக்குரிய புலமை மரபை நன்கு அறிந்த நிலையில்தான் உரை வரைகின்றனர். ஐங்குறுநூற்று உரைகாரர் ஒருவர் தேவைப்படும் இடத்தில் விளக்கிக் காட்டுவதும் மிக அரிய சொல்லுக்கு மட்டும் அருஞ்சொற்பொருள் தருவதுமான தன்மையும் சுட்டிக்காட்டப்படுகிறது. "துணைகார் கொன்றை" என்கிற பாடலில் வரும் "சிதார்" என்ற சொல்லுக்குச் "சிந்துதல்" என்ற பொருளை மட்டும் எழுதிச் செல்லும் தன்மையைஇன்னும்விளக்கியிருக்கவேண்டும்.

மேற்காட்டப்பட்டுள்ள உரை "குறிப் புரை" எனலாம். ஏனெனில், உரையாசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இக்காலகட்டத்தில், "பழைய" என்கிற அடையாளத்தை மறுப்பதற்கான வரலாற்றுத் தேவையென்ன என்பது புரியவில்லை. பழைய உரையைப் பெயர் அறியப்படாத உரை என்பதைவிடப் "பெயர் அறியப்படாத பழைய உரை" என்பதே மிக பொருத்தமானதாகப படுகிறது.**

தங்கள் நிறுவனப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களாக இருந்தவர்கள் என்கிற அடிப்படையில், மாணவர்களுக்கு பாடம் சொல்லுவதற்குத் தயாரிக்கப்பட்ட குறிப்புரை போல இது தெரிகிறது. உ.வே.சா. அவர்களின் பதிப்பு முயற்சி மிகுந்த வெளிப்படைத் தன்மை கொண்டிருப்பதை விளக்குகிறது இப்பனுவல். மயிலம் சிவசுப்பிரமணியத்தின் அகநாநூற்றுப்பதிப்பில் இத்தகைய போக்கு காணப்படவில்லை என்று இணைத்துக் காட்டுகிறார் சதீஷ். பழைய உரை என்பதைப் "பெயர் அறியப்படாத உரை" என பதிப்பிக்க வேண்டும் என்கிறது இப்பனுவல். உ.வே.சா தாம் எழுதிய உரையைப் புதிய உரையெனக் கருதிப் பெயர் அறியப்படாத உரைகளைப் பழைய உரை என்று பதிப்பித்தார். இது ஆய்வுநோக்கில் மிகப் பொருத்தம் உடையதாக இருந்தாலும் "பழைய" என்பது தொல்சமூகத்தின் பழங்காலத்திய அறிவுச் சொல்லாடல் என்பதை ஏனோ கவனிக்க தவறுகிறது இப்பனுவல். அனைத்துமொழி சமூகங்களும் தங்களது தொன்மை என்கிற அடையாளங்களைத் தேடிக்கொண்டிருக்கிற இக்காலகட்டத்தில், "பழைய" என்கிற அடையாளத்தை மறுப்பதற்கான வரலாற்றுத் தேவையென்ன என்பது புரியவில்லை. பழைய உரையைப் பெயர் அறியப்படாத உரை என்பதைவிடப் "பெயர் அறியப்படாத பழைய உரை" என்பதே மிக பொருத்தமானதாகப படுகிறது. அகநானூற்றில் வரும் 59ஆம் பாடலில் இடம்பெறும் பழமரபுக்கதையை விளக்கும் உரையாசிரியர் ஆக, ஆக என்று பயன்படுத்துவது வாய்மொழி மரபை அடிப்படையாகக்கொண்டதாகும் எனக்கூறி, இதன்மூலம் உரை வாய்மொழி மரபிலிருந்து தோன்றியதாகும் என்கிறார். மாணாக் கருக்குப் பாடம் சொல்லும் முறையிலிருந்து தோற்றுவிக்கப்பட்டதாகவும், மேலும் விவரிக்க வாய்ப்புள்ளது. இப்பனுவல் உரையாசிரியர்களின் புலமைத்துவத்தை விளக்குவதுடன், உரைகாரர்களின் நிறு வனச்சார்பையும் விளக்க முயற்சிக்கிறது. அகநானூற்று பெயர் அறியப்படாத பழைய உரைககாரரைச் சைவர் என்றும், புறநானூற்று பெயர் அறியப்படாத பழைய உரைகாரரை அவைதீக மரபினர் என்றும் இனங்காட்டுவது மனங்கொள்ளத்தக்கது. கி.பி. 9ஆம் நூற்றாண்டு தொடங்கி 16ஆம் நூற்றாண்டுவரை தமிழில் உரைகாலம் என்று சொன்னாலும், கி.பி. 11 முதல் 14வரை உள்ள காலத்தில் தோன்றிய உரைகள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதற்கான சிறப்புக் காரணத்தைச் சதிஷ் தனித்து விளக்கவில்லை என்றாலும், சைவம் வைணவம் என்ற அடையாளங்களைத் திரட்டியபடியே "வைதீகம்" என்னும் மரபில் ஒருங்கிணைந்தும் அவைதீக மரபை எதிர்கொண்டனர் என்கிற தகவல் சிந்தனைப்போரை அறிய உதவுவதோடு மட்டும் அல்லாமல், இப்போரே மேற்கண்ட காலகட்டத்தில் உச்சம் என்பதால், இதுவே தெரிவுக்கான சிறப்பு காரணமாக அறிய போகிற போக்கில் பதிவு செய்கிறது இப்பனுவல். ஔவை. சு.துரைசாமியும் மு.அருணாசலமும் சம்மந்தர் காலத்தில் நடைபெற்ற "கழுவேற்றுதல்" உள்ளிட்ட இப்போரின் ஒருபகுதியைப் புனிதபோர் என்று விவரிக்கின்றனர். இத்தகவலையும் மனத்தில் கொண்டிருந்தால், இப்போரின் இன்னொரு வடிவம் பற்றிய பதிவு உரைக்குள் எங்கேனும் தென்படுகிறதா என்பதைக் கண்டு விளக்கியிருக்க முடியும்.

இரோலன்பார்த்தின் பனுவல் கோட்பாட்டை உரையோடு இணைத்துக் காட்டியிருப்பது போற்றத்தக்கது. பழந்தமிழ்ப் பனுவலுக்கான பல வாயில்களைத் திறந்துவைத்ததில் உரையாசிரியர்களின் பங்கு குறிப்பிடதக்கது என்பதைக் கண்டு விளக்குகிறதுஇப்பனுவல். இந்த அடிப்படையில் திருமுருகாற்றுப்படைக்கான உரைகளைத் தொகுத்துக்கொண்டு வீடுபேறு பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் பனுவலுக்குள் இல்லையென்றாலும் அர்த்தம் பனுவலுக்குள் இல்லையென்றாலும் அர்த்தப்படுத்துவதை விளக்குகிறார். ஒரே பாடலுக்குள் இரண்டுவிதமான பொருளுரைகளை எழுதிச் செல்லும் போக்கை இவ்வகையில் வைத்து எண்ணுதல் வேண்டும். எனினும், இக்கோட்பாட்டை அன்றே உரையாசிரியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர் என்ற கூற்று கிளர்ச்சியூட்டக்கூடியதே தவிர, உண்மைக்குப் பொருந்தாது! உரையாசிரியர்கள் பலதரபட்ட பொருள்கோடல் முறைகளில் பல்வேறு அர்த்தங்களை உருவாக்கியது தற்செயலானது போலவே, அவ்வர்த்தங்கள் தற்காலிகமானவை என்பதுவும் தற்செயலானதே! தொல்காப்பிய இலக்கண முறையை மட்டும் வைத்துக்கொண்டு சங்க இலக்கியம் தொகையாக்கம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறும் இராஜ்கௌதமனின் கூற்றை மறுத்துத் தொல்காப்பியம் மட்டும் அல்லாது பலமரபுகளின் அடிப்படையில் தொகையாக்கம் செய்யப்பட்டுள்ளதைப் பதிவு செய்துள்ளது இப்பனுவல். குறிப்புரைகளையும் மேற்கோள் உரைகளையும் கவனப்படுத்தியிருப்பது, ஆய்வாளரின் நுட்பமான தேடலை காட்டுகிறது. இது கல்வி நிறுவனம் சார்ந்த ஆய்வு என்பதால், வரலாற்றுத் தேவைக்குரிய அடையாளத் திரட்சியைகாத்தல்போன்றகருத்துநிலையைச் சாராதிருப்பதில் வியப்பெதுவும் இல்லை. எனினும், இது நூலாக வருகிறபோதாவது பனு வலுக்குள் சிதறடிக்கப்பட்டுள்ள அடையாளப்பேணுகையை ஒருங்கு திரட்டியிருந்தால் இன்றியமையாத கொள்கையாக மாறியிருக்கும். பழந்தமிழ் மரபை பேணவந்த உரையாசிரியர்கள் வடமொழியையும், வடமொழிமரபு சார்ந்த கருத்துநிலையும் மிகுதியாகப்பயன்படுத்துகின்றனர். இத்தன்மை குறித்துச் சதீஷின் தரப்பு என்ன என்பது புலப்படாமல் போகிறது. இங்கு வடமொழி மரபு என்பது (சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் உள்ளிட்ட அத்திசைவழி மரபுகளைதான்.) ஒருங்கிணைந்த, பழைய, பலமரபுகளைக் கொண்டதுதான் இடைக்கால உரைமரபு என்பதை என் போன்ற எளிய வாசகனும் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக, நன்கு இப்பனுவல் நன்கு தொகுக்கப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

●

## காக்கையின் கோரிக்கை




### காக்கைச் சிறகினிலே இதழுக்கு படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு:

படைப்பாளிகள் பக்க வரையறையைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்க. உங்கள் படைப்பு ஐந்து பக்கங்களுக்கு மிகாமல், (ஏறக்குறைய 750 வார்த்தைகள்) கணினி அச்சில் இருத்தல் அவசியம்.

படைப்புகளை எழுத்துப்பிரதியாக அனுப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். யுனிகோட் எனப்படும் ஒருங்குறி எழுத்துருவில் கணினி அச்சு செய்து அனுப்பவும். படைப்புகளை அனுப்புவோர் தங்களுக்கான பிரதியை வைத்துக் கொள்ளவும். வெளியிடுவதற்குத் தேர்வு பெறாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

உங்கள் படைப்பு வெளியிடுவதற்குத் தேர்வு பெற்றதா, இல்லையா என்பது குறித்து, படைப்பை அனுப்பிய ஒரு மாத காலத்திற்குப் பிறகு, தொலைபேசியில் (9841457503) தொடர்பு கொண்டு கேட்டறியலாம்.

கவிதை, சிறுகதை, கட்டுரை என உங்கள் படைப்பு எதுவாயிருப்பினும், நீங்களே ஓரிரு முறை படித்துப் பார்த்து, ஒற்று உள்பட மெய்ப்புத் திருத்தி அனுப்புமாறு கோருகிறோம்.

படைப்பை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆசிரியர் குழுவின் இறுதி முடிவுக்கு உட்பட்டது என்ற இதழியல் உலகின் மரபையும் ஜனநாயகத்தையும் மதித்துப் போற்றும் பண்பாடு நிறைந்தவர்கள் படைப்பாளிகள் என்று காக்கை முழுமையாக நம்பிக்கை கொள்கிறது.

இதழ் குறித்த தங்களது கருத்து அல்லது விமர்சனத்தை ரத்தினச் சுருக்கமாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். 60 முதல் 100 வார்த்தைகளுக்குள் இருத்தல் நலம். அதிகமானவர்களின் கருத்துகளை வெளியிடுவதற்கு இது உதவியாக அமையும்.

பிரபல சிற்றிதழ்கள் போல, விரிந்த கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளத்துடன் இயங்கும் நிலையில் காக்கை இல்லை. வெகுசில தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியில் இந்த இதழ் வெளிவருகிறது. முன்னும் பின்னும் அறிந்து ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை அளிக்குமாறு படைப்பாளிகளையும் வாசகர்களையும் காக்கை நிமிர்ந்து கோருகிறது.

– ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்துவரக் கரைந்த காக்கை


நெடும்பகலிரவு கடந்துஞ்
இலைகள் உதிர்த்து நிற்கும் புன்னை மரஞ்
ஒடிந்துதொங்கும் கிளையின் நுனியில்
அமர்ந்து கரைந்தது குறுந்தொகைகுடிலின்
210வது கதவிலக்க காக்கை
தலைவன் வருகையை நினைந்து
தொண்டன் விருந்து சமைத்தான்
தன் ஒரு மாதத்திற்கான குடும்பச் செலவில்
விரல் கரும்புள்ளியால் வாழ்வு இருண்டவன்
சோற்றுக்கையைக் கூட காட்டவில்லை காக்கையிடம்

கொங்கை அளவுகுறித்து வரிவசூலித்த
ஆட்சிதான் பொற்காலம் எங்களுக்கு
ரப்பர் புட்டியில் பால்பருகி
ஈரம் வீரம் தொலைத்து
வளர்க்கப்படும் மழலை மனம்
இறுகி கெட்டிபட்டுப் போகின்றது
கொங்கையை பெரிதாக்கும்
விளம்பரத்தை ஏளனமாய் பார்த்தது
புறநானூற்று காக்கை பாடினியார்
காவியத்தலைவி வீர கொங்கைகள்

பதிற்றுப்பத்து ஆறாம்பத்து
ஒன்பது துலாம் பொன்னும்
நூறாயிரம் பொற்காசுகளும் பெற்றுத்தந்ததாம் புலவருக்கு
ஒரு குத்துப்பாட்டில் அனைத்தையும்
சம்பாதித்து விட்டார் தற்கால புலவர்
வாங்கி சிவந்த கையை கொடுத்து சிவந்ததாகவும்
வயிற்றில் அடித்து வயிறு பெருத்தவர்களை...
வஞ்சகமற்றவர் என்றும்...
மெய்த்தோல் போர்த்தியிருக்கும் பொய்களை உலவவிட்டும்
வாழச் சொல்கிறார்கள் பொழுதுகளை பிடுங்கிக்கொண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாமிகளின் கதை

என் சாமிக்கென
ஏதுமில்லை
கூர் மழுங்கிய அரிவாள்
பெரிய மீசை
கோரப் பற்கள்
சிவந்த கண்கள்
சடாமுடி
சாயம்போன
பெருவயிறு

சாராயம் கிடாவெட்டு
கோழி ரத்தம்
சந்நதம் வந்த
பூசாரியாட்டம்

அதற்கேற்பச்
சலங்கையொலி
ஆகாயம் தொடக்
குதிக்கும் சனத்திரள்
அந்தப் பெருவெளியில்
அருவமாய் உலவும்
கருப்புசாமி.

என்னவாயிற்று
அதற்கெல்லாம்
துதிக்கும் மொழி
புரிந்ததாகப்
போலிப் பாவனை

என் சோறு
என் கலை
என் வாழ்க்கை
எல்லாமே
காணாமல் போயின
பாவம்
சாமி என் செய்யும்
கூச்சலிடுவது தவிர

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடலீ திறப்பு

ஆசிரியர் திரு.வி.முத்தையா அவர்களுக்கு, வணக்கம்.

ஏப்ரல் 2014 இதழ் இன்று கிடைக்கப்பெற்றேன்.

'தேர்தல் பொம்மலாட்டம்'தலையங்கம், ஏகன் எழுதிய 'அணி அரசியல் இனி' இரா.எட்வின் எழுதிய 'இப்போதும் காலம் கடந்துவிடவில்லை' ஆகிய அரசியல் கட்டுரைகள் பொருத்தமான நேரத்தில் தமிழ்நெஞ்சங்களில் சில அதிர்வுகளை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.இவற்றை எனது நண்பர்களிடம் கொண்டுசெல்லவும், அவர்களை 'காக்கைச்சிறகினிலே' சந்தாதாரர்களாக்கவும் விரும்புகிறேன். எனது முகவரிக்கு உடனடியாக 10 இதழ்களையும், சந்தாசேர்ப்புப் படிவங்களையும் அனுப்பி உதவுங்கள். 10 இதழ்களுக்கான தொகையையும், சந்தாக்களையும் விரைவில் அனுப்புகிறேன்.

*- தோழமையுடன்,*
*செ.நடேசன்,*

ஏப்ரல் 2014 இதழில் அணி அரசியலை அலசிய பாணி பாராட்டத்தக்கது. பாஜக எனப்படும் மதவாதக் கட்சியைத் தமிழகத்தில் முதல்முறையாகத் தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடும் கொடுமை காணச் சகிக்கவில்லை. இடதுசாரிகள் இடறினோம் எழுந்தோம் முன்னேறினோம் என்பதை மெய்ப்பிப்பார்களா? இதழின் சிறுகதைகள் இரண்டும் உருவாக்கிய தாக்கம் மிக அதிகம்.

*- க.த.அ.கலைவாணன், வேலூர்*

காக்கை சித்திரை இதழ் மிகச் சிறப்பாக இருந்தது. க.திருநாவுக்கரசு எடைபோட்ட 'வெள்ளையானை' பல உண்மைகளை துல்லியமாகக் காட்டி நிற்கிறது. ஜெயமோகனின் எழுதுகோலில் மையோடு விசம் கலந்து எழுத்தால் பல மனங்களை மெதுவாகக் கொலை செய்வது தெரிகிறது. ஆனாலும் ஜெயமோகன் பற்றிய பதிவுகளை காக்கை தவிர்ப்பதே சாலச்சிறந்தது என்பது என் எண்ணம். ஏனெனில் இத்தகையோர் கவனிக்காமல் விடப்பட்டாலே காணாமல் போவார். எங்கள் ஈழத்து அப்துல் ஹமீதுக்குள் ஒரு சிறந்த பேச்சாளன் மறைந்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஜோடி குரூஸ் எழுதும் தொடரில் நெய்தல் மண்வாசனை நெஞ்சுவரை தொடுகின்றது. மேஜர் அப்பா சிறுகதை முதுமைக்கு இனிமை தருவது மழலை என்ற செய்தியோடு மகன்கள் மருமக்கள் கூட அவரின் நையாண்டியை சுவைப்பதும் மனக்கோணல் படாததும் மேஜர் அப்பாவின் சிறப்பு. கவிஞர் இன்குலாப் 'நினைவில் வரவில்லை' என்று ஆதங்கப்பட்டுக் கொண்டே தமிழ்நாட்டு மக்கள் மறந்துவிட்ட பல செய்திகளை மறக்காதே மடத்தமிழா என தட்டி எழுப்புகிறார்.

*அன்புடன்*
*நாச்சிமார் கோயிலடி இராஜன்.*
*(தம்பையா இராசு)*

ஏப்ரல் 2014, 'காக்கைச் சிறகினிலே' இதழ் வாசித்தேன். "மாற்று மனிதரை மட்டுமே மக்கள் யோசிக்க வேண்டும். மாற்று அரசியலை மக்கள் நாடிவிடக் கூடாது என்கிற கவனம்தான் இவர்களுக்கு" என்கிற இரா.எட்வினின் வரிகள், அனைத்து அரசியல்வாதிகளுக்கும் பொருந்திப் போகிற ஒன்றுதான். மாத்திரமல்ல, மாற்று அரசியலை முன்னெடுப்பவர்களை, கூசாமல் "தீவிரவாதிகள்" என அடையாளப்படுத்தி, அப்புறப்படுத்தவோ, அழிக்கவோ செய்கிறார்கள் என்கிற கசப்பான உண்மையையும் வேதனையுடன் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

"குரல் வழி ஊடகத்தில் தமிழ்" - ஓர் தமிழ் உணர்வாளரின் ஓர்மையிலிருந்து வெளிப்பட்ட சிறப்பான கட்டுரை. அதில் சொல்லப்பட்ட கருத்துக்கள் யாவும், பி.எச். அப்துல் ஹமீட் - இன் குரல் போன்றே, தெளிவாகவும், செறிவாகவும் நம்மை ஈர்த்தன. "வெளி உலகில் தாய் பேசும் குரலையும், இசை ஒலிகளையும்கூட, கர்ப்பத்துக்குள்ளிருந்து சிசுவால் கேட்க முடிகிறது என ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர்" என்கிற வரிகளைப் படித்தபோது, தாயின் கருவறையில் இருக்கும்போதே, 'சக்கர வியூகத்தை' எப்படி வகுப்பது என்பது வரை, அபிமன்யு, அவனது தாயிடம், தந்தை அர்ஜுனன் விளக்கிக் கொண்டிருப்பதைக் கேட்டு அறிந்திருந்தான் என்கிற மகாபாரத காட்சி கூட, கதையாக அல்லாமல், அறிவியல் சார்ந்த நிஜமாக இருந்திருக்கக்கூடும் என்றே நம்பத் தோன்றுகிறது.

க.பஞ்சாங்கத்தின், 'ஊடகமும் தமிழ்மொழியும்' மற்றொரு காத்திரமான கட்டுரை. "விடுதலையான வாழ்வுதான், விடுதலையான மொழி அடையாளத்தையும் பெற்றுத்தரும்." இணையம், கணினி போன்ற தவிர்க்க இயலாத ஊடகக் கருவிகளும், அவற்றிற்கான பயன்பாட்டு மொழிகளும், மக்களின் அன்றாட வாழ்க்கை முறையாக மாறிவிட்ட சூழலில், தமிழ் மொழியின் எதிர்காலப் போக்கினை எடுத்துரைக்கும் கருத்துக்கள் நிறைந்த கட்டுரை எனலாம்.

*- சு.இராமசுப்பிரமணியன். தோவானை*



Owned and published by V.Muthaiah from 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084 and Printed by H.Dhanasekar at Sekar Offset Printers, New No. 59, Old No. 158/1, Big Street, Chepauk, Chennai - 600 005. Editor : V.Muthaiah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.gnanalaya.org

# ஞானாலயா
## ஆய்வு நூலகம்

தமிழ்ப் பதிப்புலகின் ஆவணக் காப்பகம்



நிறுவனர்கள்

**பா.கிருஷ்ணமூர்த்தி**
**டோரதி கிருஷ்ணமூர்த்தி**



**ஆய்வாளர்கள்**
**பதிப்பாளர்கள்**
**ஆய்வு மாணவர்கள்**
**நூலாசிரியர்கள்**
**படைப்பாளிகள்**
**கலைஞர்கள்**
**கலை விமர்சகர்கள்**

**என பல்வேறு அறிவுத் தரப்பினரும்**
**பயன்கொள்ளும் அறிவுச்சோலை**

ஈழத் தமிழ் நூல்களுக்கென தனிப் பிரிவு

**ஈழத் தமிழர்கள் தங்கள் நூல்களை அனுப்பி வைக்கலாம்**

## அறிவுச் சோலை வளம்பெற
## ஆர்வலர்களின் உதவியை நாடி நிற்கிறது

ஞானாலயா, 6, பழனியப்பா நகர், திருக்கோகர்ணம் அஞ்சல் நிலையம்,
புதுக்கோட்டை – 622 002. தொலைபேசி : 04322-221059

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Registrar fo Newspapers for India No. TNTAM/2012/43921
Postal Registration No. TN/CCN/588/2013-2015 ISSN 2348 - 4160 Date of Publication : 25.4.2014

GK LEADERS
Institute for IAS, IPS, IFS & TNPSC Exams



Announces

# IAS 2014

## PRELIMINARY

POLITY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
ECONOMY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
HISTORY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
GEOGRAPHY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
SCIENCE & TECH AND ENVIRONMENT
INCLUDING CURRENT AFFAIRS ₹ 2000

## MAINS

PAPER-I Essay: ₹ 3000
PAPER-II General Studies- I: Indian Heritage and Culture, History and Geography of the World and Society. ₹ 3000
PAPER-III General Studies- II: Governance, Constitution, Polity, Social Justice and International relations. ₹ 3000
PAPER-IV General Studies-III: Technology, Economic Development, Bio diversity, Environment, Security and Disaster Management. ₹ 3000
PAPER-V General Studies- IV: Ethics, Integrity, and Aptitude. ₹ 3000

3032,'Z'BLOCK, 3RD STREET, 13TH MAIN ROAD, ANNA NAGAR WEST, CHENNAI-40
(ADJACENT TO NATESAN INSTITUTE OF CO-OPERATIVA MANAGEMENT)
CONTACT:044-26224044,9600033300 web:www.gkleadersiasips.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org